!! திவ்ய வருஷம் 2041 KUDI ARASU. தனிப் பிரதி விலை {உள் நாடு 1 அணா வெளிநாடு 1½ அணா

குடி அரசு

வருட சந்தா தபால் செலவு ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1—12
தனி காப்பிக்கு ,, ... ரூ 4—0

வாரப்பதிப்பு.

ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங்குலம் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

நாலே 4 | ஈரோடு விபவ ஐப்பசி மீ 12உ (28—10—28) ஞாயிற்றுக்கிழமை. | குலர் 27

இப்பொழுதுதான் வந்தது!! புதியசரக்குகள்!!

உறுதியான கூண்டி கறுப்புநூல்

பெல்ட்டிங்குகள்.

கீழ்கண்ட சரசமான விலைக்கு விற்கப்படும்.

3/16 இன்சு கனம் உள்ளது :—
2 இன்சு அகலம் ரூ. 0—7—0 ஓர் அடி.
3 ,, ,, ,, 0—10—6 ,,
4 ,, ,, ,, 0—14—0 ,,

1/4 இன்சு கனம் உள்ளது :—
4 இன்சு அகலம் ரூ. 1—2—6 ஓர் அடி.
5 ,, ,, ,, 1—7—6 ,,
6 ,, ,, ,, 1—12—0 ,,

26 கேஜ் கலாய் இரும்புத்தகடுகள்
அடியிற்கண்ட விலைக்கு விற்கப்படும் :—

6 அடி நீளம் 33 இன்சு அகலம் ரூ. 2—4—0 ஒரு தகடு.
7 ,, ,, ,, 2—8—0 ,,
8 ,, ,, ,, 3—0—0 ,,
9 ,, ,, ,, 3—6—0 ,,
10 ,, ,, ,, 3—12—0 ,,

MASSEY & Co LTD
ENGINEERS

மாஸி அண்டு கம்பேனி (லிமிடெட்)
திருச்சிரோடு, ரெட்பீல்ட்ஸ் போஸ்ட், கோயமுத்தூர்.

போட்டோ ஆல்பம்.

நேயர்களே! இந்த ஆல்பத்தில் பன்னிரண்டு விதமான ப்ரெஞ்சு லேடிகளின் படுக்கையறைப் போட்டோக்கள் பார்க்க வெகு சுத்தமாக வைக்கப்பெற்றிருக்கின்றன. பாரிஸ் மாதரின் லீலா விநோதமும் ஒப்புயர் வற்ற ரூபலாவண்யமும் பலதினுசு சாயல்களில் கண்டு ஆனந்திக்கலாம். ஒரு ஆல்பம் தருவித்தவர் உடனே திரும்ப ஆறு ஆல்பங்கள் அனுப்புங்கள் எனக் கடிதம் எழுதியிருக்கள். நீங்கள் உடனே மூன்றுங்கள். விலை ரூ 2-12-0

தி. கிருஷ்ண ஏஜன்சி, தபால் பெட்டி 119 மதராஸ்.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

இனம்! இனம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன் பேனா இனம்.

எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரமாய் செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாய்ந்தவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. 5 வருஷம் உத்தரவாதம் உடனே எழுதுங்கள்.

ஜினன் வாட்சு கம்பேனி,
மின்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

மூன் விலை ரூ. 14. இப்போழுதே 7.
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்
கைக்கடியாரங்கள்

மேற்கண்டபடி எத்தனைவேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க கடியாரம் போல்இருக்கும். ஒவ்வொருவருஷத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் மெச்சூரிடில் இலவசமாய்சேர்த்து அனுப்பப்படும்.5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.

மூன்றுமாதத்தில்
மோட்டார் ஓட்ட கற்று
கொள்ளலாம்

(1916 ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்க ஓட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும். மற்ற விபரத்திற்கு கேரில் எழுதவும்

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்
இஞ்சினியரிங்ஸ்கூல்,
மயிலாப்பூர், மதராஸ்.

'திராவிடன்'

தினப்பதிப்பு சந்தா விபரம்.

தமொன்றுக்கு ரூ. 1—6—0
ன்னையிலும் எவ்வுண்டு
ள்ள இடங்களிலும்
நாதமொன்றுக்கு ,, 1—0—0
ரிப்போதி ,, 0—0—6
ாய் நாட்டுக்கு
ருஷம் ஒன்றுக்கு ,, 18—0—0

மானேஜர்,
"திராவிடன்" மவுண்ட்ரோட்,
மதராஸ்.

பிளாக்குகள்.

த்தகங்களுக்கும், விளம்பரங்களுக்கு,
ல்களுக்கும். இன்னும் இதர அச்சுவேலை
க்கும் வேண்டிய சகலவிதமான
லன், ஆப்டோன்,
கலர்பிளாக்குகள்
வருஷ அனுபோகஸ்தரால் தயாரிக்க
து

உயர்ந்த வேலைப்பாடு,
திருப்திக்கு உத்தரவாதம்.
காஞ்சகாலத்திற்கு சார்ஜுகள் வெகு
குறைக்கப்பட்டிருக்கின்றன. கேட்
இனும்.
பிரான்கீஸ், சொந்தக்காரர்
ஸ்டியன் ஸ்டுடியோ
173. போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
சென்னை.

ள் விசேஷகுறைந்த விலை விற்பனை

டபிள் டைம்பீஸ் இனம்!!



எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக் கெடியாரம் வாங்குகிறவர்களுக்குமேஜையின் பேரில்வைக்கச் ரு அழகான டேபிள்டயம்பீஸ் இனமாக அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் ாதம். முத்தங்கள். விலை ரூ. 5-15-0. லி பிரத்தியேகம்.

ஜினன் வாட்சு கம்பெனி,
டு பில்டிங்ஸ்போஸ்டு, மதராஸ்.

காகூஷிகளில் போன், வெள்ளி
மெடல் பெற்ற
விதைகள் செடிகள்.

த வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2
முள்ள செடி 1-க்கு அணு 8 முதல்
ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச்,
கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆர
ட்டாக இனம். இங்கிலீஷ் காய்கறி
தைகள்- 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2
ன் பாக்கெட் ரூ 1-4-0, நாட்டுக் காய்கறி
ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்கர்சரி, கோட்டை, சேலம்.

அநேக தங்க மெடல்களும் நற்சாக்ஷிகளும் பெற்ற டாக்டர் எஸ். பி. மருந்துகள்.

[ரூ. 1-8-0] அமிர்தரஸம். (Rs. 1-8-0)

இந்த ரசம் எனைய ரசங்களுக்கு ராசாவும், சமயத்திலுதவும் சஞ்சீவியாயும், எல்லாராலும் போற்றிப் புகழப்படுகிறது. உள்ளுக்குச் சாப்பிடவும், மேலுக்குப் பூசவும் ஒரே மருந்தாயுள்ளதும் அமிர்தரஸம் தான். துளிக் கணக்கில் உபயோகித்து மணிக் கணக்கில் சுகம் பெறலாம். தலைவலி முதல் கை, கால் குடைச்சல் வரையும் எல்லா மேல்வலிகளும், ஜலதோஷம், சுரம், அஜீரணம் வயிற்றுப்போக்கு முதலிய உள் வியாதிகளும் இந்த அமிர்தரஸம் ஒன்றிலேயே ஒழிந்துவிடும்.

புட்டி 1-க்கு விலை ரூ. 1—8—0

அமிர்தம்.

குடலேப்பற்றிய எல்லாவித வியாதிகளையும் போக்கும் தேவாமிர்தம்.

பித்தத்தால் ஏற்பட்ட வியாதிகள், காச வியாதிகள், குன்ம வியாதிகள், மலச்சிக்கல் வியாதிகள், மூல வியாதிகள், வெட்டை வியாதிகள் முதல் சகல வியாதியையும் போக்கி உடனுடன் கிரமமாய் மலப்பிரவர்த்தி செய்து தேகத்தை தங்கமயமாகவைத்திருக்கும் தேவ ஔஷதம். விபரம் கேட்டுக் பார்க்கவும்.

24 காள் உபயோக 1 சோர் டின் ரூ. 2—0—0. வி. பி. வேறு.

தங்கரேக் குளிகை.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற மருந்து.

இந்த உயர்ந்த அபூர்வ தங்கரேக், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை சேர்த்து செய்தது. உடைந்த தாதை கட்டி நீடித்த போக சக்தியும் சரம்புக்கு முறுக்கையும் கொடுக்கக் கூடியது. 100 மாத்திரை ரூ. 15—0—0. 50 மாத்திரை ரூ. 8—8—0. வி. பி. வேறு.

தண்டபாணி வைத்தியசாலை, 294, சைனபஜார், மதராஸ்.

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க பதக்கங்களும் பரிசுபெற்று வருவது.

குருநாத சஞ்சீவி எண்ணை.

7-நாள் சாப்பிடக்கூடியது விலை ரூபாய் 3-0-0 தபால் சார்ஜ் வேறு.

இந்த எண்ணை முக்கியமாய் மூலவியாதி உள்ளவர்கள் சாப்பிட்டால் பூர்ணசுகமடையலாம்.

தீரும் வியாதிகள்:— மூலச்சூடு, வெட்டைச்சூடு, வெள்ளை, பவுத்திரம், மேக காங்கை, இரேக எரிச்சல், மலசிக்கல், வாய்ப்புண், நீர் எரிச்சல், முதலிய சகலவியாதிகளையும் உடனே கண்டிப்பதோடு, திரேகத்துக்கு குளிர்ச்சியை கொடுக்கும். பத்தியம இல்லை.

உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

ஆறாத புண்களை 3 வேளையில் குணமாதைக் காட்டக்கூடிய,

சித்த சர்வ ரணச் களிம்பு.

டப்பி விலை ரூபாய் 1-0-0 வி. பி. வேறு.

இந்தக் களிம்பை புண் இருக்கும் இடத்தில் காலை, மாலை இருவேளையும் தடவிக்கொண்டு வந்தால் 5-நாளையில் எவ்விதமான புண்களும் ஆறிவிடும் என்பது கை கண்டபலன்.

விலாசம்:— ராஜலக்ஷ்மிய ஆஸ்ரமம்,
செவ்வாய்பேட்டை, சேலம்.

திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரி.

இந்தியாவில் தயாரிக்கப்பட்டுள்ள பனியன்கள் எங்களிடம்தான் கிடைக்கும். விலை 12 டஜன் உடைய 1-க்கு ரூபா 3—8—0 தான்.

இன்னும் பலவகையான பனியன் துணிகளும் கிடைக்கும்.

விலாசத்துக்கு எழுதுங்கள்.

எல்லா இடங்களிலும் ஏஜெண்டுகள் தேவை.

The General Knitting Factory,
TIRUPUR. (S. India.)

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

நவராத்திரி அல்லது ஒன்பது இரவு.

(முன் தொடர்ச்சி)

கைவல்யசாமியார் எழுதுவது

இப்பொழுது மைசூர் ராஜ்யத்தில் நடக்கும் துர்க்கை, லெட்சுமி, சரஸ்வதி, முதலியவர்களின் பூசைகளான, தசராப் பண்டிகைக்குச் செலவாகும் பணத்திற்கு அளவுண்டோ! முன் மைசூர் ராஜா சுயாதிபதியாக அரசாண்ட காலத்தில் சரஸ்வதி பூசைக்குச் செலவு செய்த பணத்திற்கு அளவும் எல்லையுமிருக்காது. அப்படியிருக்கையில் சங்கராச்சாரியின் மடங்களுக் கெல்லாம் முதன்மையான சாரதாமடம் மைசூரிலென்றும், சங்கராச்சாரி அம்மனே அங்கு பிரதிஷ்டை பண்ணித்தான் பூஜித்தாரென்றும், மைசூர் ராஜ குடும்பத்திற்கு அம்மனே குலதெய்வமென்றும், சங்கராச்சாரிகளும் மைசூர் ராஜகுடும்பத்தாரும் அந்த அம்மனே பூஜிக்கையிலும், பண்டிதை கொண்டாடுகையிலும் பிராமண போஜனம், தக்ஷிணை, தானம், வேள்வி, எக்கியங்களும் செய்து வந்தார்களென்றும், நாம் தெரிந்திருக்கிறோம். அதை சம்பந்தித்து இப்பொழுதும் ஆகோகம் நடப்பதையும் பார்க்கிறோம். அந்த காலத்தில் மைசூரில் குடி புகுந்திருந்த ஐதராலி என்பவரால் மைசூர் ராஜ்யம் அபகரிக்கப்பட்டு மைசூர் ராஜவம்சமும் தராதப்பட்டு சாரதாதேவியும் குடி ஒளிந்ததையும் தெரிந்தோம். அதற்குப்பின் வெள்ளக்காரர்களால் மைசூர் ராஜ்யம் ஜெயிக்கப்பட்டு பழைய ராஜ பரம்பரைக்குத் கொடுக்கப் பட்டதையும் கண்டோம்.

அது வரையிலும் பார்வதி, சரஸ்வதி, லெட்சுமிக்குச் செய்த பூசை எல்லாம் என்னவாயிற்று? எங்கே போய்ச் சேர்ந்தது? நம்மண்டை அவர்களிருந்தால அத்தப் பூசைகளை எற்றுக் கொண்டிருப்பார்களே. அதை அவர்கள் எற்றுக் கொண்டிருந்தால் அதனால் நாம் பலனும் கண்டிருப்போமே. சங்கராச்சாரிக்கும் அவர்கள் கூட்டத்தாருக்கும் சாராதா தேவிக்கும் போட்ட படையலெல்லாம் தேவர்கள் உண்டது உண்மையானால் நமக்குப் பிரதிபலன் ஒன்றும் காணோமே. பிரத்தியட்சத்தில் நன்றி கெட்ட தேவர்களுக்கு இனிப் போடும் படையலால் நமக்கு என்ன நன்மை வரும்? எட்டில் தான் பலன்? நீட்டி நீட்டி எழுதப் பட்டிருக்கிறதே ஒழிய யுக்திக்கும் அனுபோகத்திற்கும் அநேக காலமாக ஒத்து வருவதில்லையே. யுக்திக்கும் அனுபோகத்திற்கும் ஒத்து வராத சாஸ்திரிகளைத் தள்ளி விட வேண்டு மென்றல்ல வா மனிதனுடைய சிந்தனுசக்தியும் அதைத் தெரிந்த பெரியவர்களும் சொல்லுகிறார்கள். பார்வதிக்குப் பரிந்து வரும் வைஷ்ணவர்களும் சரஸ்வதிக்குச் சலுகை காட்டும் சமர்த்தர்களும் சற்று கவனித்துப் பார்த்துப்பின் பின் சண்டைக்குவாருங்கள். சரஸ்வதி பார்வதி இவர்தன் உண்டா? இல்லையா? என்பதல்ல இங்கு வாதம். அவர்களை துஷிப்பதுமல்ல. "சரஸ்வதி என்றால் அறிவும், லெட்சுமி என்றால் உலகத்தின் சாமக்கிரிகைகளும், துர்க்கை யென்றால் உலகத்தின் நாசமும் ஆகும்" என்பதான அர்த்தங்களையும் நாங்களுமறிவோம். அநேக ஆயிரவருஷங்களாக அவர்கள் பேரைக் காட்டி நாம் செய்து வரும் கிரகை, சடங்கு, பூசை, பிராமண போஜனம், தக்ஷினை, தானம், இவைகளின் பலனென்ன? அவர்கள் அதை எற்றுக் கொண்டு நமக்குச் செய்த நன்மை என்ன? அவர்கள் அதை எற்றிருந்தால் வெள்ளக்காரர்களின் உதவியால் நம் நாட்டில் அவர்கள் குடியிருக்கக் காரணமென்ன? எற்றுக் கொள்ளாமலிருந்தால் அதைத் திருத்தி அமைக்க வேண்டாமா? என்பதே இந்தவாதம்.

இதைப்பிடிப்பற்றிப் பிரபுக்களும் ஜெமீன்தார்களும்சரஸ்வதிபூசைஆயுதபூசைகொண்டாடுகிறார்கள், உத்தியோகஸ்தர்களுக்கும் பாடசாலைகளுக்கும் வேண்டிய விருந்துகளும் தானங்களும் நடக்கின்றன. இந்த பூசையைப் பெற்றுக் கொள்ளும் சரஸ்வதி இவர்களுக்கு தன்னுடைய வித்தையையும் அதனால் தன் நாட்டிற்கு வேண்டியதொழில் முறைகளையும் கற்பிக்காமல் மேஜைட்டு பழக்கவழக்கங்களை கற்பித்து அதனால் தங்கள் பொருள்களை மேஜைட்டு சாமான்களுக்கு விரயம் செய்யச் செய்து இவர்களை ஏழைகளாக்குவதையே பார்க்கிறோம். வீண் ஆடம்பரங்களுக்கும் சங்கீதப் பாட்டுக்கச்சேரிக்கும் விருத்தின் பெருமைக்கும் விரயம் செய்யும் ஒவ்வொரு ரூபாயுக்கும் பணங்களை கொண்டு ரூலு ஏழைப்பையன்களுக்கு காலது கல்வியும் தொழிலும் கற்பித்தால் சரஸ்வதி திருப்திப்படுவாள் என்பதை நிதர்சனமாகவிருக்கும். உத்தியோகஸ்தர்களோ ஆசோக பதார்த்தங்களை அளவிற்கு மீறி உண்பதால் நோழிவு, பாரிச வாய்வு முதலிய ராஜவியாதிகளால் அவதிப்பட நேருமென்ன படித்து ஆகாரத்தையளவுத பதத்தோடு உண்ண வேண்டுமென்றும் தெரிந்தும் பரித்தியாகம் செய்ய வேண்டுமென்ற நினைத்துக் கொண்டுமிருக்கையில், சரஸ்வதி பூசையைச் சாக்காட்டிச் செய்யும் விருந்தை அம்மன் பிரசாதமென்று அவர்கள் அடியோடு தள்ளாமல் அவ்வளவையும் உண்டு விட்டால், அவர்கள் மனவிரத்தைக் கெடுத்த பாவமும் தேகத்தில் வியாதியை உண்டாக்கின பாவமும் யாரைச் சேரும்? சரஸ்வதியை ஒரு நாளும் சேராது. 'அறிவையடைய புத்தியை விசாலப் படுத்திக்கொள்வதற்கு ஏழைகள்பேரில் இரக்கம் வை' என்றுசொன்னார்களே ஒழியவிருத்தும் வேடிக்கையும் பிராமண போஜனமும்தெக்ஷினையும் தானமும் கொடுத்து கடன் பட்டு உன்னபுத்தியையும் ஒடவிட்டுவிடச் சொல்லவில்லை. அதிகாரி வீட்டுக்கோழி முட்டை குடியானவன் வீட்டு அம்மிக்கல்லை உடைக்கு மென்பது போல வியாதி அவர்களிடம் போனாலும் பாவம் அவர்களிடம் போகாது. பணத்தைப்பாழுக்கிறைத்தவன் குடும்பத்தாரே பாவத்திற்கு பட்டினி கிடக்க வேண்டும்.

வைதிக மென்று விருத்தண்ணும் பாப்பார்களோ தனவிற்ற மீறி அள்ளி உண்டு அவதிப்படுகையில் விருத்திலுள்ள பதார்த்தங்களில்பலதைக் குற்றம் சொல்லி எஜமானின் குற்றத்தை எடுத்துக் காட்டி 'வெங்காயம்வெள்ளைப் பூண்டிருந்தாலும் தோஷமில்லை. பெருங்காயமதிகமில்லாதது பிழையே' என்று தீர்மானம் செய்து தங்களுக்குச் சோடாக் கொடுக்காமல் உத்தியோகஸ்தர்களுக்குச் சோடாக் கொடுப்பதைக் கண்டு சலித்து கோபித்து காரியக்காரனைத் தேடித்திரிந்து லெட்சுமி போல் அவன் பெருமையைச் சொல்லி பல்லைக்காட்டி சோடாவும் குடித்து, தான தருமவழிப் பயணக்கணக்கின் தீர்ப்புக்கு மறுநாளும் மன்றாடி நின்று கொண்டிருக்கும் சரஸ்வதி பக்தர்களைத் திட்டி ஓட்டுகிறவரையிலும் பாப்பானின் வைதிகமும்பணக்கார சரஸ்வதி பூசை எஜமானின் பக்தியும் முடிவடைவதில்லை. இந்த நிலையில் நாம் செய்யும் சரஸ்வதி பூசைகளும் என்ன பலனைக் கொடுக்கும் என்பதே இங்கு கேள்வி.

ஜப்பான் சிறிது காலத்திற்கு முன் தங்களூர் மாணவர்களை மேலைட்டிற்கு அனுப்பி சரஸ்வதியைக் கொண்டு வந்து தங்களூரைச் சுத்தம் செய்ய, லெக்ஷ்மி தானே அங்கு குடி ஏறி விட்டாள். துருக்கியோ தனது தேச சரஸ்வதியின் பாஷை கூட உதவாதென்று எழுத்தைக்கூட மாற்றி விட்டதாகப் பத்திரிகையில் படிக்கிறோம். மேலும் சுற்றி வந்த ஆட்கன் தேசமோ அதேக மாணவர்களை மேலைட்டு போய் சரஸ்வதியைக்கூட்டி வர அனுப்பி விட்டது. சரஸ்வதியைக் கூட்டி வரப் போகும் மாணாக்கர்களை முத்தம் கொடுத்தனுப்பிவுர்களாம். இவர்களன்றோ சரஸ்வதி. சரஸ்வதியின் அன்பும் அங்கல்லோ விளங்கும். இனி அங்கு லெட்சுமியும் என் குடி போகமாட்டாள்.

நம் தேசத்தில் அவ்வித அன்புடைய சரஸ்வதியுண்டா? எட்டிலும் பண்டிதர்களின் கழுத்திற்கு மேற்பட்ட வார்த்தையிலும் இருப்பது காரியத்திற்கு உதவுகிறதா? காரியத்திலிருந்தால் சர்க்கார் உத்தியோகம் இருந்தும் சுதேச அரசாகுமென்று கொடுக்கப்பட்டும் என் எல்லாப் பிள்ளைகளையும் பள்ளியில் சேர்த்துக் கொள்ள மாட்டேன்? என்கிறார்கள் இது செய்வதோ பமல்லவா? இலை நம் சரஸ்வதிக்குக்கூட அசுரத்தனமான ஸ்வார்த்த காட்டமே ஸர்வ ஸாதாரணமான பெருந்தருமமென்று காட்டுவது போலல்லவா இருக்கிறது. இக்காலத்தில் எல்லா வகையாலும் ஆதரிக்கும் அங்கியங்களுப் அதை தடைய விரோதங்களும் வளர்த்து கொண்டே வருகிறது. சரித்திரத்தில் பாதியுண்மை காட்டுவது போல பொய்களையும் ஸ்ருஷ்டி செய்து நம் நாட்டுத் தாழ்ந்த வகுப்பார்கள் எல்லோ ஒரு பேர் கற்பித்து அவர்களை எப்போதும் இடைவிடாமல் பழித்து அவர்களிடம் விரோத எண்ணங்களை வளரச் செய்வதும் பெரும் பகுதி பொய்யும், மனிதப் பொதுகலத்தைத் கருதி விரைவில் மறக்கத்தக்கனவாகிய எம்பவங்களுககு ஞாபகச்சின்னம் கட்டி நிறுத்துவது போல நமது மதத்தின் கதைகளும், நமது கடவுளின் பேராள் சொல்லும் சமய ஒழுங்குகளும் இருக்கையில் நமக்கு சுயாராஜ்ஜியம் அதிகாரமென்றே 'குடி அரசு' சொல்லுகிறது.

நம்முடைய தத்துவ சாஸ்திரத்தில் மனிதரை இயற்கை மிகவும் நெருக்கமாகப்பின்னி இருப்பதால் ஒருவன் பிறரை அடித்தால் அந்த அடி அவன் மீதும் தவறாமல் திரும்பி விழும் என்பது போல நாம் செய்த பாவம் நம்மேல் திரும்பி வந்திருக்கின்றது. மனிதன் கண்டு பிடித்தஉண்மைகளிலே மிகப் பெரியது தருமவிதி. அது யாதெனில், மனிதன் பிறருக்குன்னேத் தன்னே எவ்வளவு காண்கிறானோ அவ்வளவு உண்மை நிலை அடைகிறானென்ற ஆச்சரியமான ஸத்தியத்தைக் கண்டு பிடித்த செயல். இதையே பௌத்தரும் சொன்னர். அதுவே அவருடைய தருமத்திற் கெல்லாம் தலையாய் விளங்கிற்று. இதுவும் வேத சுருதிகளிலிருந்தெடுத்தே பௌத்தர் சொன்னர் என்கிற பெருமையை நம் நாடும் கொண்டாடி பெருமையை அடைந்தது. அந்த உண்மை நம்மை விட்டு நழுவிப் போய் குருட்டுத்தனத்தை நம்பி தன்னலத்திற்காகச் செய்யும் யெல்லாக் காரியங்களும் தேசபக்தியென்றும் மதமென்றும் பயிற்சிபடைத்து விட்டமையால் தான் சத்திய மூர்த்தி அய்யர் படித்திருந்தும் பல ஊர் சுற்றியும் 12 வயதிற்கு மேற்பட்டு பெண்களுக்குவிவாகம் செய்தால் நரகத்திற்குப்போகவேண்டுமென்று பராசரஸ்மிருதி சொல்லுகிறது. 12 வயதிற்கு மேற்பட்டு கலியாணம் செய்யாவிட்டால் ராஜாங்கம் ஜெயிலில் போடுவேன்என்று சொல்லுகிறது. ஜெயிலுக்குப் போவார்களே ஒழியபாப்பார்கள் நரகத்திற்குப் போகமாட்டார்கள்"என்று சொன்னது. மனிதர்களை வதைத்து நரகத்திற் காளாக்கி தேசம் நாசமடைவதை நேரில் பார்த்துக்கொண்டு அதற்கு மனமிரங்காமல் வழியிருந்தும் செய்யாமல் ஒன்பது எட்டிலில்லாமல் ஒரு எட்டிலிருக்கும் நரகத்திற்கு பயப்படுவதாகச் சொல்லும் சரஸ்வதி பக்தர்களிடம் சுயாராஜ்ஜியம் பத்தாயிர வருஷம் போலும் எப்படி வரும்? வந்தாலும்

(இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

மதவாதிகளின் திண்டாட்டம். பண்டிதர்களின் பயம்.

சாமி. சிதம்பரனார் எழுதுவது.

"ஒருவன் எப்பொழுதும் எல்லோரையும் எமாற்றிக்கொண்டு தான்மட்டிலும் இன்புற்று வாழமுடியாது" என்றஅறிஞர் வாக்கின் உண்மையை காம் இப்பொழுது கண்கூடாகக்கண்டு வருகின்றோம். "பிறர்எக்கேடு கெடினும் கெடுக, தான் மட்டும் இன்புற்றிருக்கவேண்டும்" என்பதேபடித்தவர்களின் எண்ணமும்பணக்காரர்களின்எண்ணமுமாக விருக்கின்றது. பண்டைக்காலமுதல் இவ்வெண்ணம் நமது காட்டுப் பணக்காரரிடத்திலும், படித்தவர்களிடத்திலும் நிலைபெற்று வேரூன்றி யிருந்ததனல்தான் நாம்இன்று அடிமைப்படு குழியிலாழ்ந்து சுயமரியாதை இழந்துகிடக்கின்றோம். இப்பொழுது நமத தமிழ்நாட்டு மதவாதிகளின் நிலைமையும், பண்டிதர்களின் நிலைமையும் எவ்வாறிருக்கின்ற தென்பதைச்சிறிது காண்போம்.

வைணவமத அன்பர்களும், வைணமத அன்புடைய பண்டிதர்களும், தங்கள் மதத்திற்குமாறுபட்டகொள்கைகளைப்பொய்யென்று கூறும்போது நம்முடன்சேர்ந்து மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்கள் மதத்திற்குமாறு பட்ட நூல்களையும், சாமிகளையும் பொய்யென்று புகலும்போதும் களிகூர்ந்தார்கள். ஆனல் அவர்கள் மதநூல்களாகக் கருதுகின்ற இராமாயணம், பாரதம்,பாகவதம் முதலியநூல்களில் அமைந்துள்ள-சுயமரியாதைக்குவிரோதமான-கொள்கைகளை எடுத்துக்கண்டிக்கும்போது நம்மீது சினங்கொண்டு தூற்ற ஆரம்பித்து விட்டார்கள்.

நாம் வைணவப்புரட்டுகளை வெளியிடுங் காலங்களில் சைவர்கள் மிகவுங் களிப்புக்கொண்டு நம்மைப்போற்றுதற்குமுன்வந்தார்கள்-இப்பொழுது சைவத்தில் உள்ள புரட்டுக்களை வெளியிடுகின்றபோது "சைவத்திற்கு ஆபத்து! தமிழுக்கு ஆபத்து" என்று கூச்சலிடப்புறப்பட்டு விட்டார்கள். இந்த உதாரணங்களைக்கொண்டு,ஒருவரையொருவர் அடக்கியாளவேண்டுமென்னும் நோக்கமே நமது நாட்டு மதவாதிகளிடம் நிறைந்து நிடைக்கின்றதென்றறியலாம்.

"சைவத்திற்கு ஆபத்து" என்றுசொல்லி நாட்டின் விடுதலைக்குப்பாடுபடுகின்றசுயமரியாதை இயக்கத்தைத்? தூற்றுகின்றவர்களனைவரும் வயிற்றுப்பிழைப்புக்காரர்களனே என்பதைநாம்-பன்முறையும் வற்புறுத்திக் கூறுகின்றோம். சைவ சித்தாந்தத்தின் பெயரைச்சொல்லிக்கொண்டு பொருள்பரித்துவந்த பண்டிதர்கள்தான் நம்மைவெறுக்கின்றார்கள். சென்றஇடங்களில், நமது விபூதிப்பூச்சையும், உத்திராக்ஷமாலையையும், கண்டாகல்வரைப்பற்றியபிரசங்கத்தையோ, தேவாரத்தைப்பற்றிய பிரசங்கத்தையோ, திருவாசகத்தைப்பற்றிய பிரசங்கத்தையோ, பெரிய புராணத்தைப்பற்றிய பிரசங்கத்தையோ, கேட்டு அதனல் தங்களுக்கு செய்த மதிப்புப்போய் விடுகிறதே என்று தான் கவலையடைந்து நமது சுயமரியாதை இயக்கத்தை தூற்றுகின்றனர்.

இராமாயணம்,பாரதம்,பாகவதம் முதலியகதைகளைப் பொய்யென்று கூறுவதற்கும் கூறுவதை ஒப்புக்கொள்வதற்கும் முன்வந்த சைவமதப்பற்றுடைய பண்டிதர்கள் பெரியபுராணத்தைப்பற்றிய புரட்டுக்களை வெளியிடும்போது அறிவுமழுங்கி ஆத்திரம் கொள்கின்றார்கள்.

பார்ப்பனரை வெறுப்பதில் நம்மைவிட முன்னணியில் நிற்கும் சைவர்களும், சுமார்த்த மதப் பெருமையையொழித்துச் சைவ மதத்தைப்பெருமைப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்துடன் தான் இருக்கின்றார்கள். பார்ப்பனரையும் வடமொழியையும் வெறுக்கும் ஒருசார் சைவர்கள், வைணவம், சுமார்த்தம் முதலியமதங்கள் ஆரியர்களுடையதெனக் கூறுகின்றார்கள். சைவமதம் தமிழர்களுடையதென மொழிகின்றார்கள்.நீங்கள் புகழும் வேதம் சிவாகமம் முதலியவை வடமொழியிலிருக்கின்றதேயென்றால், சிவாகமங்களெல்லாம், தமிழிலிருந்துதான் வடமொழிக்குப் போயிற்றென்று கூறுகின்றார்கள். வேதமென்பது இப்பொழுதுள்ள வடமொழி நான்கு வேதங்களுமல்ல. தமிழிலேயே நான்குவேதங்களிருந்தன. அவையே தேவாரங்களிற் சுட்டபடும் வேதங்களாகுமெனக் கூறுகின்றனர். பரமசிவன் கல்லால மரத்தின்கீழிருந்து ஜனகர் முதலிய நால்வருக்கும் நான்கு தமிழ்வேதங்களையும் அருளிச்செய்தாராம். அவ்வேதம் இப்பொழுது அழிந்துபோய் விட்டனவாம். பரமசிவனல், சைவசமயக்கடவுளால், சைவர்கள் சொல்லுகின்றபடி உலகத்திற்கே முழுமுதற்கடவுளாளிருக்கின்றவரால் சொல்லப்பட்ட வேதங்கள் அழிந்துவிட்டனவென்றால், அவற்றை ஆதாவாக கொண்டெழுந்த சைவமதம் எத்தனைநாளைக்குத்தனது கொடுங்கோன்மையைச்செலுத்தமுடியும், தனது புரட்டுக்களை மறைத்துக்கொண்டிருக்கமுடியும்?மேற்காட்டியசெய்திகளைக்கூறிச் சைவமதம் தமிழருக்குரியதென நிலைநாட்டித் தமிழர்களை ஏமாற்ற நினைப்பது எவ்வளவு மோசமான செயலாகும்?

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க" என்று சேக்கிழார் திருஞானசம்பந்தரைப்பற்றிக் கூறுகின்றார். திருஞானசம்பந்தர் "வேதவேள்வியை நிந்தனைசெய்தழல் ஆதமிலியமணர்" எனச்சமணசமயத்தினரைவைகின்றார். "பறப்பூப படுத்தெங்கும் பசுவேட்டெரியோம்டம் நிறப்பர்" என்று பார்ப்பனர்களைப் புகழ்கின்றார் என்று உண்மையைக்கூறினல் மதப்பித்தேறிய சைவர்களுக்குக்கோபம் பிறந்து விடுகிறது.

திருஞானசம்பந்தர் மூன்றுவயதில், பார்வதி கொடுத்த பாலையுண்டு அப்பொழுதே "தோடுடைய செவியன்" என்ற பதிகத்தைப்பாடினர் என்பது உண்மையாக விருக்கமுடியுமா?

முதலையால் விழுங்கப்பட்டபாலனைப்பல ஆண்டுகள்கழித்து வெளியில்வரும்படி செய்தார் என்பது உண்மைய?

எலும்பைப் பெண்ணுருச்செய்தார் என்பது உண்மையா?

தனக்கு விரோதமான சமணர்களைக்கழுவேற்றும்படி செய்தது சிவகாருண்யமா?

பரமசிவன்மீது பதிகம்பாடிப் பொன்முடிப்பு வாங்கித் தன் தகப்பனருக்கு யாகஞ்செய்வதற்காகக் கொடுத்தது உண்மையா?

தன்பதிகங்கள் யெல்லாம் யாழிலமைத்துப் பாடிய திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குச்சமத்துவமளிக்காமல், அவரைத் தனியிடத்திலும் கோபிலுக்கு வெளியிடத்திலும் இருக்கும்படி செய்த திருஞானசம்மந்தரை நாம் எவ்வாறு போற்றமுடியும்?

எழுபது வயதிற்கு மேற்பட்ட அப்பர், தன்காலில்விழ பத்துவயதிற்குட்பட்ட பார்ப்பனராகிய திருஞான சம்பந்தர் அப்பர்காலில்விழாமல் அவரைத்தன் மார்ப்போடு அணைத்துக்கொண்டாரென்பதனல் திருஞான சம்பந்தரின் மனப்பான்மை என்னென்று நினைப்பது?

ஒரு பனைபோலே ஆற்றில் எதிரேறிச் சென்றதென்பதும், நெருப்பில் எரியாமல் இருந்ததென்பதும் இயற்கைக்குப்பொருந்துமா?

திருநாவுக்கரசர் சுண்ணாம்புக்காளவாய்க்குள் பதிகம் பாடிக்கொண்டு இறக்காமலிருந்தார் என்பது இயற்கைக்குப் பொருந்துமோ?

அவர்கல்லோடு சேர்த்துக்கட்டி கடலிற்போடப்பட்டும் அமிழ்ந்தாமல் பதிகம்பாடிக்கொண்டு மிதந்து கொண்டிருந்தார் என்பது பொருந்துமா?

சுந்தரமூர்த்தி நாயனர் வேறுபெண்ணைக்காதலிப்பதில்லை யெனப்பரவை யாரிடம் கூறிவிட்டுச் சங்கலியாரைமணஞ்செய்துக்கொண்டது சரியா?

நான் சங்கிலியாரிடம் "உன்னைவிட்டுப்பிரியேன்" எனச் சத்தியஞ்செய்து கொடுக்கப்போகிறேன், ஆதலால் நீ கோயிலில் இல்லாமல் வில்வமரத்திற்போயிரு, என்று பரமசிவனிடம் சுந்தரமூர்த்தி நாயனர் வேண்டிக்கொண்டாரென்பது சரியா?

பின்பு சங்கிலியாரின் விருப்பப்படியே பரமசிவனிருந்த வில்வமரத்திற்கு கீழேயே பரமசிவனுக்கு எதிராகவே "உன்னைவிட்டுப் பிரியேன்" எனச்சத்தியஞ்செய்து கொடுத்துப் பின்பு அவளைவிட்டுப்பிரிந்து கண் பொட்டை யானதாகக்கூறும் வரலாறு உண்மையாகுமா? உண்மையானல் யோக்கியமான செய்கையா?

மீண்டுஞ்சுந்தரர் பரவையாரிடம் வந்தபோது பரவையாரின் கோபத்தைத்தணிக்கப் பரமசிவனையே தூதாவிடுத்தார் (டூபர்மாமா) என்பது உண்மையா? யோக்கியமான செய்கையா?

மாணிக்கவாசகர், அரசன் கட்டளைப்படிக் குதிரைவாங்கக்கொண்டுபோன பணத்தைக் கோயில் கட்டினர்என்பது முறையான செய்கையா?

மணிவாசகருக்காக வேண்டிப் பரமசிவன் நரிகளையெல்லாம் குதிரைகளாக ஆக்கிக்கொண்டுவந்து பாண்டியனிடங்கொடுத்துப் பாண்டியனை ஏமாற்றினர்என்பது உண்மையா? முறையான செயலா?

சிவன் மணிவாசகர் பொருட்டாகப் பிட்டுக்கு மண்சுமந்து பாண்டியனிடம் அடிபட்ட கதையும் உண்மைதானு?

என்ற கேள்விகளைக்கேட்டு இவைகளெல்லாம் பொருத்தமான செயல்களா? நடத்திருக்க முடியுமா? என்றுகேட்டால் சைவர்கள் பெருஞ்சினமடைகின்றார்கள். இச்செய்திகளுக்குத்தேவார திருவாசகங்களில் உட்சான்றுகளிருக்கின்றனவென்று கூறுகின்றார்கள்.

அவர்கள் கூறும் உட்சான்றுகளை ஆராய்ந்து பார்ப்போமாயின் அவைகள் அவர்கள் வணங்கும் கடவுளின் பெருமையைக்கூற எழுந்தனவாகக்காணுகின்றனவேயன்றி அவர்கள் செய்தனவாக காணவில்லை. உதாரணமாக இரண்டொன்று காட்டுகின்றோம்.

"கற்றுணைபூட்டி ஓர்கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்பதனல் அப்பர் கல்லோடு கட்டப்பட்டுக் கடலிற் போடப்பட்டார்என்று எவ்வாறு சொல்லமுடியும்?

"மாசில் வீணையும் மாலைமதியமும் வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்பூசுவண்டமைப்பொய்கையுமபோன்றதே ஈசன் எந்தை இணையடி நீழலே" என்பதைச் அப்பர் சுண்ணும்புக்காளவாயிலிருந்தபோதுபாடியதாகக் கூறுகின்றனர். இதிலிருந்து அப்பர் சுண்ணும்புக்காளவாயிலிருந்தார் என்பது எப்படிப் பெறப்படுகின்றதோ, இவ்வாறே அவர்கள் காட்டும் உட்சான்றுகளிற் பலபொருத்தமின்மையொழிவதைக்காணலாம்

இவைபோன்ற பொருந்தாச்செயல்களைக் கூறும்போது சைவர்கள் கோபங்கொண்டு பெரியபுராணக்கதைகளையும் தேவாரதிருவாசகங்களையும் உண்மையாக நிலைநாட்டப்பாடுபடுவதற்கு முந்துகின்றனர். தமிழுக்கும் ஆபத்தென்று கூறித் தமிழ்மக்களை ஏமாற்றப்பார்க்கின்றனர். சைவசமயத்தினர்களும் தமிழ்ப்பற்றுடையவர்களும் தமிழ்ப்பண்டிதர்களும் தமிழ்மொழிபின்னீதுகொண்டிருக்கும் பற்றைவிடச் சுயமரியாதைக்காரர்கள் எந்தவகையிலும் குறைந்தபற்றுடையவர்களல்லர்.

(இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

"மலர்ந்து மலர்க!"

மாலை 1.

"தமிழ் மகன்" தொடுத்தது-

1 "புராணக்குப்பை புலவத்திலிருந்து மக்கள் விடுதலையடைந்தே தீரவேண்டும்; அது எந்தப் புராணமாகிலும் மேக்கு அக்கரையில்லை. உதாரணமாக ராமாயணமோ, பாரதமோ, மச்சபுராணமோ, தவளைப்புராணமோ, பெரியபுராணமோ, சின்ன புராணமோ, சிவபுராணமோ, விஷ்ணு புராணமோ, ஜாதிப்பற்றி நாம் ஒரு சிறிதும் விசாரம் பார்க்க மாட்டோம்." "குடி அரசு."

2 "பெரும்பாலான மக்கள், பணக்காரர்களெல்லாம் வைகுண்டத்தில் இருப்பதாக எண்ணுகிறார்கள். ஆனால் அது அவர்களுக்குரகமே" திரு இங்கர்சால்.

3 "மக்களின் பகுத்தறிவைக் கெடுத்து பாமரராக்கிய தெது? என்று ஒருவர் சாவகாசமாய் உட்கார்ந்து யோசிக்க ஆரம்பிப்பாயின் அது இந்து மதமே என்னும் முடிவுக்குத் தான வர முடியும்." பட்டுக் கோட்டை அழகர்சாமி.

4 "ஜாக்கிரதை படனும், செய்யவேயாகவும் செய்யப்படுகிற விஷயங்களுக்குப் பயம் என்பது கிடையாது." ஷேக்ஸ்பியர்.

"பழமையும் புதுமையும் காலந்தோறும் ஆராயப் பெற்ற வாழ்வியற்கலத்து மிளிர்ந்தாலன்றி எந்த சமூகமும் புத்துயிர் பெற்று இனிது வாழமுடியாது" "குமரன்"

6 "பார்ப்பனரல்லாதார்களின் தாழ்வான நிலைக்கு காரணம் அவர்கள் பெண்கல்வியை நிராகரித்ததேயாகும்." திருவிக்ஷ பாய்

7 "பெரிய எண்ணங்கள் ஆறுவிஷ்டானத்துக்கு கொண்டு வரப்பட்டால் பெரிய காரியங்களாகின்றன." ஹேஸ்விட்.

8 "தீண்டாமை தங்கள் மதத்தின் ஒரு பாகமென்று இந்துக்கள் கொள்ளுகின்ற வரையில் சுயராஜ்யம் அடைய முடியாதொன்றேயாகும்." காந்தி,

9 "தன் பேச்சுக்கெல்லாம் ஆம் ஆம் என்று தாளங்கொட்டுபவனை நம்புவதைவிட, தன் வார்த்தையை ஆட்சேபித்துப் பேசுபவனிடத்தில் நம்பிக்கை வைப்பதில் மன்மை புண்டு."

"அமிர்தகுணபோதி"

10 "நீ பிறர்க்கு ஒன்றை வாக்குதத்தம் செய்யு முன், அது உன்னால் இயலுமோ, இயலாதோ என ஆராய்ந்து கொள்" யா. ஆறுமுக நாவலர்

11 "நல்வினையின் மேன்மையைக் கருதியே நல்வினையைச் செய்தல் வேண்டுமேயன்றி அதனாலேற்படும் பலவஸ்துக்களைக் கருதல் கூடாது." அக்பர்.

12 பேசுமிடத்து, அனேக பிரசவங்களுக்கு ஒருவர் ஒத்தாசையும் வேண்டியதில்லை. இயற்கையில் கஷ்டம் ஏற்படுவது மிகச்சொற்பம்"

டாக்டர் முத்துலட்சுமி அம்மாள்,

13 "சங்கீதமும், சிரிப்பும் உணர்ச்சியின் வளர்ச்சிக்குரிய சிறந்த அப்பியாசங்களாகும்; சிரிப்பு மனச்சோர்வை ஓட்டுகின்றது; மனச்சோர்வுள்ளவன் எத்தத்துறையிலும் வெற்றியடையமாட்டான்" டக்ளஸ் பேர்பாங்ஸ.

14 "அநேகர், தாம் ஏழையாயிருந்து பணம் சம்பாதித்ததாகச் சொல்லிக் கொள்வது அகௌரவமென நினைக்கிறார்கள். தாம்பிறக்கும்போதே சகல சம்பத்துடன் உதித்ததாக மற்றவர்கள் நினைக்க வேண்டுமென சிலர் நினைக்கிறார்கள், இவர்களுக்காக நான் இரங்குகிறேன்!

கே. எஸ். சுந்தரம் பிள்ளை.

15 "கம்மவர் தாம் ஒடுக்கப் பட்டவரென்றும் பிறர் தம்மை ஒடுக்குகிறார்களென்றும் கூறுவது முற்றும் சரியாகத் தோன்றவில்லை- நாம் சும்மா விருந்து கொண்டு பிறர் ஒடுக்குகிறார்களென மற்றவர்களின்மீது குற்றஞ் சுமத்தல் உண்மையாகமாட்டாது." யாழ்ப்பாணம் "திராவிடன்"

16 "மன்பதையிலுள்ள எந்த ஒரு பொருளை உற்று நோக்கி ஆராய்ந்தாலும் அது நமது ஐம்புலன்களில் ஒன்றுக்கோ அன்றி இரண்டுக்கோ மட்டுந்தான் இன்பந்தருகின்றது ஆனால் ஒரு பெண் நமது ஐம்புலன்கட்கும் ஒரே காலத்தில் இன்பத்தைத்தருகின்ற அதிசய பொருளாய் மிளிர்கின்றாள்" மதுரை வீ. மு. பொன்னம்பா.

17 "எழுத்தின் பேதங்களைக்கூட உணராத பலர் மேடைகளில் ஏறி மிகுந்த கல்வியாளரைப் போன்று வாயில் வந்த எதையெதையோ உளறி விளாசித் தள்ளிப் பாமரரைக் கரஒசைபடச் செய்தும், தம்மைச் சுட்டுரைக்களஞ்சிய மென்றும், சொற்பொழிவுச் சோமாரி யென்றும், சங்கத்தொனிச் சரபமென்றும் அவர்கள்புகழ்ந்து தமக்கு அப்பட்டங்களைச் சொடுக்கச் செய்தும் தம்மைப் பெரும் புலவர்களெனப் பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டுக் கொள்கின்றனர்-"

'ஆனந்த போதினி'

18 'திக்காளில் வேதமென்றும் மதமென்றும் சடவுளென்றும் சொல்லிக்கொண்டு கொலை வேள்வி புரிவது அநாகரீகமாகும்' 'சுவசக்தி'

19 'நம் நாடு இளைஞர்களால் முற்போக்கடைய வேண்டியிருக்கின்றது; அவர்களால் தான் மூட பழக்க வழக்கங்கள் ஒழிதல் வேண்டும் என்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ!' 'திராவிடன்'

20 'பெண்கட்குவிமோசனம்வேண்டுமெனில் அவர்கள் தாங்களாகவே அதற்குப் பாடுபட்டு உழைத்துக் கொள்ள வேண்டும்-அங்ஙனமல்லாது பிறரை எதிர்பார்ப்பின பெண்கள் மோசம் போவார்கள் என்பதற்குச் சந்தேகம் சிறிதுமில்லை. 'தமிழ் மகன்'

21 'மடாதிபதிகளும், பணக்காரர்களும் தின்று வயிறு வளர்க்கும்படி நமது ஆபரணங்களையும், பணத்தையும் ஆலய உண்டியில் போடும் வழக்கத்தை நாம் விட்டு விட வேண்டும்- இந்த உண்டியில் நாம் போடும் கைகளையும் இரவியத்தையும் அனுபவிப்பவர் யார் நமது ஆண்டவனுல்லது மடாதிபதியா நமது எம்பெருமானுர் அனைவரை அனுபவிக்கிறார இல்லை, இல்லை- மடாதிபதிகளும் பணக்காரர்களும் தான் அவைகளை அனுபவித்து ஏகபோகமாக வசிக்கிறார்கள்-

மா- மகேஸ்வரி அம்மாள்-

22 நீங்கள்விதவாவிவாகத்தை ஆதரிப்பீர்களால் பரிதாப நிலைமையிலிருக்கும் எத்தனையோ இளம் விதவைகள் உங்களால் கற்கதி பெறக்கூடும். அதிர்தமணி மோசஸ்

23 இயந்திரயுகம் இந்தாட்டிற்குக் கெடுதியை யேயுண்டுபண்ணுமென்றுசிலர்சொல்லலாம். அது தப்பபிப்பிராயம். இயந்திரங்களைக்கொண்டு எவ்வளவு உபயோகத்தை அடையமுடியுமோ, அத்தனை அளவிற்கு அவற்றை உபயோகிப்பதால் பலனுண்டேயொழிய கெடுதல் இல்லை இயந்திரங்கள் மூலமாக நாம் சாமான்களை உற்பத்திசெய்து வெளி நாடுகளுக்கு அனுப்பி கொள்ளலாம்

பி- வாதராஜுலு நாயுடு

24 "40 வயது ஆடவன் தன்மனைவியை இழந்தால் உடனே மறு விவாகம் செய்து கொள்வதாம்! ஆனால் 20 வயது மங்கை தன் கணவனை இழப்பாளாயின் பிறகு அவன் மணக்கக் கூடாதாம்! மரைத்த கிழவன் மறு விவாகத்திற்காக உடல் நடுங்க ஊர் ஊராய்ச் சுற்றி அலையும்போது இளஞ்சிறுமி மறு விவாகம் வேண்டுமென வாய் திறக்கவும் கூடாதாம்! என்னே அநீதம்!

காவேரி அம்மாள்.

25 ஒருபக்கம்அந்நியர் ஆட்சியால் அடிமைபட்டுஅழுந்திக்கிடப்பது போலவே, மதத்தின் பெய ராஸ் வைதிகர்களின் பிடிவாத, அர்த்த மற்ற, பொருத்தமற்ற, காலதேச வர்த்தமானத்திற் கொவ்வாத கொள்கைகளால் மற்றொரு பக்கம் நம் தேசம் அடிமைப்பட்டுக்கிடக்கிறது- மூடக் கொள்கைகளை யார் நிர்மூலஞ் செய்கிறார்களோ, அவர்களை வருங்காலத்தில்தேசாபிமானிகளெனப் போற்றுகிறோம் "ஏல விவசாயி"

26 இயற்கையாகவே புத்தி கூர்மையும், கல்வியில் பற்றும் கொண்டோர் முதல் வகுப்பினராவர்- இரண்டொரு விஷயங்களில் இவர்களுக்கு ஞானம் குறைவாகயிருந்தாலும், பொதுவாக கலாஞானத்தில் இவர்களுக்கு முதல் பதவியைத்தட்டி விடுகிறது- பள்ளியில் படித்தாலும் படிக்காவிட்டாலும், பரிட்சையில் தேறினாலும் தோல்வியிட்டாலும், உலக வாழ்க்கையில் இவர்களுக்குச் சிறப்பு ஏற்படுவது நிச்சயம். வெற்றியும், தோல்வியும், புகழ்ச்சியும், இகழ்ச்சியும் இவர்களை அசைக்க முடியாது: "தமிழ்நாடு"

27 மக்கள் கல்வாழ்க்கைக்கு ஒவ்வாத ஆலயங்களும். வேதங்களும், சாத்திரங்களும் வேண்டாமென்றே தற்காலசோதிடம் சொல்லுகிறது

'நாடார்குலமித்திரன்'

29 'உலகத்தில் கடவுள் இன்னது என்பதாக மனதில் விவரப்படுத்திக் கொள்ளாமலே, கடவுளைப்பற்றிய தர்க்கங்களும் தகராறுகளும் தினமும் நடை பெற்று வருகின்றன- இது இன்று நேற்று ஏற்பட்ட விவகாரம் அல்ல என்றுங்கூட சொல்லுவோம்-' ஈ- வெ. ராமசாமி.

30 புத்தியின் சாமர்த்தியத்தினால், தன்காரியத்திற்குச் சமயத்தையும், செல்வாக்கையும் தன்னலத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளும் கூட்டத்தார் செய்யும் குற்றங்கள் அதிகம் வெளிக்கு வராமலும், வந்தாலும் சொல்ல முடியாமலும், சொன்னாலும், அதற்கு நிவர்த்தி செய்ய முடியாமலும், வாதத்தாலும், வாய் யார்த்தையின் சாமர்த்தியத்தாலும், தன் செல்வாக்காலும், அதற்குப் பரிந்து பேசும் சில கூட்டத்தாலும், மூடப்படுகின்றன. கைவல்யசாமியார்,

31 எவனொருவன் மேன்மையான சண்டையில் சண்டையிட உண்மையில் எப்பொழுதும் தயாராயிருக்கிறானே, அவன் விஷயம் என்ன வென்று யோசித்துக் கொண்டு தயங்கிநிற்கமாட்டான்-' ரஸ்கின்

32 நமது குறைகளை நாம் முதலுணர்ந்தாலன்றித் திருந்த வழி ஏற்படாது. குறைகளை அச்சம் அவமானமின்றி எடுத்துக்காட்டி, நமக்கு கலமிடித்துரைக்கும் நட்புடையாரே சற்காலம் கிலவாதல் தகவு மிகவுடையதாகும். கடிசில நின்றுராய்ந்து உண்மைகளை உரைப்பதுவும், உண்மை விளக்கு நோக்க முடையோர் உரைகளுக்கு இடம் தருவதுமான நாயக்காவர்களின் 'குடி அரசு'க்கும், நாயக்காவர்களுக்கும்கல்வாவு கூறத்தமிழகம் கடமைப்பட்டுள்ளது.

மதுரை எஸ், எஸ், சோமசுந்தரபாரதியார்

33 வக்கீல்கள், எழைமக்கள் பொருள் கொண்டே எழைமக்களை ஏமாற்றுகிறார்கள். ஏமாற்றம் என்பது அவர்கள் (வக்கீல்கள்) அறமாய் விடுகிறது. பொய்யறம் ஓம்புநர் எங்ஙனங் கற்றவராவர்' திரு, வி, கலியாணசுந்தர முதலியார்,

34 கல்வியென்பது பொட்டை செட்டிறச் செய்தல் அன்ற-. வயிற்றில் அதிக உணவைத் திணிப்பதால் அஜீரணம் ஏற்படுமேயல்லாது உடம்பு போஷணை பெறுவதில்லை-அதுபோலவே புத்தகங்களை கெட்டருச் செய்வதால் மூளைக்கும் அஜீரணம் ஏற்படுமேயல்லாமல் அறிவு பயிற்சி பெறுது' லார்ட் கோஷன்,

"பி ஏ, எம் ஏ, எல் எல் டி, பி எல், எல் எல், பி, எஸ், வித்வான்; பண்டிதர்; பத்திராசிரியர்; பாவலர் இன்னோரன்ன பட்டங்களை ஒருவர் பெற்றிருப்பதைச் சொண்டே அவர் அப்பட்டங்

தமிழும் சமணமும்

(ஆழியன் எழுதுகின்றார்)

சமணர் யாவர்? சமணரை வதைசெய்ததின் காரணம் யாது? சமணர் தமிழ்மொழிக்குச் செய்த கன்மையாது? இம்மூன்று கேள்விகளுக்கூறி அவற்றிற்கு விடையளிப்போம்.

சமணர் யாவர்? அவர்கள் இந்தியர்களே. இந்தியகாட்டின் வடபகுதியிலுள்ள மக்களில் சில சமயக்கொள்கை வேறுபாடுடையவர்களே. வேறு நாட்டினரல்லர், வேறுசமயத்தைப்பரப்பினரல்லர். இந்து மதத்திலுள்ள இடைவழிப்பட்டசிலகுறைகளைக்களைந்து நல்வழிப்படுத்தற் பொருட்டு வெளிவந்த வொருகூட்டத்தார். புத்தர்களும் அத்தகையர்களே. வீண் சடங்குகளையொழித்து மக்களுக்குப் பயன்படும் நற்செயல்களைச் செய்தலே சிறப்புடைத்தென்பது அன்னார் கொள்கை தெய்வத்தைக் கண்கூடாகக் காண்டல் எளிதன்றுதலால் அவ்வாராய்ச்சியிற் காலத்தை அவமே கழிப்பதினும் மக்களுக்கு நன்மைகளைச் செய்யும் பெரியாரைப் போற்றுதல் சிறப்புடைத்தென்றும் எவ்வுயிர்க்கும் இன்னு செய்யாமையம் எவ்வுயிரையுங் கொல்லாமையும் புலாலுண்ணாமையுமே பெருநோன்புகளென்று யாண்டும் பரப்பினர்.

இக்கொள்கைகள் பல நூல்களிற் காணப்பட்டாலும் படிப்பளவில் நின்றனவேயன்றி நடையில் எற்பபடவில்லை. இரக்கம் சீலம் காண்டல் அரிதாயிற்று. பலருலமக்களும் பண்படை ஒன்றுபட்டியந்தது போக பல சாதிகளாயினர். உயர்வு தாழ்வு பிறப்பினுண்டென்ற கொள்கை பரவிற்று. ஒன்றுக உண்டுங்களித்தும் மணந்தும்வந்த மக்கள் பன்னூறு பிரிவுகளாயினர். ஒற்றுமை உடைந்து வேற்றுமை பெருகிற்று. பல பினவுகளுண்டானதைக்கண்ணுற்ற பெரியார்கள் வருந்தி ஒற்றுமை எற்படுத்தவும் சுவ்வித வதைகளுந் தொலையவும் முயன்றனர். அப்பெரியார்களில் சமணசமயக் கொள்கைகளை நிலைகாட்டவந்த மகாவீரர் ஒருவரே.

சமணமென்பது செயினை, சினமென்பதின் திரிபு. செயினமென்றால் வெற்றிகொள்ளல். பிறப்புக்தவித்தாகியகாமம், வெகுளி, மயக்கமென்பனவற்றை நல்லொழுக்கத்தால் அறவேயொழித்தல், மும்மலங்களையு மொழித்துத் தெய்வத்தன்மை பொருந்தியபெரியார் பலருளராதலின் அன்னாரைப்போற்றுதல் உலக வாழ்விற்கு ஏற்றதாமென்று சமண நூல்கள் அறிவிக்கின்றன. புதிய கொள்கைக்கூட்டங்கள் தாளடைவில் ஊக்கக்குறைந்து பக்கத்திலுள்ளார் பழக்கவொழுக்கங்களைக் கைப்பற்றிக் கெட்டுப்போதல் இயல்பன்றே? பின்காலத்தில் சமணரும் அவ்வித இடர்ப்பாட்டிற்கு உள்ளாயினர். அதலால் அன்னர் பெருமை யிழந்து தொகைகுறுகினர். ஆயினும் சிறந்த வொழுக்கங்களைக் கைகழுவ விடாமல் அவற்றின்வழி நடக்கும் சமணரும் இன்றுமுளர். "நடந்த சிறப்பினும் காரஞ்சிறக்கா" தென்பது தொன் மொழி.

சமணரை வதைசெய்ததன் காரணம் யாது? தென்னாட்டில் ஆனமலைமுதலான எண்மலைகளிலுமிருந்த வந்த சமணர்கள் எண்ணாயிரமென்றறியக்கிடக்கின்றது. சமணரை வெறுப்பதற்குக்காரணம் யாது? கேவாரமே பகருகின்றது.

வேத வேள்வியை நிந்தனை செய்தவர்
வைதிகத்தின் வழி யொழுகாதவர்
மறை வழக்கமிலாத மாபாவிகள்
அந்தணாளர் புரிபு மருமறைநிந்தைசெய்யாவருகர்

வேட்டு வேள்விசெயும் பொருளே வீளிமூட்டுச் சிந்தையர்
அழலோம்பு மருமறையோர்திறம் விழலதென்னு மருகர்
நீற்றுமேனிபராயினர் மேலுற்றகாற்றுக் கொள்ளவு மில்லார்.

இத்தகைய சமணரை வாட்டிட வாதுசெயத் திருவுள்ளமேயாயின் ஞாலம்நின்புகழேமிகவேண்டுமென்று துதிக்கப்பட்டது. சுருக்கமாகச்சொல்லின், வேதம் சிறந்தநூலன்று. பலகதைகள் பொதிந்த பொய்ந்நூலே. பலதேவதைகளே வணங்கும் பாழ்நூலே பிறர் காதுகளில் படாமலொழித்துவைத்ததன் காரணம் இவற்றிற்காணப்படும் தீயவொழுக்கச் சிறப்புகளே. தக்கயம்பாராட்டும் புன்சொற்களஞ்சியமே.

வேள்வி, யாகமெனப்படும். அது ஓமமாடு பரிபன்றிமனிதர் முதலான வுயிர்களை மாலையிட்டு வதைத்து மந்திரஞ்சொல்லிக்கொன்று வலையையும் வானையுந் தின்னற்பொருட்டுச் செய்யும் பெரும்பாதகமேயாம். சிறிது நுண்ணறிவுற்ற மக்கள் இத்தீயசெயல்களைச் செய்ய இணங்குவரோ?

வைதீகவழி:- நில்லாதவர் வேதத்திற்காணப்படும்வழக்கமொழுக்கமுடையவர்வைதிகரெனப்படுவர். வேதஞ்சிறந்த நூலன்று என்று ஒதுக்கிவைத்தவர் அவ்வழிநடப்பரோ? உயிர்க்கொலைசெய்து உளனுண்பவர்க்கும் கொல்லாவிரதம் பூண்டாவர்க்கும் பொருத்தம் எங்ஙனம் எற்படும் ஒருவனைகொன்றின் வேதத்தைக்கண்டவர் பாவிகளாவரோ எத்துணை ஓமம் வளர்ப்பினும் நீற்றைப்பூசினும் பாவச்செயலாற்றுதல் விழலாமன்றே எவ்வுயிரையும் பாதுகாப்பவர் இப்பாவிகளின் காற்றுவீசவும்பொருப்பரோ தற்காலத்தில்லைதிசமென்றுல்பட்டையாக நீற்றையணிந்து உருத்திராக்கங்களை உடலெங்குமணிந்துகொண்டு கையிடையிற் கன்னக்கோலைத் தரித்துத் திரிதலாகும். உண்மையைப் பற்றுவோர் சிறுதொகையினராவர். ஆகுலம் நபப்போர் ஆயிரக்கணக்கினர். ஆசையின் விழுப்பந்தரும் ஒழுக்கத்தைக் கைக்கொண்ட சேனன், சுதிமோன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றபெரியாரை இழித்துரைத்தலெங்ஙனம் பெருமையாகும்.

சமணர் தமிழ்மாதினுக்குச்செய்த கடமைகள் பல. சிந்தாமணி போன்ற பெருங்காப்பியங்களையும், சூடாமணிபோன்ற சிறுகாப்பியங்களையும் நாலடியாருட்பட்ட பதினெண் கீழ்க்கணக்கு நூல்களையும், யாப்பருங்கலம், கேமிதாகம் நன்னூல் போன்ற பலவிலக்கண நூல்களையும், நிகண்டுகளையும் வேறு அரிய பெரிய நூல்களையுமாக்கியளித்துத் தமிழைச்செழிக்கச் செய்தவர் சமணரினன் அன்னர்பெருமை எடுத்துரைக்க இயலுமோ தமிழ்மக்கள் இப்பெரும்பணிகளை யியற்றினவரைப்பழித்துக் கூறலும் வதைசெய்வதுடன் படலும் மடமைத்திறமாமே. செய்ந்நன்றி மறந்தவராவரே. பிறர்சூழ்ச்சி வலையிற்பட்டு மதிமயங்கினர் போலும்! தமிழ்மக்கள் சமயவழிபாட்டிலும் சமூகவழிபாட்டிலும் அரசியல் வழிபாட்டிலும் இன்றும மதிமயங்கி வுண்மைகளைக்கைப்பிடியாமல் மாமூலைப் போற்றிவருகின்றனரே! நூற்றைம்பதாண்டு வெள்ளையாட்சி முறைப்படி வாழ்ந்துவருகின்ற தமிழ்மக்கள் தம்மிலைமையும், பெருமையும் இழந்துவாழ்வதைக் கண்டிழித்துப்பார்க்கிலரே! பல்கலைமாடமேற்படுத்த முயலும் அண்ணாமலையாரே! பல்லாயிரக்கணக்கான அகக்குருட்டை யொழிக்கத்தக்க முதற்கல்வித்து உம்மூடைய பெரும்பொருளை யளித்தல் புண்ணியமாகாதோ! உம்பெயரையும் புகழையும் அது என்றுமழியாமல் நிலைநிறுத்தாதா 'ஏதிலார் ஆந் தமர் பசிப்பப் பேதை பெருஞ் செல்வமுற்றக்கடை' இக்குறளின் பொருளை அண்ணாமலையார் சிந்திப்பாராக.

கட்கு உரியவர் என கம்பியிடல் அறிபாமைபாகும், பரீட்சித்துப் பார்க்கும் போது மே பட்டதாரிகளிற் பலர் சூனியமாயிருக்க யான் கண்ருடிக்கிறேன்," "ெபபா விழைபான்

கோயமுத்தூர் ஜில்லா

குடியானவர்கள் சங்கம்

மகா-ரா-ரா-ஸ்ரீ ராவ்பகதூர்
T. A. இராமலிங்கம செட்டியார் அவர்கள்
B.A.B.L. அக்கிராசனத்தின் கீழ்கூடிய
காரிய கமிட்டிச்மீட்டிங்கின்
தீர்மானங்களும் நடவடிக்கைகளும்

No. 71/R. S. of 28.

1. உடுமலைப்பேட்டை தாலூகா தினைக்குளம் வாய்க்கால் பாசனங்கள் நாகமநாயக்கன் ஓடையால் கெடுதல் அடைவதை நீக்கவேணுமாய் மகா-ரா-ஸ்ரீ கலெக்டர் அவர்களுடையவும், நீர்ப்பாசன அதிகாரிகளுடையவும், உத்திரவுக்கு மேல் கனம் ரெவின்யூபோர்டாரவர்களுக்கு, ஷை வேலையை சுவர்னமெண்டுசெலவிலேயே செய்துகொடுக்கவேண்டியது நியாயமாயிருக்கிறது என்று விஸ்தாரமாய் காரணங்கள் கண்டுஅபீல் விண்ணப்பம் எழுதப்பட்டிருக்கின்றது. (இந்த வேலையை அவசரமாய் செய்ய, குடித்தனக்காரர்கள் சாத்தியப்பட ஓர்பாக செலவைகொடுப்பதாய்சம்மதிப்பதாலும்)

2 (எ) சித்திரைச்சாவடி வாய்க்கால் மகுளிவெட்டு மதலியவைகளைப் பற்றி எழுதியதில் அடுத்த வரு செய்துகொடுப்பதாய் டி.பி.டபிள்யு. அதிகாரிகள் பதில் எழுதியிருக்கிறார்கள்.

(பி) ஷை பாசனத்திலுள்ள பறையன் குட்டை, சோளூரான்பட்டி எரி, நாசாம்பதி, கிருஷ்ணாபதி, செலுவாம்பதி, கொமரசாமி எரி முதலிய எரிகளிலுள்ள மகுளிமண்களை அப்புறப்படுத்த குடியானவர்கள் பாதி செலவு கொடுக்க ஒப்புக்கொள்வதாக இன்ஜினியரவர்கள் சான்பாசில் சொல்லியதைப்பற்றி, அதற்கு என்ன மொத்த செலவுகள் எற்படும் என்பதை கணக்கிட்டுச்சொல்லும்படிக்கும் மகா-ரா-ரா-ஸ்ரீ கலெக்டர் அவர்களை க்கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. அம்மாகுளம் எரி மராமத்து விஷயமாப் எழுதியதில் மைனர் இரிகேஷன் ஓவர்சியரால் அதை அளவு செய்து திட்டக கணக்கிட உத்திரவாயிருக்கிறது. (1-வதுக்கு சொன்ன குறிப்புப்படி)

4. சொள்ளேகாலம் தாலூகா மூகர்ரோட்டில் டோகும் ஒன்னல்லா ஆற்றுக்கு ஒரு பாலம் கட்ட வேண்டுமாயும், அதிலிருந்து ராமாபுரம் குளத்துக்கு தண்ணீர் போவதற்கு ஒரு மதகு வைக்க வேண்டுமாயும் டி.பி.டபிள்யு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டதில், டிஸ்டிரிக்ட்டு போர்டால் ஷை பாலமும், மதகும் கட்டுவதற்கு திட்டம்போடப்பட்டு உத்திரவு செய்யப்பட்டிருப்பதாக பதில் கிடைத்திருக்கிறது-

5. பவானி தாலூகா கைரமங்கலம் வகையரா குடிகள் ஓடத்துரை, அனந்தசாகரம் எரிகளுக்கு தடப்பள்ளி வாய்க்கால் வழியாய் பிரவாக ஜலத்தை மாத்திரம் விட்டுக்கொடுக்க கேட்டதில், பின்னல் யோசிப்பதாய் டி-பி-டபிள்யு- அதிகாரிகள் பதில் எழுதியிருக்கிறார்கள்- (1-வதுக்கு சொன்ன குறிப்புப்படி)

6 இகனடியில் கண்ட மராமத்து வேலைகள் செய்துகொடுக்க வேண்டியது அவசியம் என்பதாக மகா-ரா-ரா-ஸ்ரீ கலெக்டர் அவாகளுக்கு சியார்ஸ் செய்யப்பட்டிருக்கிறது-

(எ) அண்ணூர் கிராமத்திலுள்ள எரியை ரிபேர் செய்து கொடுக்கவேணுமாய- (பி) பல்லடம்தாலூகா கண்ணமபாளையம் கிராமத்திலுள்ள சிகஸ் துவரியை ரிப்பேர்செய்து கொடுக்க வேணுமாய்- (1-வது குறிப்புப்படி) (சி) பவானி தாலூகா சாம்பள்ளியிற் குடிகள் மேட்டூர் ஆணை முடிந்து வர

தன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

சுயமரியாதையும் 'சமய நெறி'யும்.

முதிர்ந்த சைவர்களின் முரண்பட்ட வாதம்.

[இராவணன் வரைவது]

தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஜில்லாக்களிலும் பார்ப்பனர்களைவிட தாங்கள் உயர்ந்தவர்களென இறுமாந்திருக்கும் சைவர்கள் அதிகம் இருந்தாலும் சிறப்பாக திருநெல்வேலி ஜில்லாவில் ஜனத்தொகையில் மிகுதியாகவும் அதிக செல்வமும் செல்வாக்கும் உடையவர்களாகவும் சமூக அரசியல் துறைகளிலும் முன்னேற்றமடைந்து சைவ சமயத்தைப்பரவச் செய்வதற்கென முயல் வோர்டலர் இருக்கின்றனர். பணஞ்சேர்க்கும் பொருட்டே அவர்கள் சமயத்தை வளர்ப்பதாகச்சொல்லி வருகிறார்களென்பது உலகறிந்த உண்மையே.

பார்ப்பனர்களைவிடச் சைவர்கள் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கோவிலாட்சியில் தர்ம கர்த்தாக்களாகவும், பேஷ்காரர், மணியக்காரர், மானேஜர்கள், முதலிய உத்தியோகங்களிலும், தேவஸ்தான மேற்பார்வைக் கமிட்டிகளிலும பெரும்பாலும் இவர்களே அங்கம் பெற்றும் இருக்கின்றார்கள். வெடி போட்டிலும், சில சைவ மெம்பர்களிருக்கின்றார்கள். இருந்தும் இவர்களுடைய செல்வாக்கும், அதிகாரமும், பார்ப்பனீய சூழ்ச்சிக்கு உட்பட்டு எட்டின எழுத்தளவிலும, வாய்ப்பேச்சளவிலுந்தான் இருக்கின்றன. இவை தங்களைத் தாங்களே மானசிகமாகப் பெருமைப் படுத்திக்கொள்ளவுமட, தகங்களைப் போன்றவர்களிடத்தில் சொல்லிச் சந்தோஷிக்கவும் உதவுகின்றவேயன்றி, காரியத்தில் கடுகளவேனும் பயன்படவில்லை என்பது முன்னரே நன்கறிந்ததாயினும், அவைகள் கீழ்கண்டவைகளால உறுதிப்படுத்துவதை ஞாபகப்படுத்துகிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள சைவக்கோவில்கள், சைவத் தமிழ் மக்களின் நுண்ணறிவாலாய்ந்து ஆக்கப்பெற்றவைகளென்பதும், சைவர்களுக்கே உரிததான ஆகமங்களின வழியமைக்கப்பெற்று நடைபெற்று வருவனவென்பதும், எட்டனவிலும, பேச்சளவிலுந்தான் இருந்து வருகிறது. சைவரல்லாதாரும ஆகமத்தை ஒப்புக்கொள்ளாதவர்களுமான ''ஸ்மார்த்த சமய'' பார்ப்பனர்களின ஆதிக்கமில்லாத கோவில்களை ''சைவர்கள் கோட்டை'' என்று சொல்லப்படும் திருநெல்வேலி ஜில்லாவிலேயே விரல்விட்டு எண்ணிவிடலாம். பல ஆலயங்களில் சிவாகமங்களுக்கு மூலமாக 'ஸ்மார்த்த சமய' ப்பார்ப்பனர்களே பூசை செய்து வருகிறார்கள். இத்துடன் சுயப்பாகிகளாகவும், பரிசாரகர்களாகவும், அர்ச்சனை படிகளவும் உருத்திர ஜெபம் சொல்லவும், சாஸ்திரிகளாகவும், இவர்களே இருந்து வருகிறார்கள். இவர்கள் முறைப்படி சிவதீக்ஷை பெற்றுக் கொள்ளாதிருப்பதோடு நிந்தனையும், செய்துவருகிறார்கள். இவர்கள் செய்யும் ஆர்ப்பாட்ட அதிகாரம் செப்புந்தரத்ததோ? இன்னியில் இவர்கள் பேஷ்காராகவோ மணியக்காரவோ இருந்து வரும் கோவில்களிலோ இவர்கள் செய்யும திருவிளையாடல் அளவிட்டுச்சொல்லும் தரமல்ல.

எடுத்துக்காட்டாக சைவர்களுக்கென்று ஓர் பஞ்சாங்கம் வந்த பிறகு திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தாரும், சைவ சித்தாந்த சபையாரும், தேவகோட்டை சிவாகமசித்தாந்த பரிபாலன சங்கத்தாரும் ''சிவநேயன்'' ''செந்தமிழ்ச் செல்வி'' ''சித்தாந்தம'' முதலிய பத்திரிகைகளும், பெருங்கிளர்ச்சி செய்தும், தண்டுத்தாள களுமாயும் பார்ப்பனரல்லாத சைவர்களாகிய நாம், விரதங்களை சௌமான மாதங்களிலேதான் அநுஷ்டிக்க வேண்டுமென்றும், சைத்ரம், வைகாசம், எனும் சாந்த்ரமான மாதங்களிலே விரதம் அநுஷ்டிக்கக்கூடியவர்கள் ''ஸ்மார்த்த சமய''ப் பார்ப்பனர்களே என்றும், பெரும் பொருள் செலவில் தமிழ் நாடெங்கணும் பிரசாரம் செய்கார்கள். செய்தும, எவ்வளவோ சிவன் கோவில்களில் முறைப்படி ஆவணி மாதத்தில விநாயக சதுர்த்தியும, புரட்டாசி மாதத்தில் நவராத்திரி திருநாளும், ஐப்பசி மாதத்தில், கந்த சஷ்டி உற்சவமும், விருச்சகராசியில் சூரியன் வந்த பிறது கார்த்திகை சோமவாரங்கள் விரதமும், இது போன்றே மகாசிவராத்திரியும், நடந்திருக்கிறதா? நடக்கப்போகிறது? என்பது எவரும் அறியாததல்ல. இவ்வாண்டில் ''விராட்புருடனின்றவாத சாந்த ஸ்தல மெனும் மதுரை மீனாட்சி கோவிலில் சிவாகமப்படி புரட்டாசி மாதத்தில் நடத்த இருந்த நவராத்திரி திருவிழாவை இயமாதத்தில நடத்தக் கூடாதென நியாயமன்றத்தில வழக்குத தொடுத்த தங்கள் ''ஸ்மார்த்தப்பஞ்சாங்க'' கொளகைப்படி ஐப்பசி தான் நடத்தவேண்டுமென்று தடை உத்திரவு பெற்று தடுத்து விட்டார்களென்றால், சைவ உலகத்தில்ஸ்மார்த்தப் பார்ப்பன ஆதிக்கம் எவ்வளவு வேரூன்றி வலுப்பெற்றிருக்கிறதென்பது விளங்குகிறதல்லவா? இந்நிகழ்ச்சிக்குப் பிறகாவது சைவ உலகம் உறக்கத்திலிருந்து விழித்தெழுந்ததா? சிவாச்சாரியார் என்பவர்களும் ஆகமநிரிகைகளால் பிழைக்கின்ற தேசிகர்களும் சிவபெருமானாலாக்கப்பெற்றதாகச்சொல்லும் என்றுமழியாத அழிக்கப் பெறுமல் காப்பதற்கென எழுந்த ஆகமங்கள் தேவகோட்டை சிவாகமபரிபாலசங்க''னத்தாரும், நெல்வேலிசபையார்களும் கழகத்தார்களும், தமிழ்நாடெங்கணுமுள்ள சித்தாந்த சைவசங்கங்களும், ''குடியரசு'' ''நாவிடன்'' முதலிய பத்திரிகைகளில ஆராய்ச்சியாளர்களின் கட்டுரைகளையும, சுயமரியாதைப் பிரசாரர்களின் சொற்பொழிவுகளையும், கண்டும், கேட்டும், மருண்டும, வெருண்டும், ''சமயம போய்விட்டது! சமபச்சாரியர்களின் உழைப்பும் உயர்வும் ஒழிந்தது! புகழ்ந்துரைத்த கோவில்களும் பாடல்களும் அழிந்தன! சாமிகள் போச்சுது! நாஸ்திகமாச்சுது! கலிகள் ஒழிந்தன! புலமை புதைந்தன! புராண இதிகாசங்கள் மாண்டன!'' என நீலிக்கண்ணீர் விடுகின்னர். ''தமிழர்களே, சைவர்களே, எழுங்கள் கண்டுத்தாள் அச்சிட அரும் பொருதாருங்கள் சுயமரியாதைக் கொடியை வீத்துங்கள், கொலுபுரியுங்கள்'' என்று வீடெழுந்து, வீரமொழி புகன்ற புலவர்களும், பண்டிதமணிகளும், பத்திராதிபர்களும், சந்நியாசிகளும,தான்தோன்றித் தம்பிரான்களும், சைவசமயத்தைக் காப்பதற்கென்றே மஹியாசனின் மருகன பகைலாயபதியால் அனுப்பப்பெற்ற பரையைச்சார்ந்தவரெனக்கூறிக்கொள்ளும மடாதிபர்களும், இதுவரையில் என்ன செய்திருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்? என்ன செய்யப்போகிறார்கள்? எனறாமறிந்தது தானே.

ஆகமவழி நடைபெறுவதாய்ச் சொல்லும சிவன்கோவில்களில் அவ்வாகமவழிப்படி நீறு அக்கமணி அணிதம். சிவதீக்ஷை பற்றப், சிவ பூசைசெய்தம், சிவயோகஞ்செய்தம்,சிவஞானமடைந்தும,உபசிஷயுற்றினும், இக்கால நிலைப்படி உயர்ந்த சைவச்சாதியாரேனும், செல்வம், கல்வமை, குறவு, ஞானம் பூண்ட பெரியாயினும், தங்கள சிவபெருமானுடைய அருகில் சென்று (அர்த்த மண்டபத்தின்று) அன்புருகிப் பாடி, ஆடி வழிபடுரிமைகிடையாது. ஆனால், சைவசமயத்தி கே மாறுபட்டவர்களான ஸ்மார்த்த பார்ப்பனர்கள், தங்கள் சமயம் கொண்டு மாறுபாடாகச் சைவமக்களை ஏமாற்றி பொருள் பறித்து வயிறுவளர்க்கவும் லில் திருநீறும் மணியும் புனைந்து, ல் சிவா, ராமா, கிருஷ்ணா, கோவிந்சவா என்று வெளிப்படச் சொல்லியாப் ஆண்டவனுக் கணித்தாயுள்ள மண்டபம் வரையில் சென்று ஆவழுத்தும் உரிமை அனுபவிக்கிறார்.

இதனால் சைவர்களுக்கு யாசங்கையாவது அவமானமடையாது. இவர்களை வலிய ர்களை உயர்ந்த ஜாதி என்றுநினைத சைவயது குஞ்சுகூட விபூதிப் வாங்கிக்கொள்ளும் வரை காத்திகு தாங்கள் பெற்றுக்கொள்வதிலனப்படுவதில்லை. சுயமரியாதை உளவர்கள் இதுபோன்ற இழிவுகாட்டினால் அவர்களை நிந்தித்து பெயர் சூட்டி ரகத்தை படைஎசி, மற்றவர்களைப் பயமுறுத்தி தை உணர்ச்சி அற்று மாக்கள் மதிமயங்கித் திரிகிறார்கள்.

இந்நிலையானது சைவப்பெருந்த திருநெல்வேலி ஜில்லதில் சிறந்து நிற்கிறதே! அதிலுள்ள கோவில்களி ''சைவத்திருமுறையாகிய தேவாரதி பாசுரங்களைப் பாடியபிள் திருநீறு வாங்கமாட்டோம்'' ப்பனீயத்தை நிலைநாட்டும்'' திய உடனேயே விபூதி கொடுத என்றும் பார்ப்பனப் பெரு

(இதன் தொடர்ச்சி 16-ம்-ப

இதிகாசங்கள்.

இராமாயணம்—அயோத்யாகாண்டம்

கட்டுரை 4

திரு. சந்திரசேகரப் பாவலர் எழுதுகிறார்.)

இராமன் ஏகபத்னி விரதனல்ல.

நமது ஆராய்ச்சியுரையில் 23—9—28-உ 'குடி அரசில்' "இராமன் ஏகபத்தினி விரதனென்று உலகினர் கூறுவது பொய், அவன் பல தாராகமனன் என வால்மீகி கூறுகிறார்" என்றும் "அதற்கு மாறுபாடாகக் கம்பர், இராமனை ஏகபத்தினி விரதனைப்போல காட்டி உலகை மயக்குகிறார்" எனவும் எழுதியிருந்தோம்.

கம்பருடைய மயக்குரையில் ஏமாந்த சில சகோதரர்கள், இது வால்மீகி நூலில் இருக்குமோ என ஐயுறுவதாகத் தெரிகிறது. இவ்வையுறவுக்குக் காரணம் அவர்கள் வால்மீகி இராமாயணத்தையாவது அல்லது அதன் மொழிபெயர்ப்புகளையாவது படியாமையேயாகும். அவர்கள் அன்பு கூர்ந்து வால்மீகி இராமாயணம் அயோத்தியாகாண்டம் எட்டாவது சருக்கத்தைப் படித்து உண்மையைத் தெரிந்து கொள்வார்களாக. வட மொழி தெரியாதோர் மொழி பெயர்ப்புகளைப் பார்த்துத்தெரிந்து கொள்வார்களாக. அவர்களுடைய சிரமத்தை நீக்கும் பொருட்டு மொழிபெயர்ப்புக்களை இங்கே எழுதுவோம். நாம் இதற்கு முன் எழுதிவரும் கட்டுரைகளைத் தொடர்பாகப் படிப்போர் வங்காளத்தைச் சேர்ந்த பண்டித மன்மத நாதநந்தர் M. A., என்பார் ஆங்கிலத்தில் வால்மீகி இராமாயணத்தை மொழிபெர்த்திருப்பதைத் தெரிந்திருப்பார்கள். அவர் 1892-ம வருஷத்தில் பதித்த புத்தகத்தில் 202-ம் பக்கத்தில் அயோத்தியாகாண்டத்தில் எட்டாம் சருக்கத்தில்

'Rama's wives together with their handmaids will be filled with delight; and in consequence of Bharata's name, thy daughters-in-law will be afflicted with sorrvw'

என எழுதுகிறார். இதன் பொருள் "இராமனுடைய மனைவிமார்கள் அவர்களுடைய வேலைக்காரிகளோடும் மகிழ்ச்சியையடைவார்கள்; அது போலவே உன்னுடைய மருகியர் (பரதனுடைய மனைவிமார்) துன்பத்தையடைவார்கள்" என்பது. இதைப்போலவே பண்டித அநந்தாச்சாரியாரும், பண்டித கடேச சாஸ்திரியாரும் எழுதியிருக்கின்றனர். இராமாயணததை தமிழில் மொழிபெயர்த்த மற்றொரு பண்டிதர் சென்னை சமஸ்கிருத காலேஜ் உபாத்தியாயர் கி. ஆர். ஸ்ரீனிவாசய்யங்கார் பி. ஏ, என்பார். அவருடைய இரண்டாம் பதிப்பு (1925) அயோத்தியாகாண்டம சருக்கம் 8 பக்கம் 28ல் பின்வருமாறு எழுதுகிறார்:—

"இங்கே 'உன் நாட்டுப் பெண்கள்' என்று பரதனுடைய ஸ்திரீகளைச் சொன்னதால் அவனுக்குப் பார்யைகளென்றும், அப்படியே 'இராமனுடைய

நவராத்திரி கொலு.

பக்தியா இச்சையா?

நவராத்திரி எட்டாம் நாள்; இரவு சுமார் எட்டு மணி; கிருஷ்ணன் கோவில்; ஜனங்கள் கும்பல் கும்பலாக உள் நுழைத்து கொண்டிருக்கின்றனர்; இன்று பெண்கள் கூட்டமதிகமாயிருக்குமெனப் பல வாலிபர்கள் உரையாடிச் செல்கின்றனர். நாமும் பார்த்து வருவோம்; இவர் கூற்றின் உண்மையை ஆராய்வோம் எனக் கோயிலினுட்சென்றேன்; உண்மையில் பெருங்கூட்டமாகவே இருந்தது. கோயிலின் ஒரு பக்கதில் காடகபடை போல் அலங்கரிக்கப்பட்ட மண்டபமொன்றிருந்தது. ஆனால் திரையினும் உயர்த்தப்படவில்லை, கண்ணன் திருவிளையாடற் காட்சியைக் கண்டு களிக்கப் பலர் காத்துக் கொண்டு நின்றனர். சிலர் பொறுக்கலாற்றாது நிலையைச் சிறிது நீக்கி எட்டிப்பார்த்தனர்- சபலம் ஆகிவிட்டது. வாத்தியக்கள் ஒலித்தன. கிருஷ்ணா, கிருஷ்ணா, என்றஒலிபேரொலியாகக் கிளம்பிற்று- பாப்பனர் பலர் ஏதோ அறியா மொழியில் முணுமுணுத்தனர்-திரை எழும்பிற்று; என்ன காட்சி! மேயோ! நீ கூறியவற்றைச் சிலர் மறுத்தனர்- ஆனல் 'நாங்கள் உன் கூற்றை மெய்ப்பிக்கிறோம்' என அறை கூவியது போல், அங்கு யான் கண்ட காட்சியும், ஜனங்கள் ஒலியும், பார்ப்பனர் பகட்டும் தோன்றின. என்ன அற்புதக்காட்சி! கோபிகஸ்திரீகள் வஸ்திராபரணமாம்! குளத்தில் நீராடிகொண்டிருந்த கோபிகாஸ்திரீகளின் துயில்களைத் திருடி மரத்தில் ஒளித்து வைத்துக்கொண்டானும் கிருஷ்ணன் இது மாயக்கிருஷ்ணன் லீலையாம்! இக்காட்சியை வருடந்தோறும் கோயிலுள், பக்தியை உண்டாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட கோயிலுள், மக்களுக்குக் காட்டினால் மனத்தில் என்ன எழுச்சி உண்டாகுமென சாதாரண ஜனங்கட்கும் தெரியும்-

இப்பெருங் கூட்டத்தில்பக்தி பரவசராய், தெய்வசிந்தனையுடையோராய் வந்தவர்எத்தனை பேர்? முக்காலும் மூர்த்தியின் கட்சிக்காரேயன்றி வேறல்லர்- இவர்கள் கோயிலை இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒரு விளம்பர மண்டபமாகக் கொள்கின்றனர்- இவர்கள் காட்சியைப்பார்க்க மிக ரம்மியமாகவே இருக்கின்றது- இவர்களைக் கண்டதும் 'தெட்டிலே வலியமடமாதர்' என்ற தாயுமான சுவாமிகளின்பாடல் ஞாபகத்துக்கு வந்தது- சிறிது நேரத்தில் வெளிக்கிளம்பினேன்- முன்போலவே ஆண்களும் பெண்களும் கும்பல் கும்பலாய்த் திரும்புகின்றனர்- அக்கூட்டில்வாலிபர்கள் பேசிக் கொண்டுபோனதைச் சுருக்கமாக இதில் எழுதுவது என்றால் கைகூசுகின்றது- வடநாட்டில் இவ்வுற்சவங்கள் பலவிதமாக நடப்பதாகவும் பேசிக் கொண்டார்கள்- இதிலிருந்து இவர்கள் மனத்தில் எனன பக்தி தாண்டவமாடியது என்பதை எளிதில் ஊகித்துக்கொள்ளலாம்- இதுகாண் நவராத்திரி கொலுவின் சிறப்பு! சுண்டற்காடலே விழாவின்உயர்வு! எனனே பேதமை! மேயோவைப்போல் நூறு மேயோ வந்தாலும்இவ்விருள் ஒழியும் நாளை சிறந்த நாளாகும்-

"சீர்திருத்தம்"

தீபாவளி வருகிறது.

நேயர்களே!

வருஷந்தோறும் தீபாவளி வருகிறது. சிலமகத்துணிமில் பணத்தை வீணில் செலவாடாதீர்கள். பரிசுத்த கதர் ஆடையை உடுத்தி பாரதமக்களின் பசிபோற்றுங்கள்.

மதுரை 'தமிழ்நாட்டு சாயதொழிற்சாலை'யின் சுத்தக்கதரில் ஸ்வதேசிலாய் நயமாகும மனதிற்கு ரமியமான "மதுரைக்காரி" யை அணிந்து மகிழ்ச்சியடையுங்கள்-

கலர்திணுசுகளில், அந்தியநாட்டுத் துணிகளுடன் போட்டி போடக்கூடிய அதேகலர்மான கலர்திணுசுகள் எமது தொழிற்சாலையில் கிடைக்கும்

ச. சங்கிலிபா பிள்ளை, புரோப்ரைட்டர்,
தமிழ்நாட்டு சாயதொழிற்சாலை,
முத்தைய பிள்ளை தெரு, மதுரை.

"ரிவோல்ட்"

"ரிவோல்ட்" என்னும் ஆங்கிலப் பத்திரிகை 7-11-28 முதல் வெளிவரும். உள்நாட்டுக்கு வருட சந்தா ரூ 4. மாணாக்கர்களுக்கு ரூ 3. வெளிநாட்டுக்கு ரூபா 5—

மானேஜர், "ரிவோல்ட்" ஈரோடு.

வாலாஜாபாத் இந்து மத பாடசாலை இங்கற் கூட்டம்

16—10—28 பிற்பகல் 3 மணிக்கு இப் பாடசாலை வளர்ச்சியாளர்களும் ஆசிரியர் களும் மாணவர்களும் சூழுமி தறவறத் தூ ய்மைபாளர் பாஞ்ஜோதி அடிகளும், திரு. உலகநாதமுதலியார் அவர்களது ஒரு திரும கனார் பாலசுப்பிரமணிய முதலியார் அவர்க ளும் விண்ணுற்றமைக்கு பெரிதும் வாடினர். அப்போது அவர்களிற் பலர் பேசியதின் சு ருக்கம் வருமாறு:—

பாஞ்ஜோதி அடிகள் நம்மவர்க்கு ஆற்றி ய பெருந்தொண்டுகள் என்றும் மறக்கலா ற்றாதவை. "சிவபக்தியே செய்வார் பெரி யார்" என்னும் பேருரையின் வாய்மையை அடிகளது வாழ்நாளில் யாருந்தெள்ளிதிற் காணலாம். நமநாட்டில் சாலவும் தாழ்ந்த வகுப்பில் இருப்பவர்கள் ஆதிதிராவிடர்கள் தாம் என நன்குணர்ந்து அவர்களது மக்க ளே முன்னேற்ற நிதம்பரம் நந்தனர் இலவச ப்பள்ளிச்சாலைப் நிலைநாட்டிய பெரியார்க் குத் துணைபுரிந்தவர்கள் இவர்களே. மற் றுஞ் சிதம்பரம் பொன்னம்பல சுவாமிகள் மடத்து அதிபர்; ஞானப்பிரகாசகுளம், உ மையவள் விலாச குளம இவைகளை நாட்டுக் கோட்டை நகரவணிக பிரமுகர்களது உதவி யைக்கொண்டு பல லட்சரூபாய் செலவு செய்து புதுப்பித்த புனிதர்; ஜாதிமத வித்தியாசம் பாராட்டாத வித்தகர். இவரது கல்வித்தி றமையைக் கண்டு வியக்காத தமிழ் மக்க ளே இல்லை எனலாம். இத்தகைய பெரி யாரை இழந்தது நமது தமிழகத்தின் தவக் குறைவே-

தண்டமிழ்புலவர் திரு. வி. உலகநாதமுதலி யார் அவர்கள் நமது ஒரே அருமந்த மகனை இழந்த செய்தியைக்கேள்வியுற்றதும் நமது துயரம் புண்படங்கு மிதுகின்றது நமது தமி ழகதிநது "நவசக்தி" வாயிலாக, புத்தியிர் ளுள்ளதுவரும திரு. வி. கலியாணசுந்தர முதலியா ரடங்கிய பெருங்குடும்ப மடங்க லுக்கும் விண்ணுலகுற்ற திருமகனர் ஓரேம்க ளுய் விளங்கியமை திருவருள் பொருக்கயில் லேபோலும! விண்சென்ற உயிர் வாழ்ந்தி ருப்பின் அவர்களது பின் நாட்கள் தந்தை யர்களுக்கு எத்துணைப்பற்றுக் கோடாயிரு ருகும்! அந்தோ! அந்தோ!! இறைவன் மா பை சூலவும் பெரிது! இதைக்கடகை யாரா ல இயலுய!

விண்ணுலகுற்ற இவ்விரு பெரியோர்களின் ஆன்மாகள் கற்கதியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம். ஒரு நிருபர்.

தென்னிந்திய மருத்துவசகோதரர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

தென்னிந்திய மருத்துவர் மூன்றுவது மகாநாடு நடத்துவதற்காக திருநெல்வேலி ஜில்லா முழுவதிலும் தலைகட்டு வரிகள் நன் கொடைகள் வசூலிப்பதற்கும் மகாநாடுவிஷ யமாய் பிரசாரம் செய்வதற்கும் முயற்சி செய்திருப்பதால் நமது குல அபிவிருத்தி யை முன்னிட்டு மருத்துவ சகோதரர் அனை வரும் ஒற்றுமையுடன் கூடியபட்டும் ஒத்து ழைக்க வேண்டு மென்றும, இத்துடன் நம் தென்னிந்திய மருத்துவ குல தலைவர் பண் டிட் எஸ் எஸ் ஆனந்தம் அவர்கள் மூன்று வது மருத்துவகுல மகாநாட்டையும் நடத்து வதற்கு கூடிய சீக்கிரம் முயற்சி செய்வார்க ளென்றும் நம்புகிறேன். நமது மருத்துவர் மூன்றுவது மகாநாட்டிற்கு திருவாளர்கள் ஈ. வெ. ராமகாமி நாயக்கர், ஜே- எஸ்- கண் ணப்பர் ஆகிய இருவர்களையும் வரவழைக்க வேண்டுமாயும் நமது மருத்துவ குல சகோ தர சகோதரிகள் சுயமரியாதை உணர்ச்சி ஊட்டும் 'திராவிடன்' 'குடி அரசு' பத்திரிகை வாசிக்கவும் நமது குலம் முன்னேற்றமடை யவும் செய்வீர்களென்றும நம்புகிறேன். இடம காலம் முதலிய விவரங்கள் தலைவர்க ளின் அறிக்கையின் பின் வெளியிடப் பெறும். பண்டித வீ. எம். வீரண்ண்.

பரமக்குடி சுயமரியாதைப் பிரசாரம்-

சுயமரியாதை சங்கத்தின் சார்பாக இரா மநாதபுரம் ஜில்லா சுயமரியாதைத் தொண் டர் திரு. கருப்பையா பிள்ளை மாயவ ரம் திரு. எஸ். வி. லிங்கம் பட்டுக்கோட் டை திரு. அழகர்சாமி நாடுகாரு முதலிய வர்கள் பரமகுடி சுயமரியாதை சங்கத்தா ரால் நன்குவரவேற்கப்பட்டு 24 தேதி யன் று மாலை 6 மணிக்கு சித்தன்கோவில் முன் பாக திரு கருப்பையா பிள்ளையின் தலைமை யின்கீழ் ஓர் பெருங்கூட்டம் கூடப்பட்டது. திரு. எஸ். வி லிங்கம் அவர்கள் காங்கரசின் விஷயங்களைப்பற்றியும் திரு அழகர்சாமிரா வுடுகாரவர்கள் சுயமரியாதை இயக்கம் என் பதைப்பற்றியும் சுருக்கமாகவும் தெளிவாக வும் இரவு 10 மணிவரை உபன்யாசம் செய் தார்களென்று சுயமரியாதைச்சங்கத்தி காரியதரிசி கோ. கோவிந்தன் எழுதுகிறார்.

காரைக்குடி முனிசிபல் அங்கத்தினர் நியமனம்

இவ்வூர் முனிசிபாலிட்டிக்கு சுயமரியா தை இயக்க அன்பரும் காரைக்குடி சமஉரி மைச்சங்கத்தின் கௌரவத் தலைவருமான உயர்திருவாளர் K. L சிங்காரவேலு பிள்ளை யவர்களை, அங்கத்தினராக கருணைய வர் ன்மெண்டார் நியமனம் செய்திருப்பதைய றிந்து, நம்மவர் அனைவரும் அளவற்ற ஆன ந்தமடைகிறார்கள். திருவாளர் பிள்ளையவர் கள் எமழமக்களின் நண்பர். பாடுபடாதார் கண்மையைக் கோரும் உத்தமர். அ வர் தம்நியமனம் நம்மவர்க்குப்பெரிதும் நன் மை பயக்குமென்பதிற் சிறிதும் சந்தேக மில்லை. V. ராமநாதன்

மனம். எஸ். ஆர். தாஸ் காலஞ் சென்றார்!

தேசபந்து சித்தரஞ்சனதாஸ் அவர்களின் நெருக்கிய பந்துவும் இந்திய காங்கிரஸ் கட்சி யின் பெரும்பருமான கனம் எஸ். ஆர். தாஸ் அவர்கள் 26-10-28 ல் திடீரென கல்கத்தா வில் காலஞ் சென்றுவிட்டார் என நமது நிருபர் ஒருவர் சென்னையிலிருந்து தந்தி செய்தியொன்று அனுப்பியுள்ளார்.

நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத் தையும் கனம் தாஸ் அவர்களின் குடும்பத் தாருக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

சந்தாதாரர்கள் விலாசம் மாற்றவேண்டும் போதும், மறுவருஷத்திற்கு சந்தா அனுப் பும்போதும், வேறு ஆவலாதிகள் எழுதும் போதும் தங்கள் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதக் கோருகிறோம். சிலர் 2041 என்னும் பத்திரிகையின் பதிவு (ரிஜிஸ்டர்) நம்பரை சந்தாநம்பர் என்று நினைத்து அந் நம்பரைக் குறித்து எழுதுகிறார்கள். 2041 சந்தா நம்பர் அல்ல. சந்தா நம்பர் என்பது சந்தாதாரின் விலாசத்துடன் கா ணப்படும் நம்பரேயாதலால் அந்நம்பரைக் குறித்து எழுதப்படாத எவ்விதஆவலாதியும் கண்டிப்பாய் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்

தீபாவளியன்று தமிழ் மக்கள் கடமை.

தமிழ்மக்களாய் பிறந்த நாம் ஒவ்வொரு வரும் தீபாவளி தினத்தன்று ஒவ்வொரு வர்களிலும், "சுயமரியாதை" பிரசாரம் செய் தது "திராவிடன்" "குடி அரசு" பத்திரிகை களுக்கு குறைந்தது ஐம்பதினாயிர ம் சந்தாதாரர்களைச் சேர்ப்பித்து அனுப்பி ன மியக்கமும், அவ்வியக்கத்திற்கு ஆதர வாய் உழைக்கும் பத்திரிகைகள் யாவும் வ ளர்பிறை மதியைபோல் இனிது வளர்ந்தோ ங்கச் செய்வித்த நாடும், நம் மக்களும் சுய மரியாதை யடைந்து சமத்துவமாய் வாழ ச்செய்யவேண்டு மென்பதே சுயமரியாதை விரும்பும் நம் தமிழ்மக்களின் கடமையாது மெனஞாபகமூட்டுகிறோம். பழனியப்பன்.

பார்ப்பனரல்லாத சகோதரர்கள் எதை பகிஷ்கரிக்கவேண்டும்.

சகோதரர்களே! ஒவ்வொரு காலும் காலை மாலை இருவேலைகளிலும் நம் சகோதரர் எத் தனைபோ பேர் காப்பி ஹோட்டல்களில் தங்கள் பணத்தை வாரியிரைப்பதுமல்லா மல் தங்கள் சுயமரியாதையையும் இழக்கின் றார்கள். தங்கள் பணத்தையும் கொடுப் பது மல்லாமல் அந்த ஆசாமிகளை சாமி என் றும் அழைக்கின்றார்கள். சில முடந்தைகு கள் "எப்படி இருந்தாலும் பாப்பான் பாப்பா ன்தான்; அவனுடையசுத்தமும் அவன் பண் ணங்கள் செய்யும் விதமும் யாருக்கு வரும்" என்று கொஞ்சமும் வாய்கூசாமல் சொல்கி ன்றார்கள். அவர்கள் ஆங்கு நடக்கும் ஆபா சங்களைப் பார்த்திருந்தால் சைமன்கமிஷனை பகிஷ்கரிக்காமல் காப்பிக்ளிப்பை பகிஷ்க ரித்திருப்பார்கள். உண்மைத் தொண்டன்.



துஷ்ட நாயிச் ஒன்றென்றென்ணி
அருப்பதி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
இனத்தையும் தனிர்ப்பாயாயில்
செய்தலும் வேறிருன் துண்டோ?
உலகத்து உறுதியாக
உபதேசம் ஆருமன்னே.

குடி அரசு

விபவ-வரு ஐப்பசி-மீ 12-உ

காந்தியும் கடவுளும்.

நிரு. காந்தியவர்கள் சென்றவாரத்திய தமது "யங் இந்தியா"வில் கமலை ஒரு நண்பர் கடவுளைப்பற்றிக்கேட்ட சில கேள்விகளை ப்பிரசுரித்து அவைகளுக்கு கமல அபிப்பிராயத்தையும் எழுதியிருக்கின்றார்.

கேள்விகளின் சுருக்கம் யாதெனில்:—

"கடவுளைத் தவிர மற்றதெல்லாம் நிச்சயமற்றதென்றும்,

சத்தியம் தான் கடவுள் என்றும்,

துஷ்பத்தை சகித்துக்கொண்டு பொறுமையாயிருப்பதே கடவுள் என்றும்,

அயோக்கியர்களை எச்சரிக்கை செய்து அவர்கள் தமக்குத்தாமே கேடு விளைவித்துக்கொள்ளும்படி செய்து விடுவிரும் என்றும், "யங் இந்தியா"வில் தாங்கள் எழுதியிருக்கிறீர்கள்.

ஆனால் கடவுள் இருக்கின்றார் என்கின்ற உறுதி எனக்கு இல்லை.

ஏனெனில் அப்படி கடவுள் என்பதாக ஒன்று இருக்கும் பக்ஷத்தில் உலகத்தில் சத்தியத்தை நிலை நிறுத்துவதே அவரது லக்ஷியமாக வல்லவா இருக்கவேண்டும்.

ஆனால், உலகம் எங்குபார்த்தாலும் பலவித மான அயோக்கியர்களாலும் கொடுமைக்காரர்களாலும் நிரப்பப்பட்டிருப்பதுடன் ஒழுக்கீக கடவுடிக்கைகளைப்பற்றி சிறிதும் கவலையே எடுத்துக் கொள்ளாத அயோக்கியர்களான அவர்கள் சௌகரியமாகவும் க்ஷேமமாகவும் வாழ்கின்றார்கள்.

அயோக்கியத்தனம் என்பது ஒருவித தொத்து வியாதி போல் உலகில் தாராளமாய் பரவிக்கொண்டும் வருகிறது.

இது இப்போதிருக்கும் மனிதவர்க்கத்துடன் மறைந்து போவதாக இல்லாமல் இனிவரப்போகும் பின் சந்ததியார்களும் ஒழுக்கமற்றவர்களாகவும் ஞானமற்றவர்களாகவும் ஆக்கும்படி செய்கின்றது.

கடவுள் சகலத்தையும் தெரிந்தவரும் சர்வ வல்லமையும் உள்ளவரல்லவா?

அப்படி இருந்தால் தனது சகலத்தையும் அறியும் சக்தியைக்கொண்டு விவேகியும் கொடுமையும் எக்கெங்கிருக்கின்றது என்பதை அறிந்து தனது சர்வவல்லமையைக்கொண்டு அவைகளை ஒழித்து அயோக்கியர்களை வளரவிடாமல் என் செய்யக் கூடாது?

அன்றியும் கடவுள் என் கஷ்டங்களை அனுமதித்துக்கொண்டு பொறுமையாய் இருக்கும்படி செய்யவேண்டும்,

அயோக்கியத்தனத்தடனும் ஞானயற்றவுடனும் மகா கொடுமையுடனும் உலகம் நடந்து கொண்டே இருப்பதை அனுமதித்துக்கொண்டே இருப்பாரானால் பிறகு கடவுளுக்கு என்ன தான் யோக்கியதை இருக்கின்றது?

தாங்கள் சொல்லுவது போல் கொடுமை செய்கின்றவர்கள் தாங்களாகவே கெட்டுப் போகவும் தங்களுக்குத் தாங்களாகவே குழி வெட்டிக் கொள்ளவும் கடவுள் செய்வது உண்மையானால் அவர் என் அக்கிரமியங்களைக் கொடுமை செய்வதிலிருந்து விலக்கி கொடுமைகளை முளாயிலேயிள்ளிஎறிந்துவிடக்கூடாது?

அப்படிக்கில்லாமல் ஒருவனுக்கு கெட்டகாரியம் செய்யத் தாராளமாய் இடம்கொடுத்து விட்டு, அக்கெட்ட காரியத்தால் உலகமும் பிரஜையாக்களும் மக்களும் துன்பமும் அடையும்படிசெய்துவிட்டு, அதன் பிறகு கேடு செய்தவனை தாஞ்சை கெட்டுப் போகும்படி செய்து கொண்டிருப்பது எதற்காக?

உலகம் தாளுக்குதான் கெட்ட தன்மையிலேயே போய்க் கொண்டிருக்கின்றது. ஆதலால் உலகத்தை யோக்கியமாகவும் அயோக்கியர்களை அழித்து யோக்கியர்களை உண்டாக்கவும் செய்வதற்கு தனது சக்தியை உபயோகிக்காத ஓ! கடவுளிடத்தில் மனிதன் என் நம்பிக்கை வைக்க வேண்டும்?

அயோக்கியர்கள் தான்கள் அயோக்கியத்தனத்துடன் சௌக்கியமாகத் தீர்க்காயுடன் வாழ்வது எனக்கு சன்முய்த்தெரியும் அப்போப்பட்டவர்களால்மக்களுக்குத் துன்பம் இல்லாமலிருப்பதை முன்னிட்டாலது அவர்கள் என் சீக்கிரம் அழித்து போகக்கூடாது?

எனக்குக் கடவுளை நம்ப வேண்டும் என்கின்ற ஆசை உண்டு. ஆனால் நம்புவதற்குக் கொஞ்சமும் ஆதாரம் இல்லவே இல்லை. தயவு செய்து தங்களுடைய "யங் இந்தியா" பத்திரிகை மூலம் இயற்றிற்குச் சமாதானம் சொல்லி எனக்கு நம்பிக்கை உண்டாக்க வேணுமாய் கோருகிறேன்."

"இக்கேள்விகளுக்கு நிரு. காந்தியின் சமாதானமாவது:—

இந்தக் கேள்விகள் மிகப்பயங்கர கேள்விகள். இந்தக்கேள்விகளுக்கு ஏன்ன சொல்லக் கூடிய பதில் ஒன்றும் என்னிடத்தில் இல்லை. ஆனால் தான் என் கடவுளை நம்புகிறேன் என்பதற்கு மாத்திரம் சமாதானம் சொல்லக்கூடும்.

அதாவது:-

விவரித்துச் சொல்ல முடியாத ஒரு மறைவான சக்தி இருக்கிறது என்பதை தான் கண முடிவு நிற்கிறேன்; ஆனாலும் ஒருவரால் உணருகிறேன், ஆனால் அதனால் எவ்விதத்திலும் மற்றவர்களுக்கு நிரூபித்துக் காட்டமுடியாததாயிருக்கிறது. எதனால் அதை ஞான புலன்களின் சக்திக்கு மீறினதாய் இருக்கின்றது.

வேண்டுமானால் ஒரு அன்புக்கு கடவுள் இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் காட்டலாம்.

அதாவது ஒரு சாதாரண மனிதனுக்குத் தன்னை ஆளுகிற அரசன் யாரென்பது தெரியாத போதிலும் ஒரு அரசன் இருக்க வேண்டுமென்பதை அறிவு நிச்சயிக்கிறது. அதைப்போலவே ஒரு சாதாரண மனிதனுக்குச் சாதாரண சங்கதிகூட தெரியாமலிருக்கின்றது போல நம்போன்றவர்களுக்கு மகாவிசித்ர சங்கதியான கடவுள்விஷயம் புலப்படுவது என்பது சாத்தியமான காரியமல்ல. ஆனாலும் இந்த பிரமாண்டமான உலகத்தைப்படைத்து ஆட்சி செலுத்தும் சட்டம் ஒன்று இருக்கின்றதாகவான் அறிகிறேன், அந்தச்சட்டம்தான் கடவுள். அதைகான் மறுக்கமுடியாது. ஆனால் அந்தச்சட்டத்தைப்பற்றியாவது அச்சட்டத்தை வழங்குபவரைப்பற்றியாவது எனக்கு ஒன்றுமே தெரியாது.

ஒரு ராஜ்ஜியத்தை ஒரு அரசனை மறுப்பதால் அந்த ராஜ்ஜியத்தில் உள்ளவன் எப்படி அந்த ஆட்சியில் இருந்து விடுதலை பெற முடியாதோ அதைப்போல் கடவுளை மறுப்பதால் கடவுள் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுவிட முடியாது.

மொத்தத்தில் தெய்வீகமான சட்டம் ஒன்று இருக்கிறது எனபதை மறக்காமல் எற்றுக்கொண்டு அதற்குப்பணிந்து நடந்து வந்தால் வாழ்வு சுலபமாக நடைபெறும்.

கடவுளை உணரவிரும்புபவன் உறுதியான நம்பிக்கை கொண்டால்தான் முடியும். அந்த நம்பிக்கைக்கு வெளிஆதாரங்கள் தேடப்புறப்பட்டால் அதுமுடியாத காரியமாய்விடும்.

கடைசியாக மேற்கண்ட கேள்விகளுக்கு ஒழுங்குமுறையில் காரணங்கள்காட்டி மேல் கண்ட கேள்விகள் கேட்டவரை திருப்தி செய்யத் தர்க்க நியாயங்கள் எனக்கு எண்ணிடம் இல்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

கடவுள் நம்பிக்கை காரணகாரிய ஆராய்ச்சிக்கு எட்டாதது. ஆனதினால் நான் இக் கேள்விகள் கேட்பவருக்கு கடைசியாகசொல்லுவதென்னவெனில், சாத்தியப்படாத காரியத்தில் பிரவேசிக்கவேண்டாம் என்பதான்.

உலகத்தில் இருக்கும் கெடுதிகளுக்கும் கொடுமைகளுக்கும் அறிவினால் காரணம் காட்ட முடியாது. ஆனால் கெடுதிகள் இருப்பதையும் அதன் தன்மையும் அறியமுடியாததென்பதையும் நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

கடவுள் பொறுமையுள்ளவர் என்பதற்கு காரணமே அவர் கொடுமை உலகத்தில் நடக்க அனுமதிக்கிறதினால் தான். கடவுளிடத்தில் கெட்டகுணம் இல்லை எனபது எனக்கு நிச்சயமே. ஆனாலும் உலகில் எதாவது கெடுதி இருக்குமானால் அதற்கு அவரே காரணர். ஆனால் அவருக்கு அதில் சம்மதமில்லை".

(இதற்கு அவருடைய இங்கிலீஷ் வாசகமாவது)

"I call God long suffering and patient precisely because he permits evil in the world. I know that He has no evil in Him, and yet if there is evil, He is the author of it and yet untouched by it.....?"

என்று எழுதியிருக்கின்றார்.

எனவே அவர் சின்ன பதில்களிலிருந்து அவர் கட்டியிருக்கும் கியாயவாதங்களிலிருந்தாவது கேள்வி கேட்ட நண்பருக்கு ஏதாவது பதில் இருக்கின்றதா என்பதை கவனித்துப் பார்த்துப்படி வாசகர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இக்கேள்விகளை எப்படி திரு. காந்தி பழய கேள்விகள் என்று சொன்னாரோ அதே போல் அவருடைய சமாதானங்களும் பழய கதைகள் என்றுதான் சொல்லவேண்டும்.

என்னவென்றால், "கடவுளை அறிவதே அசாத்தியம்."

"அசாத்தியமான காரியத்தில் பிரவேசிக்காமல் இருப்பதே நல்லது."

"கடவுள் நம்பிக்கை தான் உண்டு."

"அதுவும் உறுதியாக நம்பிக்கையாக இருந்தால் தான் முடியும்" என்பன போன்ற சமாதானங்கள்.

ஆனால் ஒரு புதிய உதாரணம் காட்டியிருக்கிறார். அது என்ன வென்றால்:—

சாதாரண மனிதனுக்கு நம்மை அரசர்கள் யார் என்பது தெரியாதா? அது போல் நமக்கு கடவுள் என்பது தெரியவில்லையா. இது எவ்வளவு அசட்டுத்தனமான சமாதானம் என்பதை வாசகர்கள் யோசித்துப்பார்க்கவேண்டும்.

ஏனெனில் அரசன் எல்லோரும் தன்னை அறியும்படி செய்து கொள்ளத்தக்க சக்தி உடையவன் அல்ல. கடவுள் எப்பவோ சர்வ சக்தி உள்ளவர் என்பதை கேள்வி கேட்ட கண்பா முதலியாரையே குறிப்பிட்டிருக்கிறார்.

தனிர மற்றொரு புதிய விஷயம் கண்டுபிடித்திருக்கிறார். அதாவது,

கடவுள் இருக்கிறார் என்பதை விளக்காமல் போனாலும், இருக்கிறார் என்று வைத்துக் கொண்டால் வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடியுமாம். வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடிகின்றதற்காக ஒருவிஷயத்தை-தனக்கு எட்டாததை—தெரியாததை-நம்ப வேண்டும் என்று சொல்வதானால், வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் நடைபெற வேண்டியதற்கு சவுகரியமான வேறு அநேக காரியங்கள் செய்யக்கூடுமானால் அவைகளையும் செய்யச் சொல்லுகிறாரா என்பது விளங்கவில்லை.

ஏனெனில் பலவிதமான பூட்டு பிதலாட்டம் நிருட்டு முதலிய காரியங்கள் செய்து ஏராளமான பணம் சம்பாதித்தவர்களின் வாழ்க்கைப் பிரயாணம் சுலபமாக இருப்பதை நாம் பார்க்கிறோம்.

தனக்குத் தெரியாததான கடவுளை நம்பாமல் நிலையுள்ளையும் சாரமற்றதையும் நித்தம் போலத் தெரிகின்றதையும் நம்பி பாடிக்கொண்டு காலங்கழிப்பது சுலபமாகவும் சுலபமாகவும் கழிகின்றதை நாம் நேரில் பார்க்கிறோம். வாழ்க்கைப் பிரயாணம் எளிதில் முடிவதே முக்கியமானால் நாம் என்ன இவ்வளவு பிரயாசப்படக்கூடாது. இந்த மாதிரி போன்றதையில் மூழ்கியிருக்கும் போது எவ்வித இன்ப துன்பமும் தோன்றுமல் வாழ்க்கை கழித்து விடுகிறதா இல்லையா? பிறக்க,

தீமைகளும் கொடுமைகளும் கடவுளால் அனுமதிக்கப்படுகின்ற தென்றும் அதை நேரில் அவர் பொறுமைசாலி இகிறார் என்றும் சொல்லுவதை கவனித்தால் இது எவ்வளவு கவலை அற்ற பதில் என்பது விளங்காமல் போகாது.

எனெனில் கடவுள் பொறுமையால் மற்ற ஜீவன்களுக்கு எவ்வளவு கஷ்டம் இருக்கின்றது என்பதை உணர்ந்து பார்த்தால் விளங்கும்.

மற்றும் கொடுமைகளும் கெடுதிகளும் கடவுளிடம் இச்சை என்றும் ஆணையும் அக் கெடுதிகளை கடவுளே உண்டாக்குகிறார் என்றும் ஆனால் அவைகளில் கடவுளுக்குசிறிதும் சம்பந்தமில்லை என்றும் சொல்லுவது பரியாசமையல்லவா? சொல்லும் வாக்கியமாவது சகாயமாகும் ஒரு சமாதானம் சொல்லி கேள்வி கேட்டவர்களை எமாற்றினோம் என்பதைக் குறித்தாவது சிலாக்கிய வாக்கியமாவது என்பதை நடைபெறவில்லையே.

உலகில் மிகப் பெரியார் கூட்டத்திலும் மேதாவிகள் கூட்டத்திலும் கோடி ஒருவருக்கு சந்தர்ப்பம் கானும் கடவுள் பேரைச் சொல்லிக்கொண்டு இருப்பவரும் கடவுள் செயலில் அடிக்கடி உன்னார்ந்து அதன் பயனை அனுபவித்துக்கொண்டே இருப்பதாகச் சொல்லுபவருமாகிய ஒருவரே கடவுளைப்பற்றி சொல்லுவது இவரையல்லாமல் மற்றவர்களிடம் அதாவது கடவுள் பெயரையும் சமயத்தின் பெயரையும் சொல்லிக்கொண்டு வியாபாரஞ்செய்பவர்களிடம் இருந்து நாம் என்ன எதிர் பார்க்கமுடியும்?

அன்றியும் கடவுளைப்பற்றிப் பேசுகின்ற ஒவ்வொருவருவர்களும் "கடவுள் பெயரற்றவர், ரூபமற்றவர், குணமற்றவர்" என்பதையும் "அவர் மனதிற் கெட்டாதவர் இந்திரியங்களுக்கு அகப்படாதவர்" என்பதையும் அவருக்கு லக்ஷணமாகச் சொல்லுகிறோம், அதற்கு மேல் கடவுள் உண்டா இல்லையா என்கின்றதுபோன்ற கேள்விகளை அறிவதில் மானதமும் பலனற்றதும் என்பது நமது முடிவு.

ஏனெனில் இது ஆகாயத்தில் ஒரு கோட்டை இருப்பதாக வைத்துக்கொண்டு அதற்கு ஜன்னல் எவ்வளவு கதவு எவ்வளவு என்று சண்டை போடுவது போன்றது. அன்றியும் அவ்விதமில் ஈடுபடுவதைபோன்ற முட்டாள் தனமும் அசட்டுத்தனமுமான காரியம் வேறு இல்லை என்பதும் நமது முடிவு.

அலலாமலும் அப்படிப்பட்ட ஒரு கடவுள் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி அதைப்பற்றி நமக்கு கவலை வேண்டுவதில்லை என்பதும் நமது முடிவு.

ஆனால் கடவுளைப் பற்றிய விஷயங்கள் வரும்போது நாம் கவனிக்கவேண்டுவது என்னவென்றால், கடவுள் இருக்கிறார் என்று ஒருவன் ஒப்புக் கொள்ளுவதில் மூலம் அவனுடைய அறிவு வளர்ச்சியும் முயற்சியும் கெட்டு சோம்பேறித்தனம் உண்டாக கூடாது என்பதைப் பொருத்த மட்டில் நாஸ்திகம் ஒழிய வேறில்லை.

உதாரணமாக பரலோகம் என்று ஒரு லோகம் இருக்கின்றதென்றும் அதில் காகாரஜ என்கிற ஒரு அரசன் இருக்கின்றான் என்றும் ஒருவன் சொல்லிக்கொண்டு வருவதால், அந்த லோகம் எப்படி, அந்த அரசன் வீடு எப்படி, எவ்வளவு கேட்டுக்கொண்டு திரிய வேண்டியது ஒவ்வொருவனுடையவும் வேலை அல்ல.

அதுபோலவே இல்லாத பட்டணம் என்று ஒருபட்டணம் ஆகாயத்தில் இருக்கின்றது என்றும் அதற்கு அரூபி என்கின்ற ஒரு அரசன் இருக்கின்றான் என்றும் அவனுக்கு அனங்கள் என்கின்ற பஞ்சியம் (0சைபர்) பெண்கள் இருக்கின்றார்கள் என்றும் ஒருவன் சொல்லிக் கொண்டு திரிவானானால், அதை காட்டி என்ன பேட்டுக் கொண்டு திரிய வேண்டியதும் தவிர்வானுடையவுடன் வேலையல்ல.

மற்றும் என்னவென்றால்,

இம்மாதிரி புருசர்களையும் பெண்களையும் பற்றி எல்லாப்பக்கமும் கையாளிட்டால் அதற்காக நண்டனையென்று ஜீபர்தனை எற்படுத்தி "அந்த ராகாராஜாவே எனக்கு சோறு போட்டு வளர்த்து, தாய் கண்ணிகையே உலகத்தில் தாயாய் இருந்துவிடுவாள் மற்றும் நீ ஒன்றுக்கும் கவலைபடாதே" என்று சொல்லுவதைவற்றுக்கொள்ளச்செய்து மக்களது அறிவையும் சோக்தையும் சாருகோயும் பாழாக்கி அவர்களை வேறும் அர்த்தமற்ற அடிமைப்படுத்தி பட்டினிபோட்டு வதைப்பதில்தான் காணுகையோழிய வேறில்லை.

ஒருமனிதன் கடவுள் இல்லையென்று சொல்லுவானேயானால் அவன் உலகம் முழுவதும் "அதற்கு அப்பாலும் இப்பாலும்" என்பனைகளெல்லாம் அறிந்து சோலில் தேடித் தேடிபார்த்து காணவிட்டால்தான் சொல்லவேண்டும் என்பதும் முழுதும் தப்பல்ல. ஆனால் அதைப்பற்றிய முடிவைப்பற்றி நமக்கு இப்பொழுது ஒன்றும் அவசரம் இல்லை. ஆனால் அதற்கும்மனிதன் வாழ்க்கைக்கும் உள்ள சம்பந்தம் எவ்வளவு? அதற்காக மனிதனின் அறிவையும் சோக்தையும் பொருளையும் என் செலவு செய்து கொண்டே இருக்கவேண்டும்? இதுவரையில் அதைச் அப்படிச்செய்து வந்ததினால் மூலம் அடைந்த நன்மைகள் என்ன? அப்படிச் செய்வதினால்மூலம் ஏற்பட்ட அல்லது ஏற்படப்போகும் கெடுதி என்ன? கற்பனை பேண்தலைகளை இந்நிலையில் முக்கியமாக ஆராய்ச்சிக்குரிய விஷயமாகும். இந்த சந்தர்ப்பத்தில் வாசகர்கள் தயவு செய்து கடவுளைப்பற்றிய நம்பிக்கையும் கவலையில்லாத புத்தி நடந்து கொண்டதையும் கடவுளிடத்தில் நம்பிக்கை வைத்து அவரை அருள் பெற்றவர் என்பவரான சம்பந்தருடைய நடவடிக்கைகளையும் ஒப்பிட்டுப்பார்த்தால் கடவுளை நம்பினால்தான் யோக்கியனாக இருக்கமுடியுமா என்பதும் நம்பாதவன் எல்லாம் அயோக்கியனா என்பதும் விளங்காமல் போகாது.

இதை என் வலியுறுத்த சேரிடுகிறதென்றால் நமைமச்சுற்றியுள்ள மக்கள் படும் கஷ்டங்களும் நமகு ஜெனரியில் உள்ள காதிகளில் உள்ள மககன் மிஸையும் கடவுடிக்கையும் நானர் கண்ட அற்புதச் காகஸ்டையும் அறிந்து அதில் பெற்று கஷ்டப்படுகிறவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்கின்ற கருத்தைக்கொண்டே எழுதிய வேதலில்லை.

இந்த நிலையில் குடிடிச் சமயக்காரர்கள் தங்கள் நிலை என்ன? அவைகளின் அவியம் என்ன? அதனால் ஏற்பட்ட கன்மை என்ன?

ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் நியமனம்

ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவராயிருந்த திருராமநாதபுரம் ராஜா பாஸ்கர சேதுபதியவர்கள் காலமான பிறகு அந்த ஸ்தானத்திற்கு, அந்த ஜில்லாவில் கொடுமைப்படுத்தப்பட்டுவரும் சமூகப் பிரமுகர்களில்ஒருவரை நியமனம் செய்யவேண்டும் என்றும் நியமன அதிகாரங்களே சர்க்கார்தங்களுக்கு என்று ஒதுக்கிவைத்துக் கொண்டிருப்பதே அதற்காகத் தான் என்பதையும் சர்க்காருக்கு கொஞ்சகாலத்துக்கு முன்பாக பல பத்திரிகைகள் மூலம் எடுத்துக்காட்டப் பட்டது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

அன்றியும் அச்சிலாவில் செல்வாக்கும் நாகரீகமும் செல்வமும் அறிவு வளர்ச்சியும் பெற்ற சமூகங்களில் ஒன்றாகிய நாடார் சமூகப்பிரதிநிதிகளான பல கனவான்கள் சென்னை அரசாங்க கவர்னர் பிரபுவையும் ஸ்தல ஸ்தாபன இலாக்கா மந்திரியையும் தூது சென்று கண்டு தங்கள் குறைகளை தெரிவித்ததும் அதற்கு அவர்கள் நம்பிக்கையான பதில் அளித்ததும் வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

எனவே சர்க்கார் இது விஷயத்தில் பிரதிநித்துவப் பத்திரிகைகளினுடைய யோசனைகளை எற்றும் பிரதிநிதித் தூதுக்கூட்டத்தாரினுடைய ஆசையை மதித்தும் அந்த ஸ்தானத்திற்கு தென்னிந்திய நாடார் சமூகத்தில் ஒரு பிரமுகரான திருவாளர் W. P. A சௌந்திரபாண்டிய நாடார் அவர்களை நியமனம் செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

திரு. நாடார் அவர்கள் ஒரு பெரிய செல்வவந்தர், ஆங்கில பாஷை ஞானமும் உடையவர். இரண்டுதடவை சென்னை சட்டசபைக்கு அங்கத்தினராக நியமனம் செய்யப்பட்டவர். தற்காலம் சீர்திருத்த முறைப்படி ஏற்பட்ட அரசாங்க முறையில் பெறும் ஜனங்களின் போல் ஆதிக்கம் பெற்றகக்ஷியான சுயேச்சைக்கக்ஷியின் முக்கிய பொறுப்பாளியானவர். எனவே இப்பேர்ப்பட்ட கனவான் ஒரு ஜில்லா போர்டுக்கு தலைவராக நியமனம் பெற்றதில் யாதொரு அதிசயமும் இல்லை.

இந்நியமனத்தினாலேயே நாடார்சமூகத்திற்கோ அல்லது திரு சௌந்தரபாண்டிய நாடாருக்கோ பெரிய அனுகூலம் ஒன்றும் ஏற்பட்டுவிட முடியாதானாலும், சர்க்கார் கொள்கையும் படித்தப்பட்ட மக்கள் விஷயத்தில் சரியான கவனம்செலுத்த தங்கள் கண்களைத்திருப்பி இருக்கிறார்கள் என நம்புவதற்கு ஒருவாறு இடம் உண்டாயிருக்கின்றது. இந்தமுறையைசர்க்காரார் பின்பற்றுவார்களேயானால் இந்திய நாட்டிற்கு பிடித்த உள்நாட்டுச்'சனி' ஒருவாறு சீக்கிரத்தில் தொலைக்கதவிடம் என்றே நம்பலாம்.

என்னைகண்டு நாகரீகம் சற்று தங்களது நடு நிலைமை அறிவைக்கொண்டு போகிறார்களானால் அவர்களது மடமையும் இதுவரை தங்கள் வாழ்வு மிணைதும் ஒருசிறிதாவது அவர்களுக்கு புலப்படாமல் போகாது.

இவ்விஷயத்திலும் பல இடையூறுகள் ஏற்பட்டு சிறிதுகாலம் சர்க்கார்கையைப்பிடித்துக்கொண்டிருந்ததாகவும் தெரியவருகின்றது.

இதற்கு உதாரணம் 'சுதேசமித்திரன்' என்னும் ஒரு பார்ப்பனப்பத்திரிகையின் வயிற்றெரிச்சலைப்பார்த்தாலே தெரியவரும் அது 26—10—28 தேதி பத்திரிகையில் எழுதுவது என்னவென்றால்:—

"திரு சவுந்தரபாண்டியநாடார் சாமான்ய நிலைமையில் இந்தப் பதவிபெற்றிருந்தால் இதைப்பற்றி தோஷம்கூற இடம் ஏற்பட்டிருக்காது" ஆனால் இதை "மந்திரி கோஷ்டியினர் தங்களுடைய கக்ஷிக்கு பலம் தேடிக்கொள்வதற்காக செய்தகாரிய மென்று பொதுஜனங்கள் நினைப்பார்கள்" அன்றியும் "யாராருக்குஎந்தஎந்த வேலையைகொடுக்கவேண்டும் என்கின்றநிபார்சு செய்யவேண்டியபொறுப்புஏற்பட்டகொரடாவானவருக்கு அப்பதவி கொடுத்தில், கொடுத்தவருக்கும் ஏற்றுக்கொண்டவருக்கும் கௌரவமில்லை"

"ஸ்தலஸ்தாபனத்தில் தெருக்கிய பழக்கமும் அந்த ஜில்லாவில் நேரடியான சம்மந்தமும் அவருக்கு இல்லை" எனவே இந்த நியமனம் ஆக்ஷேபிக்கத்தக்கதாம்.

இது எவ்வளவு முன்னுக்குப் பின் முரண் என்பதையும் இதின் பார்ப்பனர்கள் தங்கள் ஆத்திரத்தைகாட்டிக்கொள்ள எத்தனை விஷமயுக்தியை உபயோகப்படுத்தி இருக்கிறார்கள்என்பதையும் இவர்கள் உள்ளுக்குள் எவ்வளவு இடஞ்சல்கள் செய்திருப்பார்கள் என்பதையும் இதிலிருந்தே ஒருவாறு அறிந்துகொள்ளலாம். அதையுமறுத்து திரு நாடாரை சாமான்யநிலையில்இருந்தபதவி அடைந்திருந்தால் தோஷம்கூற இடமிருக்காது என்று சொல்லுகின்றார். சாமான்ய நிலையில் அடைந்ததாக ஆவதற்கு என்ன வேண்டும் இப்போது திரு நாடாருக்கு ஸ்தலஸ்தாபன அனுபோகக்குறைவும் ஜில்லாவில் கோரிட சமபந்தமற்ற தன்மையும் மாறிவிடுமா என்று கேட்கின்றோம். முன் பின் பழக்கமில்லாததும் பாஷை தெரியாததுமான ஒரு நாட்டிற்கு திடீரென ஒரு பார்ப்பனை திவானாகவோ மந்திரியாகவோ போட்டு அவனுக்கு மாதம் 3000, 4000 ரூபாய்கிடைப்பதால் மைலாப்பூர்பார்ப்பனர்களுக்கு அது நல்ல நியமனமாகிவிடும்.

எந்த ஜில்லாவிலோ பஞ்சாங்கம் சொல்லிபிச்சையெடுத்து எந்த ஊரிலோ முனிசிபல் லாக்கர் வெளிச்சத்தில் படித்து எந்தகாரியம் பண்ணினீர் பாஷானதாக பெயர் வாங்கிவிட்டு எந்த ஊருக்குப் போய் எவ்வளவு பெரிய உத்தியோகம் பார்ப்பதானாலும் அது பார்ப்பனர்க்கு மாத்திரம் பொருத்தமானதும் திருத்தமானதுமான நியமனமாகிவிடும். உதாரணமாக மகாமகாகனம் சீனிவாச சாஸ்திரிக்கும் 33 கோடி மக்களுக்கும் தென் ஆப்ரிக்காவுக்கும் 4000 ரூ. சம்பளத்திற்கும் அவர் செய்த வேலைக்கும் பலனுக்கும் உள்ள சம்பந்தத்தை நினைத்தால், 2 தடவை சட்டசபையில் இருந்தவரும், வருஷம் ஏராளமான வருமானமுள்ள செல்வத்தை உடையவராயிருந்து அதை நிர்வாகம் செய்து வருபவரும், சமீப காலம் வரை மதுரையும் ராமநாதபுரமும் ஒரே ஜில்லாவாய் இருக்கும்போதும் இப்போதும் மதுரையையே தலைஸ்தானமாக உடையதுமானதாகியதில் அனுபோகம் பெற்றவரும் மற்றும் ஸ்தலஸ்தாபனங்களில் அங்கத்தவராய் இருந்தவரும், இந்த ஒரு சாதாரண வேலைக்கு பொருத்தமில்லை என்று இந்த பார்ப்பனர்கள் சொல்லுவது ஒரு அதிசயம்ல்ல.

அன்றியும் வேறு யாராவாவது நியமித்திருக்கக்கூடாதா? என்பதன்மூலம் இவர்கள் வேறு சில ஆசாமிகளுக்கும் வக்காலத்து வாங்கி முயற்சித்துப் பார்த்திருக்கின்றார்கள் என்பதும் இவர் இதை அடைந்ததில் தங்களுக்கு இஷ்டமில்லை என்பதும் நன்றாய் விளக்கும்.

எப்படியும் இந்த உலகம் உள்ளவரை இந்த மாதிரி ஒரு பார்ப்பனக்கூட்டம், தங்களுடைய அடிமை அல்லாதவர்களும், தங்களுடைய வைப்பாட்டி மக்கள்தான் மற்றவர்கள் என்பதை ஒப்புக்கொள்ளாதவர்களும், மற்றும் பார்ப்பனீயத்திற்கு அடிமை யாகமறுப்பவர்களும், சுயமரியாதையில் கவலை உள்ளவர்களும்எந்தப் பதவிக்கு வருவதானாலும் அவர்கள் விஷயத்தில்எதாவது ஒருகுற்றத்தை கற்பனை செய்தும் அவர்களுக்கு எதிரிகளையும் உள்ளகங்களையும் உற்பத்திசெய்தும் உபத்திரவித்துக் கொண்டே வருவார்கள் என்பது கல்லுப்போன்ற உறுதி.

நிற்க, பார்ப்பனர்கள் பேச்சைக் கேட்டோ அல்லது தாங்களாக ஆசைப்பட்டோ இந்தப் பதவிக்கு முயற்சி செய்த கனவான்களோ எதிர்பார்த்த கனவான்களோ யாராவது ஒருவர் இருவர் இருக்கலாம். எனினும் அயற்கைப்பற்றி இனி கவனம் செலுத்தாமல் ராமநாதபுரம் ஜில்லா போர்டு மெம்பர்கள் திரு. நாடாரவர்களுடன் ஒத்துழைத்து அவரது கீழ்மைப் பதவியை நாட்டுகும் மக்களுக்கும் பயன்படும் முறையில் நடத்திக்கொடுக்க உதவிபுரிய வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். எவ்வளவு பெரிய கூட்டமானாலும் அதில் ஒரு பார்ப்பனர் இருந்துவிட்டால் எப்படியாவது கலகத்தை மூட்டிக் காரியத்தைக் கெடுத்துக் கொண்டே இருப்பார்கள் என்பது பழமொழியும் அனுபவமுமாகும்.

ஆகலால் அப்பழ மொழியையும் அனுபவத்தையும் ராமநாதபுர ஜில்லா போர்டு மெம்பர்கள் மறக்காமல் இருக்க வேண்டுமாய் ஆசைப்படுகின்றோம்.

கடைசியாக இந்நியமனத்திற்காக தமது உறுதியை உபயோகித்த மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களை பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

திரு. நாடார் அவர்கள் உறுதியுடன் நின்று அந்தப் பதவியை வெற்றியுடன் நடத்துவதில் கொடுமைப்படுத்தப்பட்ட மக்களுக்கும் தக்கபடி பயன் படுத்துவார்கள் என்று நம்புகின்றோம்.

அறிவு என்றைக்கு அடிமைப்பட்டதோ அன்றைக்கே உடலும் அடிமைப்பட்டு விட்டது.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ரைக்காலி செய்து போகும்வரையில் இப்போது அவ்வூரிலிருக்கும், சந்தை, பள்ளிக்கூடம், தபாலாபீஸ் இவைகளை எடுக்காமல் வைத்திருக்கவேணுமாய்- (டி) அவசாதிதாலூகா ஒடத்துறை, நெல்லித்துறை குடிகள் நீர்க்கூலி நஞ்சை சாகுபடிக்கு இவ்வருஷம் முன் மழையில்லாததால் டிசம்பர் மாதம் 15 தேதிக்கு மேல் 4 மாதம்வரை இவ்வருஷத்துக்கு மட்டும் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள உத்திரவு செய்யவேணுமாய விசேஷ காரணங்களுடன். (இ) இந்த ஜில்லாவிலுள்ள சிகஸ்தாயிருக்கும் குளம், குட்டைகளை தற்காஸ்தின் பேரிலாவது, கிராயத்துக்காவது கொடுக்கக்கூடாதென்பதாய் (எல்லா தாலூகா போர்டுக்கும் கூட) (எவ்) விவசாய நிலவிருத்தி சம்மந்தமாய் குடியானவர்கள் சர்க்காரிலிருந்து வாங்கும் தக்காவி கடன்களுக்கு இப்போதைவிட வட்டி குறைத்துக் கொடுக்கவேணுமாய்:

7- கோயமுத்தூர் தாலூகா நரசிம்மநாயக்கன் பாளையம், அவசாதிதாலூகா புதுப்பாளையம் இந்த க்கிராமங்களின் குட்டைகளையும் ரிபேர் செய்து கொடுக்கவேணுமாய் சங்கத்துக்குவந்தமகஜரின் பேரில் மகா-ள-ள-ஸ்ரீ கலெக்டரவர்களின் அனுகூலமான அபிப்பராயத்துடனும் கோயமுத்தூர் தாலூகா போர்டுக்கு அதுவிஷயமாய் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

8- கவர்ன்மெண்டாரைப் பலமுறை கேட்டுக்கொண்டும் மறுதளித்துவிட்டபடியால் நமது டிஸ்டிரிக்டு போர்டாவது இந்த ஜில்லாவில் வசதியான ஒரு இடத்திலாவது ஒரு குண்டுக்குதிரையை தங்கள் சிலவில் வைக்கும்படியாய் டிஸ்டிரிக்டு போர்டு பிரசிடெண்டு அவர்களைக்கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது:

9- (எ) இந்த ஜில்லாவில் தாராபுரம், பல்லடம் முழுவதும், ஈரோடு தாலூகாவில் தென்பாகத்திலும், ஆடி மாதத்தில் பெய்யவேண்டிய பருவமழை இதுவரை பெய்யாததாலும் கால் நடைகளுக்கு தீவன பஞ்சம் ஏற்பட்டிருப்பதாலும், குடியானவர்களுக்கு கால்நடை தீவனம் வாங்குவதற்காக குறைந்த வட்டிக்கு சர்க்காரிலிருந்து உடன்கொடுக்கவேண்டுமாயும்- (பி) இந்த ஜில்லாவிலேயே கால்நடை தீவனம் கிடைப்பது அரிதாய் விட்டதாலும், அடுத்த திருச்சிலுப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் மாட்டுத்தீனி ஏராளமாய் இருப்பதால் கவர்னமெண்டாரே அவ்விடத்திலிருந்து கொண்டுவந்து திருப்பூருக்குக் கிழக்கேயுள்ள முக்கிய ஸ்டேஷன்களில் டிப்போ வைத்து அசலுக்கே மாட்டு தீனியை விற்பனை செய்யவேண்டுமாயும் (சி) நேரே அவ்விதம் வாங்கிவரும் குடியானவர்களுக்கு குறைந்த ரயில் ஜார்ஜ் கிடைக்கும் வசதி செய்யவேணுமாய்- (டி) அது விஷயமான விண்ணப்பங்களை தாமதம் செய்யாமல் தைல் யெய்யவேணுமாயும்- (இ) தற்கால மாட்டுத்தீனி பஞ்சத்தை உத்தேசித்து இலவசமாய் நம் ஜில்லாவிலுள்ள எல்லா டாரஸ்டுகளிலும், ஜலவசதியோடு கூடியிருக்கும் மலை அடிவாரங்களிலும் புல் மேய்த்துக்கொள்ளவும், புல் அறுத்துக்கொள்ளவும் அனுமதிக்கும்படியாகவும் கலெக்டர் தூரையவர்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது-

16—10—28.

வெள்ளக்கிணர் போஸ்டு, கோயமுத்தூர்- } வி.சி. வெள்ளிங்கிரி கவுண்டர், கௌரவ காரியதரிசி.

சின்னமனூர் பஞ்சாயத்து தலைவர் தேர்தல்.

19-10-28-ல் கருங்கட்டாங்குளம் திரு. கி. மு. பொன்னுச்சாமித தேவர் அவர்கள் மறுமுறையும் இவ்வூர் பஞ்சாயத்து கோர்ட்டு பிரசிடெண்டாக ஏகமனதாய் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்- ஒரு நிருபர்-

பஞ்சம சகோதரர்களின் பரிதாபநிலைமை.

மதுரை ஜில்லா உத்தமபாளையம்தாலூகா ஆண்டிப்பட்டி போஸ்டாபீசானது அக்கிராரத்துக்குள் வைக்கப்பட்டும் பிராமணர் போஸ்மாஸ்டராக நியமிக்கப்பட்டிருப்பதால் பஞ்சமர்கள் வெடி போஸ்டாபீசுக்குள் வரக்கூடாதெனவும் வெளியில் சுமார் 1/4 பர்லாங்கு தூரத்திலேயே நின்று வெடி போஸ்டாபீசுக்கு தகடயன்னியில் வரவேண்டிய ஆசாமிகளைக்கண்டுபிடித்து அவர்கள் மூலமாகத்தான் பஞ்சமர்கள் கார்டு கவர் ஸ்டாம்பு முதலியன பெற்றுக்கொள்ளவேணுமென்றும் செய்திருப்பது மிகப்பரிதாபமாகயிருக்கிறது. பஞ்சமர்களுக்கு கார்டு கவர் ஸ்டாம்பு முதலியன தேவைப்படுவதால் அவர்கள் அக்கிராரத்துக்குள் தாராளமாய்ப் பிரவேசிக்கக்கூடிய ஆசாமிகளை தேடிப்பிடித்து கெஞ்சிக்கேட்டால், இரக்கமுள்ள புண்ணியவான்களாயிருந்தால பஞ்சமர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு போய் போஸ்மாஸ்டரிடம் கொடுத்து ஸ்டாம்பு வாங்கிக்கொடுக்கின்றார்கள்-சிலர் 'இதுதான் எனக்கு வேஸ்லையோ' வென்று போய் விடுகிறார்கள். ஆகவே சில சமயம் ஏழை சகோதரர்கள் கார்டு கவர் ஸ்டாம்பு முதலியன வாங்க முடியாமல் திரும்பி வந்து விடவேண்டியதாயும் ஏற்படுகிறது- ஆண்டிப்பட்டி போஸ்டாபீசைச்சேர்ந்த சுமார் 15 கிராமங்களிலுள்ள பஞ்சமர்கள் இது விஷயமாக ரொம்பவும் கஷ்டப்பட்டுவருகிறார்கள்.

அநேக தடவைகளில் இவ்விதம் ஜனங்கள் கஷ்டப்படுகிற பரிதாபத்தைப் பார்த்து யானே எனது மூக்கிய ஜோலிகளை விட்டுவிட்டு பஞ்சமர்களுக்கு ஸ்டாம்பு முதலியவை வாங்கிக்கொடுத்துவிட்டு அதன் மேல் எனது சொந்த ஜோலிகளைப் பார்க்க நேர்ந்திருக்கின்றன-

ஆகையால் ஏழை ஜனங்களின் பரிதாப நிலைமைக்கிரங்கி வெடி போஸ்டாபீசை பொது ஸ்தலத்தில் வைத்து யாவரும் யாதொரு தடையன்னியில் கார்டு கவர் ஸ்டாம்பு முதலியவைகளை கலாகாலத்தில் பெற்றுக்கொண்டு போகவேண்டிய யேற்பாடு களைச் செய்து வைக்கவேணுமாய் ரொம்ப வணக்கமுடன கேட்டுக்கொள்கிறேன்.

'உள்ளூர் வாசி.'

திருநெல்வேலி தேவஸ்தானம்.

கமிட்டி தேர்தல்கள்:— தென்காசி தாலூக்கா சர்க்கிளுக்கு இலஞ்சி திரு ஐ- எஸ். சுப்பிரமணிய பிள்ளையும வெள்ளக்கால் திரு- வி- பி- ராமலிங்க முதலியாரும், அம்பா சமுத்திரம் சர்க்கிளுக்கு வக்கீல் திரு- சிவஞானம் பிள்ளையும், திரு. எஸ் ஆர். எம்- இராமனுதய்யரும் கார்குறிச்சி திருசங்கரா ராயணய்யரும், சங்கரநாரிதாலூக்கா சர்க்கிளுக்கு திரு குருவப்பாரெட்டியாரும் திரு. எஸ்- இசக்கியரும், திருநெல்வேலி தாலூக்கா சர்க்கிளுக்கு திரு எம்- பாபு செட்டியாரும் திரு வி. எம். கலியாண சுந்தரம் பிள்ளையும் திரு டி- கணபதிராமய்யரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்-

தென்னிந்திய சாம்பவர் மகாஜன சபை

5—9—1928 ல் செங்கோட்டை தாலூக்கா கட்டளை குடியிருப்பில் மாலை 5 மணிக்கு இக் கூட்டம் கூடியது. பற்பல கிராமங்களிலிருந்து பொதுக் கூட்டத்தார் வந்திருந்தனர்- சங்க பிரசிடெண்டு கனம் மேஜர் ஏ. ஜீ. டன்னிங் கி. எ-ஐ. அ- டி- துரையவர்கள், அக்கிராசனம் வகித்தார்கள். சங்கக் கூட்டம கனம் ஜேசெக் மோசஸ் அவர்களால் திறக்கப்பட்டது-

தீர்மானங்கள் பின்வருமாறு:—

சென்னை கவர்ன்மெண்டார் ஏற்படுத்திய லேபர்மாரட்டு மெண்டு தலைவராகிய கால ஞ் செக்ரட்ட ச-- ஸ்பர்ஜ்மாடிசன் துரையவர்களும், அவரது பின் உத்தியோகம் வகித்தவரும். இம்மட்டும் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் நன்மைக்கென்று உழைத்து வந்ததை நன்றியுடன் அங்கீகரிக்கிறோம்-

2 திருவாங்கூர் கவர்ன்மெண்டார் நம்முடைய சமுதாயத்திலிருந்து மிஸ்டர். கே- மகாதேவன் அவர்களை சட்ட நிருபண சபைக்கு ஒரு மெம்பராக தெரிந்தெடுத்ததற்காக திருவாங்கூர் கவர்ன்மெண்டாருக்கு நன்றி செலுத்துகிறோம்-

3- திருவாங்கூர் கவர்ன்மெண்டார் தாழ்த்தப்பட்டவர்கள் காரியத்தை விசாரிக்க பூரா நேரத்தையும் செலவிடக்கூட ஒரு உத்தியோகஸ்தரை நியமிக்கக்கேட்டுக் கொள்ளுகிறோம்-

4 திருவாங்கூரில் ராவ்பகதூர் டி- பத்மநாதராவ் அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பில் திருவனந்தபுரம், வஞ்சியூர் சர்க்கார் உயர்தர பள்ளிக்கூடத்தில் படிக்கிற சகல ஜாதி ஏழைப் பிள்ளைகளுக்கும் பகல்சாப்பாடு வகைக்கு ஆரை லட்சம் ரூபாய் திருவாங்கூர் கவர்ன்மெண்டாரிடம் ஒப்புக்கொடுத்திருக்கிறதற்காக ராவ்பகதூர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த கன்றியறிதலை இக் கூட்டத்தின் மூலமாய்த்தெரியப்படுத்துகிறோம்-

5 தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தபிள்ளைகள் பரம ஏழைகளாயிருப்பதால் நாலேஜில் பீஸ் இல்லாமல் இலவசமாய் படிக்கத் திருவாங்கூர் கவர்ன்மெண்டார் உத்தரவளிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சிறுவர்களால் குணபோன சரித்திரம் மிப் பாட்டுகள் பாடப்பட்டு கடவுள் வாழ்த்துடன் கூட்டம் இனிது கலைந்தது-

எம்- ஜேக்கப், செக்ரடெரி-

தென்னற்காடு ஜில்லா 7 ஆம் கூட்டுறவுச் சங்கம்

தென்னற்காடு ஜில்லா 7-வது கூட்டுறவுச் சங்கமும், கைத்தொழில் விவசாய பொருட்காட்சியும் அக்டோபர் 30, 31 தேதிகளில் விருத்தாச்சலத்தில் நடைபெறுவதால் இப்பொருட்காட்சிக்கு சாமான்கள் அனுப்ப விருப்பமுடையவர்கள் முன்னுடியே தெரியதரிசிக்கு விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டியது-

காரியதரிசி.

பார்ப்பனீயம் ஒழிந்த சடங்குகள்.

1 ஈரோட்டைச் சேர்ந்த சூரம்பட்டி கிராமத்திலிருக்கும் திரு- ஆறுமுகக்கார மாரப்பகவுண்டர் அவர்கள் மாமிய அமாவாசையன்று தமது வீட்டில் பார்ப்பனர்கள் சொல்லும் வைதிகப்படி சடங்குகள் செய்ய சௌகரியமில்லையென்று ஒவ்வொரு வருஷமும் 2 ரூபாய் கொண்டுபோய் புரோகிதப்பார்ப்பார் ஒருவரிடம் கொடுத்து சகல சடங்குகளையும் புரோகிதர் மீட்டிலேயே முடித்துக்கொண்டு அவர்கள் எல்லோரும் சாப்பிட்டமீதியை சாப்பிட்டு விரதத்தை முடித்துக்கொள்ளுவது வழக்கம். இவ்வருடம் சூரம்பட்டியில் திருவாளர் இராமசாமிகாயக்கர் அவர்கள் சுயமரியாதைச் சங்கம் ஒன்று திறந்துவைத்து பிறகு மேடை சங்கத்தில் 'குடி அரசு' 'ரிவோல்ட்' பத்திரிகைகளை வாசித்து, உண்மைகளை அறிந்து பதிலுபகாரச் சிறப்பட்டு ஐப்பசி மாதத்தில் வரப்போகும் புரட்டாசி மாதத்தில் நிருபணம் காரத்திகை மாதத்தில் திருப்பணி தை மாதத்தில் திருப்பதித்தம காரத்திகை மாதத்தில் திருவண்ணாமலைக்கும் பிரயாணத்திற்கும் உள்ளூரில் மார்கழிமாதம் மாரியம்மனுக்கும் மாசிமாதம் மாகாளியம்மனுக்கும் விசேஷம் செய்யும் பணத்தைக்கொண்டு எனது அருமையான ஒரே மகனை நன்றாய் வாசிக்க வைத்திருந்தால் இல்லது ஒருகாடு வாங்கியிருந்தால் நல்ல பிரயோஜனத்தை அடைந்திருக்கலாமே" என்று தெளிந்தறிவு வேர்வருஷமும் எண்ணியும், பின்னாளும் பழையது சாப்பிட்டுக்கொண்டிருக்க தாம்மாத்திரம் புரோகிதர் வீட்டில் விலாப்புடைக்க சாப்பிட்டு வந்தது, மிக அநியாயம் என்று உணர்ந்து சென்ற மாதம் மாளய அமாவாசையன்று, புரோகிதப் பார்ப்பானுக்கு கொண்டுபோய் கொடுக்கும் பணத்துக்கு அரிசி, பருப்பு முதலான சாமான்கள் வாங்கி வந்து அதுகளை அண்டை சமைத்து படைத்து தமது பந்துமித்திரர்களோடும் மனைவி மக்களோடும் திருப்தியாகச் சாப்பிட்டார்.

ஒரு நிருபர்

2 சேலம் ஜில்லா ஆத்தூர் தாலுக்காவிலிருக்கும் ஸ்ரீமான்களை சடையப்பக்கர் அவர்களும் வ. முத்துக்கருப்பணக்கர் அவர்களும் சென்ற ஆவணியில்ச்ச அமாவாசையன்று தமது ஒருயிர் தாய் தகப்பனாரின் ஞாபகார்த்தமாக செய்ய வேண்டிய சடங்குகளை பார்ப்பனரின்றி தாமேசெய்து முடித்தார்கள்.

3 கோயமுத்தூர் தாலுகா இடிகரைகல்லாமேடு ஸ்ரீமான் ஆசசு கவுண்டர் அவர்கள் தமது தகப்பனார் திதியன்று 13-10-28 சனிக்கிழமை பார்ப்பனீயத்தை ஒழித்து தமது பந்துக்களுக்கும் நண்பர்களுக்கும் விருந்தளித்து காரியங்களை முடித்தார்.

4 கண்டிய அந்தர வர்ணகாமத்தில் வசிக்கும் திருநெல்வேலி ஜில்லா மூன்னீர் பள்ளம் நண்பர் சு- பிச்சையா பண்டிதர் கடந்த 10 வருடமாய் பார்ப்பனர்களைக்கொண்டு நடத்தி வந்த தமது தகப்பனார் திதிச்சடங்கை சனிமை 19—10—28-தேதி வெள்ளிக்கிழமை யன்று பார்ப்பனீயமின்றி எழை களுக்கும் பந்து மித்திரர்களுக்கும் அறுசுவை அன்ன மளித்தார்கள்-

5 முகிளித் தாலுகா மாத்தைபக்கார் பேட்டை கிராமத்திலிருக்கும் கணக பண்டாரம் சின்னதம்பி பிள்ளையவர்கள் தங்கள் தகப்பனாருக்கு 10 வருடகாலமாக பார்ப்பனரைக்கொண்டு நடத்திவந்த வருஷ திதியை சுயமரியாதையை முன்னிட்டு இவ்வருஷம் ஐப்பசி-மீ 4-ம் தேதியன்று புரோகிதமின்றி தன்பர்களுக்கும் எழைகளுக்கும் அன்னமளித்து முடித்தார்.

6 நிகழும் விரோதி சுக்கிரவாரம் 4ம் தள் முற்பகல் சட்டசபை மெம்பரும், ஸ்தலம் ஐக்கிய பாங்கு காரியதரிசியும் ஆகிய திருவாளர் செல்வர் வீ- செல்லப்பபிள்ளை அவர்களின் வீட்டில் நடந்த ருது சாந்திக் கடைக்கு முற்றும் பார்ப்பனீயம் ஒழித்து செய்யப்பட்டு பந்து மித்திரர்களுக்கும் எழைகளுக்கும் விருந்து அளிக்கப்பட்டது.

7 நிகழும் 1104ம் ஆண்டு ஐப்பசி திங்கள் எட்டாம் நாள் திருநெல்வேலி ஜில்லா பாளையங்கோட்டை புதுப்பேட்டைக் கிராமவாசிகளும் பிள்ளைமார் சங்கத்தலைவருமாகிய திரு. உ.க. முத்துசாமி பண்டிதர் அவர்கள் குமாரன் திரு. பிச்சையாவுக்கும் மைதீயாருவன்குளம் திரு. ரா. சாமிபண்டிதர் அவர்கள் குமாரத்தி சௌ. இசக்கி அம்மாளுக்கும் நடை பெரியார்களால் மாணவுதாபம் நிகழ்த்தப்பட்டது.

8 திருநெல்வேலி ஜில்லா, பி- டி- முத்தவேல் அண்டு கம்பெனி புரோப்ரைட்டரும் 'குடி அரசு' 'ஜஸ்டிஸ்' பத்திரிகைகளின் வாஜண்டமான திரு- எம்- சோமசுந்தரம் பிள்ளைக்கும், ஆழ்வார்குறிச்சி கர்ணம் திரு- சுப்பிரமணிய பிள்ளையவர்கள் திருமகளார் ஸ்ரீமதி ராமலெக்ஷ்மி அம்மாளுக்கும் நிகழும் விஜய வருடம் ஐப்பசி மாதம் 12-தேதி ஞாயிற்றுக் கிழமையன்று சிறப்புத்திருமண நடைபெறும்-

மாணவுதாபச்சடங்கு.

மேட்டுப்பாளையம் வாசி ஸ்ரீமான் வேதசலத்தின் மகளார் திரு. அ. நாகமுனியரின் மனைவியும் பொன்ற தனம பிரசாகரும் ஆகிய ஸ்ரீமதி முத்துமேகலை 1928 வது செப்டம்பர்மீ 3 தேதி திங்கட்கிழமை பஞ்சஸ்கந்தப்பிராணனையுற்றதை முன்னிட்டு செப்டம்பர்-மீ 25-தேதி மேல்விலிருள்ள பொன தம மில்லா' கிருகத்தில் கட்டளை பொன்ற சங்காதிபர்களால் மாணவுதாபம் நிகழ்த்தப்பட்டது.

ஆண்மையுண்டா?

சிங்கப்பூர் "தினவர்த்தமானி" பத்திராதிபருக்கு டகிரக்கக கடிதம்-

ஐயா, கேற்று நங்கள பத்திரிகையில் 'நீதம் என்பது ஸ்தானே" என்ற தலைப்பின் கிழ் "உலகுக்கு நன்மை பயக்காத வீண் கடிதங்களின் கேள்விகளுக்கு மன்மதசாமி காமுட்டிவிட்டகையில் லாவணிக் கட்சியுள் பதில் கிடைக்கூடிய கேள்விகளின் பிறப்பிடமாகி. வியாசங்கள் வரைந்த நாங்கள் எக் கட்சியைச் சேர்ந்தவர்? எத்தன்மையுடையவர்? என்பதைப் பொது ஜனங்கள் அறியமாட்டார்களென்று கனவு கண்டது முழுப் பைத்தியகாரத்தனமேயாகும- ஆகலால் இனியேனும் இவ்விதம் அற்பத்தனங்களினீடுபடாது எனது கடிதங்களைப் பிரசுரித்து "வீன்" என்பதை நிரூபிக்க ஆண்மையுண்டா? எனவே அறை கூவி அழைக்கின்ற, கோ- சாரங்கபாணி-

அம்பலூர்

பிராமணரல்லாதார் வாலிப சங்கம், 1928-வது அகடோபர் மீ 20 உ சனிக்கிழமை மாலை 4 மணிக்கு எஸ். அர்சுன கவுண்டர் பூந்தோட்டத்தின் கண் சங்கத்தலைவரின் தலைமையில் கீழ்காரியகமிட்டிகூடியது.

திருவாளர்கள் கே. கந்தசாமிக் கவுண்டரும் கே. சண்முக கவுண்டரும் முறையே பொக்ஷதாரகவும் காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நிற்க, நவம்பர் மாதத்தில் தஞ்சை ஜில்லாவில் கூட்டப்போகும் மகாநாட்டுக்கு திருவாளர் எ. ராமசாமி முதலியாரும், சுயமரியாதை மகாநாட்டிற்குத் திரு. ஏர். கே. சண்முகம் செட்டியாரும், இளைஞர் மகாநாட்டிற்கு திரு- கம்பண்ணைச் செட்டியாரும் மகாநாட்டுக்கு அனுப்ப சங்கத்தின் பிரதிநிதிகளாக திருவாளர்கள் எஸ். அர்சுன கவுண்டரும் கே. கந்தசாமி கவுண்டரும், எம். விஜயாங்கமும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். கூட்டம் கலையுமுக்கு வந்தவேளைதானது கூடன் இரவு 7 மணிக்கு இனிது கலைந்தது

வெள்ளி நகைகள்.

சுத்தமான வெள்ளி ! நேர்த்தியான வேலை !!

நம்மிடம் அரைஞாண், முடிச்சுருத்திக்கொடி, முகப்பு போட்ட கொடி, சாதா செயின் கொலுசு, முத்துசெயின் கொலுசு, டைமண்ட்பட்டை செதுக்கிய செயின் கொலுசு, புதுச்சேரி கொலுசு, மாங்காய் பட்டை கொலுசு, கடகம், கால் தண்டை, மயிர் மாட்டி, அறப்பு சங்கிலி, சாவி கொத்து, போல் காப்பு, சலங்கை இன்னும் பலவித வெள்ளி நகைகளும், கடுக்கன், கம்மல், தோடு, மூக்குத்தி, மோதிரம் முதலிய கல் நகைகளும் தயாராகி வியாபாரிகளுக்கு மொத்தமாயும் விலை சரசமாயும் அனுப்பப்படுகின்றன. ஒரு முறை ஆர்டர் செய்து பாருங்கள். மற்ற விபரங்களுக்கு லெட்டர் எழுதுக.

B. N. கெங்காராமய்யர்,

நகை வியாபாரம், செவ்வாய்ப்பேட்டை, சேலம். (S. India)

மதிப்புரைகள்.

தப்பிலி

இந்நூல் திருவாளர் மு. சி. பூரணலிங்கம் பிள்ளை பி. எ. எல். டி., அவர்களால் எழுதப்பட்டஒரு ஆராய்ச்சி நூலாகும். இதைப்பெரும்பாலும் ஆராய்ச்சியென்றேகூறலாம். இதில் "திகண்புலத்தார்" என்ற குறளுக்கும், "ஆபயன் குன்றும்" என்ற குறளுக்கும் எழுதப்பட்டிருக்கும் ஆராய்ச்சியுரை தமிழால் மிகவும் கவனிக்கற்பாலதாகும். தமிழ் நான்மறைகளின் வாலாறும், கூறப்படுகின்றது. இதில் ஆசிரியர் வாழ்க்கை வரலாறும், உருவப்படமும் காணப்படுகின்றன. இச்சுவடி, ஆசிரியரின் நுண்ணறிவைக் காட்டுவதுடன், தமிழர்களின் சிறப்பையும் விளக்கக்கூடியதாக விருக்கின்றது. இதன் விலை அணு 10. வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இராவணன்:- இப்பெயர்கொண்ட ஆங்கிலபுத்தகமொன்றுவாப்பெற்றோம்- இதுவும் திரு. மு. சி பூரணலிங்கம்பிள்ளை பி எ எல் டி அவர்களால் எழுதப்பட்டது. இதில் இராவணன் தமிழ்மகன் என்பதற்கு ஆதாரமும், அவனது பெருமைகளும் வீரத்தின் சிறப்பும் எழுதப்பட்டிருக்கின்றது. இதனால் இராவணனுடைய உண்மையான உயர்வையும் ஒழுக்கத்தையும் "ஆரியமுனிவரால் இராவணனைப்பற்றி எழுதப்பட்டது ஆனைத்தும் தமிழ் மக்களை இழிவுபடுத்தும் நோக்கத்துடனேயே" என்பதையும் உணரலாம். ஆராய்ச்சியாளர்க்கு மிகவும் உபயோகமானதாகும். வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை B. A. L. T.
ஆங்கில ஆசிரியர், முன்னீர்ப்பள்ளம்
திருநெல்வேலி

ஃஃ ஃஃ ஃஃ

ஜீவகாருண்யம்:-இதுஓர் சொற்பொழிவு- இது திரு. ஆ. கு. முருகேச முதலியார் அவர்கள் நிகழ்த்தியதாகும். இதில் மாக்கறியுணவின் மேன்மையைப்பற்றியும், ஏழை மக்களையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் மேன்மையுறச்செய்யவேண்டுமென்பதைப் பற்றியும் விரிவாகக்கூறப்பட்டிருக்கின்றது. இது சமூக ஊழியர்கள் படிக்கவேண்டியதாகும் இதன் விலை அணு 1. வேண்டுவோர் கீழ்க்கண்டவிலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

ஜீவகாருண்யசங்கம் இராபர்ட்சன்பேட்டை
கோலார் தங்கவயல்.

ஃஃ ஃஃ ஃஃ

சிவஞானபோதப் பொழிப்புரை

இது சாலிவாடிதிரு. டி எஸ் காந்திமதிநாதன் பி எ அவர்களால்எழுதப்பட்டதாகும்-இதில் சைவசித்தாந்த மதத்திற்குத் தமிழ்மூல்நூலாகிய சிவஞான போதத்தின் 12 சூத்திரங்களுக்கும் உரை எழுதப்பட்டிருக்கின்றது. சைவ-சித்தாந்தத்தை அறிய விரும்புவோர் இதனைப்படித்து எளிதிற்தெரிந்துகொள்ளலாம். இது "சைவசித்தாந்தம் மிகவும் கஷ்டமானது அதனைக் கற்கவேண்டுமானால் நிறைந்தபெற்றகுருவினிடங்காத்திருந்து கற்கவேண்டும்" என்ற கூற்றை வாதிகளின் பிழைப்பைக்கெடுப்பது- வீணில்லாமல்இலவசமாகக்கொடுக்கப்படுகிறது. வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு ஸ்டாம்பு அனுப்பிப்பெறலாம்.

டி எஸ் காந்திமதி நாதன் பி. எ., சாலிவாடி
திருநெல்வேலி.

ஃஃ ஃஃ ஃஃ

சசிகுலதீபம்: இதுஉடுமலைப்பேட்டை திரு யு. எஸ். ராமசாமி நாயுடு அவர்களால்இயற்றப்பட்டதாகும். இது பாரதத்தைப்பற்றியும் கர்ணன், திரௌபதை பாண்டவர் முதலியவர்கள் செயல்களைப்பற்றியும் சிறப்பித்துக் கூறும்ஒருபுத்தகமாகும். ஆன்றோர்பாரதகாலத்து ஆசியல் முறையைப்பற்றியும் ஒழுக்கங்களைப்பற்றியும அறிவிப்பதாகும், வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்பெறலாம.

"வித்யா விநோதினி" "நாவிய சாரதி"
யு. எஸ். ராமசாமி நாயுடு
உடுமலைப்பேட்டை.

மந்திரக்காரர்களுக்கும் மந்திராபிமானிகளுக்கும் ஓர் அறிவிப்பு.

மேலேகாண்ட தலைப்பின்கீழ் 28-7-28-ல் "குடி அரசு" பத்திரிகையில், மந்திரம் என்பது பொய்யென்றும் வயிற்றுப் பிழைப்புக்காகச்செய்யும் புரட்டுகளில் மந்திரமு மொன்றென்றும், இதை ஆக்ஷேபிப்பவர்கள் சில நிபந்தனைகளின்பேரில் தங்கள் மந்திரசக்தியை காட்டலாமென்றும் வெளியிட்ட விஷயத்தை வாசித்தறிந்த நேயர்கள் அதன் முடிவுஎன்ன ஆயிற்றென்றறிய ஆவலுள்ளவர்களாயிருப்பார்களென்று அனுமானித்து முடிவைக்கூறுகிறோம்:—

கொழும்பு ஹல்ஸ்டோப்பு வீதியிலிருந்து 6-8-28-ல் ஒருவரும், வடமலை புரத்திலிருந்து 12-8-28-ல் ஒருவரும், நாள், நிபந்தனை முதலிய விபரங்களைத் தெரிவிக்கவேண்டுமென்று எழுதினார்கள்.

மேற்படி நேயர்களுக்கு என் நிபந்தனை விபரங்களையும் தெரியப்படுத்தினேன். அதாவது:— எதைமேலே செய்வதாயிருந்தாலும் அதற்குச் சம்பந்தப்பட்டவைகளையெல்லாம் முதலில், இடை, கடையாக எச்சமயங்களிலும் சந்தேகம் வரும்பொழுது நியாயமான வழியில் பரீக்ஷித்துக்கொள்வதென்றும் ரூபாய் 10 க்கு குறையாமல் 500 க்கு மேற்படாமல் நம்ம உத்தேசப்படி பந்தயங்கட்ட ஒருப்பட்டவேண்டுமென்றும் இவைகள் முடிந்தவுடன் நாள் குறிக்கப்படும் என்றும் பதில்கள் எழுதினேன். இவைகளுக்கு ஈறாக இதுவரை ஒருபதிலும்வரவில்லை.

இதிலிருந்தாவது மந்திரசக்தியானது மாயம் எவ்வாறிருக்கிறதென்றுநேயர்களுக்குவிளங்காமற் போகாது- இதைகடத்திக்காட்டயார்வந்தாலும் எக்காலத்திலும் வரவேற்கத் தயாராயிருக்கிறோமென்பதைத் துணிந்து கூறுகிறோம். இதனால் எங்களைச்சிலர் நாஸ்திகரென்று சொல்வது எங்களுக்குத்தெரியும்.

ஆதிதிராவிட கூட்டம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல்ஒருமணிக்குதிருநவத்தியூருக்கடுத்தசாத்தமாகர் திரு. சுப்பராயப்பிள்ளை கிருகத்தில், சாதமாகர், காக்கல், காத்தயாக்கம், முதலிய கிராமங்களில் வசிக்கும் ஆதிதிராவிடர்களின் மகாநாடு நடந்தேறியது-

"மான் பி. வாதாராஜ பாகவதர் "பஞ்சாயத்து" என்பதைப்பற்றியும் காந்திவாக்கம் ஸ்ரீமான் எல்லப்பதாஸ் "ஒற்றுமை" என்பதைப்பற்றியும் ஸ்ரீமான் எம்- எஸ். ஞானப்பிரகாசம் "கல்வி,ஒழுக்கம்,சீலம்" முதலான வைகளைப்பற்றியும் பேசினார்கள். வந்தனோபசாரம் கூறப்பட்டு புஷ்பம் பழம் தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது

சா. தங்கையா,

ராயப்பேட்டையில் பார்ப்பனீயம் ஒழிந்த அந்திக்கடன்

"நவசக்தி" ஆசிரியர் திரு- வி. கலியாண சுந்தர முதலியார் அவர்களின் தமையனார் திரு. உலகநாத முதலியார் புதல்வர் உ, பாலசுப்பிரமணிய... அவர்களின் இறுதிக்கடன 21-10-28-ல் பார்ப்பனரல்லாதபுரோகிதர்களைக் கொண்டு கைவல்ய முறைப்படி நடத்தப்பட்டது. என்று ராயப்பேட்டையிலிருந்து ஒரு நிருபர் எழுதுகிறார்.

அந்திராவிட கூட்டம்.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று பிற்பகல்ஒருமணிக்குதிருநவத்தியூருக்கடுத்தசாத்தமாகர் திரு. சுப்பராயப்பிள்ளை கிருகத்தில், சாதமாகர், காக்கல், காத்தயாக்கம், முதலிய கிராமங்களில் வசிக்கும் ஆதிதிராவிடர்களின் மகாநாடு நடந்தேறியது-

"மான் பி. வாதாராஜ பாகவதர் "பஞ்சாயத்து" என்பதைப்பற்றியும் காந்திவாக்கம் ஸ்ரீமான் எல்லப்பதாஸ் "ஒற்றுமை" என்பதைப்பற்றியும் ஸ்ரீமான் எம்- எஸ். ஞானப்பிரகாசம் "கல்வி,ஒழுக்கம்,சீலம்" முதலானவைகளைப்பற்றியும் பேசினார்கள். வந்தனோபசாரம் கூறப்பட்டு புஷ்பம் பழம் தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது

சா. தங்கையா,

அதற்குகாம் கூறுவதாவது, ஆஸ்திகம் நாஸ்திகம் என்பவைகளின் உண்மைப்பொருளே தெரியாதழலும் பண்டிதர்களென்போர் முதல் ஆஸ்திகம் நாஸ்திகம் என்ற பேய்பிடித்தலையு மனிவருக்கும் இன்னுமொன்று கூறுகிறோம் அதாவது.

பழனி கோஷ்டீரத்தில்

பழனிபாண்டவரின் சக்திபால் அனேக அற்புதங்கள் நடப்பதாகச் சிலபேர்கள் நினைத்திருப்பதாகத் தெரிகிறது. அதாவது கோழி, மச்சம் சர்ப்பம முதலியவைகளை அறுத்து சமையல் செய்து காவடி கட்டிக்கொண்டுபோய் பழனி சன்னிதானத்தின் முன் பூஜைசெய்து காவடியை அவிழ்த்தால் மேற்படி பிராணிகள் உயிர்பெற்று விடுகின்றனவென்று சொல்லுகிறார்கள். மேற்படி மகிமைகளை முதலிலிருந்து கடைசிவரையிலும் எந்தகோஷ்டிஸ்திரத்வானாலும் நமக்குத்தெரியும்படி யாராவது செய்துகாட்டினால் அவர்களுக்கு ரூபாய் 100 சன்மானமளிப்பதுடன் காலும் அன்றுமுதலே ஆஸ்திகமதமென்னும் (சான்திக)மதத்திற்கு வந்துவிடுகிறோம்.

தவிர திரு. ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் எற்பட்டசுயமரியாதையியக்கத்தைத்தடுப்பதற்கு எந்தச்சாமியாவது பூசாரியாவது அவதாரமெடுத்து அவஸ்யமாதப்படவேண்டிய அவசியமில்லை.மேற்படி மகிமையை நடத்திக்காட்டினால் சுயமரியாதைக்காரர் யாவரும் அதே நிமிடத்தில் இந்துமத (பொய்மத)த்தையும் தூக்கியெறிந்து ஆஸ்திகர்களாகிவிடுவார்கள். ஆகையால் மதப்பேய், சாமிப்பேய்,மூடபக்திப்பேய்பிடித்தவராவது இவ்விஷயத்தை நடத்திக்காட்டும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்.

தொ. அ. லி. ஏகாம்பர பண்டாரம்.
தாதகாபட்டி அஞ்சல் செட்
சஞ்சீவிராயன்பேட்டை, சேலம்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பல வழக்குகள் நியாய மன்றங்களில் தொடுக்கப்பெற்றன அன்றோ? இதற்கு ஒன்றுஞ் செய்யாமல், "சமயாச்சாரியர்களுடைய புகழும் அவர்கள் அருளிய தேவாரதி அருட்கடாக்களும் அழிக்கப்படும் நிலையில் சுயமரியாதைப் பிரசாரகர்கள்நடந்து கொண்டால் நான் என்னுடைய உடலைச் சதை சதையாக வெட்டித் தந்தேனும் அதைக்காப்பாற்று வேன்" என்று சிலஅன்பர்களிடம் இயற்கை தேவியை வழிபடும் ஆசிரியர் செப்பினராம். உண்மையாய் அவ்வாறு செய்யப் பெறின் நான் அவர்களுக்கு கலியுக சிபிச்சக்கிரவர்த்தி என்ற பட்டத்தைக் கொடுக்க பின் வாங்கமாட்டே னென்பதை இப்பொழுதே கூறிவிடுகிறேன். ஆனால் தேவார திருவாசக வழக்கு நடந்த காலத்திலும் அதன் பிறகு இந் நாள்வரையிலும் மடி ஆசிரியரும் தேவாரப்பற்றுள்ள பெரியோர்களும் என்ன செய்தார்கள்? பேச்சுடனும் எழுத்துடனும் தானே நின்றுவிட்டார்கள்.

சைவப் பெருமக்கள் நிறைந்த திருநெல்வேலி கோவில்களிலும் கூட அம்மையாருக்கு பார்ப்பனத்தாலியும் தணிக்கட்டுடன் தாலி அணிந்து அலங்கரிக்கப்படுகிறது. உருவக்கடவுளுக்குத் தான் உருவாருவக் குறியாகிய இலிங்கத்திற்கும் பூணூல் அணிந்துதானே அலங்காரித்திருக்கிறது. இதை பூணூல் அணியாத சைவர்களும் தமிழ்த்தாலி கட்டியிருக்கும் பெண்மக்களும் போற்றிப்புகழ்ந்துதானே வருகிறார்கள். இதுபோன்றவைகளெல்லாம் சமயப்பண்டிதர்களின் 'நுண்ணறிவு' க்குப் புலனாகவில்லையே?

அறிவிற்கும் சுயமரியாதைக்கும் முரண்பாடில்லாத நூல்களையோ, இன்பம் அடையும் வழிகளைப் போதிக்க வந்த பெரியார்களையோ, அவர்கள் இயற்கை வனப்புக்களை நினைந்து நினைந்து உருகிப்பாடிய உயர்ந்த பாசுரங்களையோ சுயமரியாதைத் திருக்கூட்டத்தார் எப்பொழுதும் ஏற்றக்கொள்ளாமல் மதிப்பதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆனால் கடவுளால் கூறப்பட்ட நூலாயிருப்பினும் மனிதத்தன்மைக்குச் சிறப்பளிக்கும் பகுத்தறிவைக்கொண்டு ஆராயாமல் குருட்டுநம்பிக்கையாய் பின்பற்றக் கூடாதென்பதுதான் சுத்தசுயமரியாதைத்திருக்கூட்டத்தாரின் உயரிய கொள்கையென்பதை நினைவூட்டுகிறேன்.

இனியேனும் சைவம் சுயமரியாதைக் காரர்களால் அழிந்துவிடுமென உளப்புழுங்கி மனங்கரைந்து கண்ணீர்விட்டு அலறிப் பல பல பேசிய புலவர்களும் சைவர்களென்போர்களும்சீர்திருத்தக்காரர்களைக்குறைகூறி ஆத்திரப்பட்டுபேசிஎழுதிவிடுவதோடு நின்றுவிடாமல் மேற்காட்டியது போன்றகுறைகளை எல்லாம் கலைந்தெரிந்து பயிற்சனீயப படுமோசதனை முற்றுமொழித்து மாசில்லாத உண்மைச்சமயத்தை நிலைநாட்டு விக்கும்படி செய்ய விரும்புகிறேன்.

சுயமரியாதை பெற்றால் சுயராஜ்யம் பெறலாம்.

தீபாவளியில் சீனவெடி சுடுதல் இந்துமத தர்மமா? அல்லது மோக்ஷ சாதனமா?

இந்தியநாட்டில் கொண்டாடப்படும் தீபாவளி பண்டிகையையும் அதைச்சிறப்பிக்கும் சீனவெடியையும் தீபாவளிக்குச் சான்றுபகரும் புராணக் கதைகளையும் நன்குணர்ந்துள்ள தமிழ் மக்களுக்கு அவைகளை மீண்டும் அறிமுகப்படுத்த விழைகின்றேனில்லை. எனினும் தீபாவளியில் சீனவெடி சுடுதல் இந்துமத தர்மமா? அல்லது மோக்ஷ சாதனமா? என்ற வின்னஞ்சிற்குரிய வினாவை விரும்புவதுடன் பல லக்ஷ ரூபாய்களை கொடிப்பொழுதில் தீக்கிரையாகும் சீனவெடியின் வேட்கையை முற்றும் தவிர்க்க வேண்டுமென்பதே எனது உள்ளக் கிடக்கையாகும். இப்பண்டிகையை தமிழ்மக்களே ஆர்வத்துடன் வரவேற்று,எண்ணை தோய்த்து, மனதிற்குகந்த புது ஆடைகளை விதவிதமாய்ப்பு னைந்து, நாக்கிற்கினிய பலகாராதிகளை சுவையுடனுண்டு,சீனவெடியின் டப் டப் சங்கீதத்தில் மெய்மறந்து பண்டிகைக்கென பலநாள் வளர்த்து கதறக்கதற கழுத்தறுக்கப்பட்ட ஆட்டுக்கிடாவின் இறைச்சியை பக்குவமாய் சமைத்து, புளித்தமாவிலை யிலை தோசையுடன் வயிறு புடைக்கப்புசித்து ஏப்பமிட்டு இன்புற்றுமகிழ்வடைகின்றோம். அன்றே மான்செஸ்டர் லங்காஷையரின் ஆலைச் சொந்தக்காரர்கள் இந்தியநாட்டிற்கு வாழ்த்துரைகூறி குதூகலிக்கும் நந்நாளை னக்கூறுதல் உயர்வுநற்சியாகாது. இந்திய மக்களின் பகிப்பிணியை அறியாத சகோதாசகோதரிகளுக்கு நான் செய்துகொள்ளும் விண்ணபபம்யாதளது?

தீபாவளி பண்டிகையில் சீனவெடி விளையாட்டாய் சுடப்படுகின்ற தெனினும் நமது அறியாமையினால் பல லக்ஷரூபாய்கள் அவலமாய் தீக்கிரையாக்கப்படுகிறதென்பதை தமிழ்மக்கள் மறக்கமுடியாது. ஆதலால் சுயராஜ்ய நிட்டமிடும் "தேசிய வீரர்"களும் மக்களின் அறியாமையை யகற்றும் "சீர்திருத்தக் காரர்" களும் "இந்துமதக் காப்பாளர்" களின் சீற்றதிற்கு அஞ்சாது ஆண்மையில் வரும் தீபாவளிக்கு சீனவெடியை சுட்டு காசை கரியாக்காதிருக்குமபடிக்குபத் திரிகைகளின் மூலம் பிரசாரம செய்யுமபடி கும் அறைவயிற்றுக்கஞ்சிக்கு அவதிப்படும் இந்தியநாட்டின் சேய்களாபனைது ஆருயிர் சகோதர சகோதரிகளையும் சீனவெடியை அறவே ஒழிக்கும்படிக்குமண்ணைப்பித்துக கொள்ளுகிறேன்.

சொ. பெத்தின சபாபதி, சிங்கப்பூர்.

எனக்கோரை

திருபபிச்சைமுத்து ராஜா

சென்ற வாரம் தமது பாடடியார் இறந்தபதினேந்தாவது நாளை பார்ப்பனீய மின்றித் தாமே செய்து தன் பாட்டியாரைத் துதித்து நண்பர் பருடன் விருந்துண்டார்.

சோழவந்தான்

தேசிய தர்ம பள்ளிக்கூட கமிட்டியின் 1927-1928-ம் வருஷ அறிக்கை

நோக்கம்

நிர்மாண வேலை திட்டங்களில் ஒன்றாகிய கல்வியை யாங்கள் ஊட்டவேண்டி நாட்டங்கொண்டு இவ்வூரில் 1924-ம்ஆ செப்டம்பர்மீ 4உ முதற் கொண்டு இந்நான்காண்டுகளாக இனிது நடத்திவந்துள்ளோம்-

இப்பள்ளியில் 62 மாணவர்கள் (மூன்று வகுப்புகள்) கடைபெற்று வருகின்றனர்- இடபள்ளியில் பயிலும் மாணவர்களிடம் யாதொரு ஜாதியமும் பெருமலே ஜாதிமதபேதமின்றி கல்வி போதிக்கப்பட்டுவருகிறது- இடம், பொருள், ஏவல், என்னும் சாதனங்கள் போதுமானவைகளாக யில்லாததினால் அதிக மாணவர்களைச்சேர்க்கமுடியாமலிருக்கிறது- இக்குறை நீக்குவான் வேண்டி உலக மக்களை உதவி புரியவேண்டுகின்றோம்-

பாடங்கள்.

சரித்திரம், கணிதம், எண்சுவடி, நீதிவாக்கியங்கள், தேசிய கீதங்கள், திருக்குறள் முதலியனவும், பஞ்சுப்பட்டை போடுதலும், நூல் நூற்றலும் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

உண்டியல்

இவ்வூரின் கடைகளிலும் ரயில்வேயிலும் வழக்கம்போல் தினசரி உண்டியல் வசூலிக்கப்பட்டு வசூலாகும் தொகையை அவ்வப்பொழுதுபவலோர்களறியும் படிக்கு பள்ளியிலேயே உண்டியலுடைத்து அது சமயம் ஆஜராயிருப்பவர்களின் கையொப்பமும் வாங்கப்பட்டு ஷை தொகையைக் கொண்டு பள்ளிக்கூடம் நடத்தப்பட்டு வருகிறது-

வருடவிழா

மூன்றாவது வருடவிழா 25-9-27-ல் மதுரை நகரபரியாலன சபைத்தலைவர் ஸ்ரீமான் ஆர் எஸ் நாயுடவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது-

வந்தனம்

நிறுகச்சிறுகப்பொருள் கொடுத்துதவும் இவ்வூர் வியாபாரி கட்சும், பள்ளி நடத்துவதற்கு இடங் கொடுத்துதவி வரும் கோவிலின் சொந்தக்காரர் கட்சும், மாதமாசம்கணக்குகளைப் பார்வையிட்டு வரும் கௌரவ கணக்குப் பரிசோதகர் ஸ்ரீமான் சொ இராமசாமிநாயுடவர்களுக்கும்,மூன்றாம்விழாவிற்குத் தலைமைவகித்த ஸ்ரீமான் ஆர் எஸ் நாயுடவர்களுக்கும், விழாஅழைப்பிற்கிணங்கிஇங்கு விஜயம்செய்தமற்றகனவான்கட்கும்பயில்வேயில்உண்டியல் வசூல்செய்த ஸ்ரீமான்கள் அழகர்சாமி, கோபால்சாமிநாயுடவர்கட்கும், மாணவர்களுக்குப்பரிசளிக்க புத்தகங்கள் கொடுத்துதவிய மதுரை ஸ்ரீமான்கள் இ மா கோபாலகிருஷ்ணசோன், முகிருஷ்ணபிள்ளை, எஸ் கூடலங்கம்பிள்ளையவர்களுக்கும்,தன்கொடையளித்த கனவான் கட்கும், பள்ளியின் உபாத்தியாயராகிய ஸ்ரீமான் முத்தின்னச்சாமி பிள்ளையவர்கட்கும் இக்கமிட்டியார் தங்களது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறார்கள்-

விசேஷ உதவி

இப்பள்ளிக்கு நிலையான நிதியொன்று சேர்க்க பொதுஜனங்களின் விசேஷ உதவியை இக்கமிட்டியார் எதிர்பார்க்கிறார்கள்

குறிப்பு

இப்பள்ளியில் ஜாதிமத பேதமன்னியில் கல்வி கற்பிக்கப்படுகிறது. இப்பள்ளியின் வரவு செலவு கணக்குகளையும் நடவடிக்கைகளையும் பொதுஜனங்கள் பள்ளியின் எந்தநேரங்களிலும் பார்வையிடலாம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மத சம்பந்தமில்லாமல் தமிழிலக்கியங்களை வளர்க்கவேண்டுமென்பதே எங்கள்கொள்கையாகும். மதசம்பந்தமற்ற பத்துப்பாட்டு புறநானூறு அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை ஐங்குறுநூறு திருக்குறள் முதலியதமிழ் நூல்களைப்போன்ற நூல்களால்தான் தமிழ்மொழியைச் சிறப்பிக்கமுடியும்.

மதசம்பந்தமான விஷயங்களைக்கூறி மக்கள் மனத்தில் குறுகிய நோக்கத்தைப்புகுத்தும் நூல்களையெல்லாம் கண்டிப்பதில் ஒருநிதம் பின்வாங்கமாட்டோம்.

சைவசமயித்தாராகட்டும் வேறு எச்சமயத்தாராகட்டும் தங்கள் மதத்தையும் மத நூல்களையும் வைத்துக்கொண்டு பிறரை யெமாற்றலாமென்று நினைப்பதை மறந்துவிட்டு உலக நன்மைக்கான செயல்களில் ஈடுபடுவதே எற்றதென எச்சரிக்கை செய்கின்றோம்.

மதத்தையும், புராணங்களையுங் கட்டிக்கொண்டழும் பண்டிதர்கள் பள்ளிக்கூடத்திற் படிம்பாடுகளை நாம் நன்றாய்ப் பழகியறிந்திருக்கின்றோம்.

ஆகையால் பண்டிதர்களே! சமயப்பற்றுடையவர்களே! மதத்தின் பெயரால் வயிறுபிழைத்துகின்றவர்களே! நீங்கள் எதிர்ப்பதனால், சுயமரியாதை இயக்கத்தையும் அவ்வியக்கத்திற்குழைக்கும் குடிஅரசு திராவிடன் முதலிய பத்திரிகைகளையும் ஒருகாலும் அழிக்கமுடியாதென எச்சரிக்கை செய்கின்றோம்.

"கலையுணர்ந்த கற்பனைகள் நிலையெனக்கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக" என்று கூறும் இராமலிங்கசாமிகளின் பாடலை உணருங்கள். நூல்களிற் கூறுவனவற்றை உங்கள் பகுத்தறிவினால் ஆராய்ந்துணர்ந்து, உண்மையானவற்றை, இக்காலத்திற்கு ஏற்றனவற்றை, உலகம் இன்புறுதற்கான நல்ல செய்திகளை உலகினர்க்குக் கூற முன்வருமாறு பண்டிதர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம்.

அறிவிப்பு.

"குடி அரசு" வாரப் பத்திரிகையின் மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

வருட சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் மூன்று தான். வெளி நாடுகளுக்கு ரூபாய் நான்கு.

மானேஜர்.

சகலமேக சஞ்சீவி.

தங்கம் சேர்ந்தது. அநேக மெடல்கள், பரிசுகள், பத்திரங்கள் பெற்றது. பல காரணங்களாலுண்டான வெள்ளை, வெட்டை, நீரடைப்பு, பவுத்திரம், நீரழிவு, கண்டமாலை, சூலைநீர், பற்றுவால், கிரந்தி, கட்டிகள், கருமேகம், வெண்மேகம், ஆதாரணம், புத்து, பீநிசம், கபாலநீர், இளைப்பு, காசம், குன்மம், சூதகசம், கண் வியாதிகள், வாதநீர்கள் முதலியன 7 நாள் மருந்தில் நிச்சயமாகக் குணமாகும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி 1-க்கு ரூ. 5—0—0.

கல்நார் பற்போடி டஜன் 1-க்கு ரூ. 2½

சி. எம். சாமி,

திதித்யானந்த வைத்தியசாலை, பழநி S I

தமிழ் நாடெங்கும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

"ஆனந்தகுணபோதினி"

ஆடிமாதமுதல் ஆங்கில மாத ஞ்சிகைகளையோப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு) வெளிவருகின்றது (3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S G ராமானுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான ஸ்தானம் இப்பத்திரிகையொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜகதோபகாரினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விசுடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஞான தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதார்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான்; இதற்கு சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,

அமிர்தகுணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

மதனகாமேஸ்வர லேகியம்.

வீர்யவிர்த்திக்கு நிகரற்றது. உத்திரவாதமுள்ளது.

ரமமாக சாப்பிட்டுவந்தால் தாரித ஸகலிசம், சொற்பன ஸ்கலிதம் முதலியன நீரும். ர்த்துப்போன இந்திரியம் கெட்டிப்படும். குறைந்துபோன இந்திரியம் விருத்தியாகும். தளர்ந்துபோன நரம்புகள் உரத்துப் பெருத்து முறுக்கேறி ஜனனேந்திரியக் கருவிகள் பருத்துப் பலப்படும். தம்பன சக்தி உண்டாகும்.

20 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் விலை ரூ 2—8—0 தபால்செலவு பிரத்யேகம்.

சித்தனவைத்தியசாலை, ஆனந்தநிலையம், திருச்சங்கோடு. S. I.

திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.

நூதனமாகக் கண்டுபிடித்துத் தயாரித்துவரும்

கைதையல் மிஷின்.



இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த நூதன மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் பணம் சம்பாதிக்க முடியும். இதனால் கை குட்டைகள், ஜாக்கெட்டுகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணிகளிலும் மல்துணிகளிலும் புஷ்பங்கள் முதலிய சித்திர வேலைகள் செய்யலாம். கவரத்திரிக்காகப் பெரிய பொம்மைகளுக்கு உங்கு அலங்காரம் செய்ய உதவும்.

உறுதியான மெஷின் ஐம்பதுவருஷமாலுலும் கெடாது.

விலை ரூபாய் 4—15—0 தபால் செலவு இனம்.

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி.

தபால் பெட்டி 119, மதராஸ்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நியாயமான, சமத்துவமான, எல்லாரையும் விரும்பும் படியான எல்லாரிடத்திலும் குடி கொள்ளும் படியான சரஸ்வதியைப் பூசிக்கும் பக்தர்கள் பிடுங்கிக் கொள்ளுவார்கள்.

சரஸ்வதியாலும் லெட்சுமி விலாசமும் பார்வதி மண்டபமும் கட்டி வைத்த தஞ்சாவூர் மகாராஜா குடும்பம் எங்கே? தப்பித்தவறிஇருந்தின அந்த வம்சத்திற்கு ஒரு டிப்டி சூப்பரிண்டெண்டு வேலைக்குக் கூட எவ்வளவு கஷ்டமாகவிருக்கிறது! காரணமென்ன? வீண் பூசைகளும் கோவில் கும்பாபிஷேகமுமல்லவா! அவர்கள் செய்த பிராமணபோஜனமும் தெக்ஷணையும் கோவிற்பூசையும் என்ன பயனை அளித்தது? சரஸ்வதிபூசையன் தொலுவால் அல்லவா நாயுகளின் ஆசாகஷி தஞ்சாவூரில் ஒழிந்தது? கிளைவும் டுப்ளேயும் எந்த சரஸ்வதியைப்பூசித்தார்கள். அவர்கள் முயற்சியும் கடமையும் எந்த கஷ்டத்திலும் செய்து முடிக்கும் தைரியமும் இருந்தால் எலலா லெட்சுமியும் அல்லே வந்து சேர்வார்கள். இதுவே உலக அனுபோகமும் சாஸ்திரத்தின்கருத்துமாகும்.

தாழ்த்தப்பட்டவர்களே சகோதரரா
கவும் சமத்துவமாகவும் கடந்துப்வரை
சுயராஜ்யம் கிடைப்பதை அரிது.
விரய்யா.

'ரிவோல்ட்' 'ரிவோல்ட்'

'REVOLT'

"குடி அரசு"ன் கொள்கையைக் கொண்டு கூடிய சீக்கிரம் வாரம் தோறுமுறை வெளியாகும் ஓர் ஆங்கிலப் பத்திரிகை.

வருட சந்தா ரூ. 3 தான்.

ஈ. வெ. ராமசாமி நாயக்கர்.

ஆசிரியர்.- "குடி அரசு" & "ரிவோல்ட்,"

ஈரோடு.

பால்காயம் 12 தோலா ரூபா 1.
ரப்பர்ஸ்டாம்பு செட்டுடன் ரூ 2.

மித்தளை அரக்கு சில் ரூ. 1—0—0.
கேட்லைக்கு எழுதிக் கேட்கவும்.
போஸ்டேஜ் இலவம்.
டி. ஜி. சுந்தரம் அண்டு கோ.,
சோலிங்கப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

நிமிஷக்கணக்கில் ரணம் ஆடையுதை விட்டு என் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனை செய். ஆச்சர்யமிவர்ந்தீ!!

வாசகாச நிவாரணி.

வியாத்தகணக்கான பேர்கள் தொடர்ந்து உபயோகித்திருக்கிறார்.

தீண்டகால சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழாய், மார்பு, தொண்டை இவைகளில் உண்டாகும் சலவித கஷ்டங்களையும் நமது ஆஸ்த்மா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன், இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சுவிடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசிதீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும், இராத்திரியில் கன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1-க்கு ரயில் ரூ. 1—4—0 உள்நாட்டுக்கு தபால் செலவு 0—4—0.

புரோப்ரைட்டர் - தீருநாவுக்கரசு வைத்தியசாலை,
செவ்வாய்பேட்டை, சேலம். (தென் இந்தியா.)

ஆச்சர்ய ஜோதிடம்.

இந்தியாவெங்கும் ஏகோபித்த அமோகம் பெற்றது.

உங்கள் காரியான எதிர்கால பலனைத் தெரிந்து பதில் எழுத 5 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் தனிக் கேள்விகளுக்கும் அணு 4. ஒரு வருஷம் மாதலாரியாகப் பலன்கள் எழுத ரூ. 2. கஷ்ட்ட ஜாதகம் யெழுத ரூ. 35. சுடிதம் எழுதும்போதுள்ள சேத்தையாவது ஜாதகக் குறிப்பையாவது குறிப்பிட்டு எழுதவேண்டியது.

அபவரப்ரசாத ரகசிய 1-க்கு ரூ- 2—8—0.

இந்த ரத்னகை ஓர் மூலிகை சம்மந்தமான து. சாஸ்திர முறைப்படி தயார் செய்தது. இதன் சில முக்கியமான குணங்கள் வியாபார விர்த்தி, உத்தியோக உயர்வு, அதிகார்களின் விஸ்வாசம், வியாஜ்ஜியத்தில் ஜயம், விரோதிகள் சகீகரம், இன்னும் நாம் கீனைத்த காரியங்கள் ஜயம். வி. பி. பி. சார்ஜ் வேறு.

குறிப்பு;— வெளிநாடுகளில் இருந்து ஆர்டர் செய்யும் நண்பர்கள் முன்பணமாக அனுப்பவேண்டியது.

மேனேஜர், ஸ்ரீ சிவசுப்ரமணிய ஜோதிடாலயம்,
திருத்தணி, சித்தூர் ஜில்லா. (தென் இந்தியா)

எங்கள் விசேஷகுறைந்தவிலை விற்பனை
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல்களைக்கெடியாரங்கள்.



இதிற்சண்டபடி எந்த வேஷ்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல்இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இலவமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5வருஷம் உத்திரவாதம். ரூ 4-15-0 வி. பி. வேறு

ஜூனன் வாட்சு கம்பெனி
மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

80 வருஷ காலமாக உலகப்பிரசித்தி பெற்ற
அசல் ஷண்முகம் பட்டணம் பொடி.
காரம், மணம், நிறம், வாடை, குணம் அமைந்துள்ளது எங்கள் உலகடிரேட்மார்க் பார்த்துவாங்குங்கள்
(V. 120) ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி லிமிடெட்,
போஸ்டு பாக்ஸ் 140, மதராஸ்.

நான்காம் பதிப்பு! நான்காம் பதிப்

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டிங். சுமார் 400 பக்கங்கள் கொண்ட பெரிய புஸ்தகம். நேர்த்தியான அச்சு.
கல்லை இளைஞர் காங்கிரசில் பரிசிடப்பட்டிருக்கிறது. ஆங்கில அமெரிக்க ஆர்டிஸ்டுகள் படங்களுடன் கூடியது.



இந்த ஏரோப்ளேன் டிரேட் மார்க்பார்த்து வாங்குங்கள். இந்த டிரேட் மார்க் இருந்தால்தான் உண்மைப் புஸ்தகம்.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1 துறவிகளின் கதி என்ன
2 இல்லாழ்க்கை என் சிறந்தது.
3 இல்லறத்திலிருந்து மோகூமடைவதெப்படி.
4 இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும் பாடு.
5 பெண்ணின் பெருமை. பெண் கல்வி.
6 காணம் எப்படி உண்டாயிற்று?
7 உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8 நாம் என் உடை தரிக்கவேண்டும்?
9 நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன
10 இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்.
11 ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன. உண்மையான கலியாணம் எது.
12 காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13 இல்லறத்தில் எப்படி வெற்றியடைவது?
14 மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15 கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16 தமக்குச் சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டு கொள்வது?
17 ஸ்திரீகளுக்கு எப்பொழுது காமம் உண்டாகிறது?
18 அவர்களிடத்தில் அமிர்த நிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19 பல ஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20 சங்கமம் செய்யவேண்டிய காரும் காழிகையும்.
21 ருது வாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22 பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்குக் காரணம். இதைப் போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23 மனம்போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24 கருவிலிருப்பது ஆணு பெண்ணு என்று எப்படி அறிந்து கொள்வது?
25 கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் கடந்துகொள்ளவேண்டிய முறைகள்.
26 கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக் கூடிய வியாதிகள்.
27 அவைகளைப் போக்கடிக்கும் உபாயங்கள்.
28 முதல் மாதத்திலிருந்து கடைசி மாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29 ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப் போக்கடிக்கும் விவரம்.
30 புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் என் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது. இதைப் போக்கிக் கொள்வதெப்படி,
31 அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத் தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்கமுடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசுக் கொலை அநியாயம்.
32 ஒருவன் எத்தனை மாதரை மணம்புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக்காப்பாற்றிக் கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறுமை கொண்டு மகிழ்ந்திருக்கவேண்டுமானால் அவன் எப்படி நடந்துகொள்ளவேண்டும்.
33 தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா. தாசிகள் வீடுபோகும் நண்பர்களுக்கு நாம் சொல்லக்கூடிய நிவார்த்திகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லியுள்ள விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

விலை ரூபாய் 2-0 0.

ஒரே சமயத்தில் இரண்டு காபிகளுக்கு மேலுள்ள உள்நாட்டுக்கு தபால் செலவு இலவம்.

வாலன் புஸ்தகசாலை,

241, தங்கசாலைத் தெரு, தபாற் பெட்டி நெ. 119 ஜி.டி. மதராஸ்.

64 — பக்கம் — 64

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளி வரும் என்பதை சந்தா நேயர்களுக்கு வெகு சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகள் அதிகமாக வெளி யிடப்படுகின்றன. தினமும் நூற்றுக்கணக்கானவர் சந்தாதாராகச் சேருகின்ற னர். மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் "ஆனந்த விகடன்" சிறந்ததென்ற அபிப்பிராயம் ஜனங்கள் மனதில் ஊன்று பதிந்திருக்கிறது. "ஆனந்த விகட"னிலு ள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு
தபால் கூலியுள்பட ... 1...0...0
வெளி நாடுகளுக்கு முன பணம் ரூ ... 1...4...0

மாதிரி காபி இலவம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244. தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்". டெலிபோன் நெ. 3311.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமு கர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்போர்ப்பட்டதல்ல. அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக் ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த் துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்த ரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ. 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பேட்டி 119, ஜி. டி. மதராஸ்.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA



சொம்பவும் குறைந்த விலை ரூபா. 2—15—0

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதி தாகச் செய்யப்பட்டது. எக்காலத்திலும் தெளி வான போடோபிடிக்கலாம். இந்த காமிராவை வாங்கி தூர தூரப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டனர். போ டோவின் அளவு 3½ x 2½ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சா மான்களுடனும் அனுப்பப்படும். சிறிது நாளுக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூ. 2—15—0 தான் கொடுக்கப் படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி. மதராஸ்

'விஸ்வநேசன்'

விஸ்வகுல முன்னேற்றத்திற்கு
உழைத்துவரும் ஒரு
வாரப்பத்திரிகை

தற்கால நிலைமைக்கேற்ற வண்ணம் அபா துவான சீர்திருத்தக் கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டது.

ஆசிரியர் திரு. கா. சுப்பராணைச்சாரி

இதன் வருட சந்தா ரூ 3—0—0
வெளிநாட்டுக்கு ரூ 4—0—0

விலாசம்:— மானேஜர்,
விஸ்வநேசன் காரியாலயம், ஈரோடு.

தீபாவளி! தீபாவளி!!

நவீன கலர்புடவை.

உயர்ந்த மல்லில் பட்சை, புலூ, வயலெட் கருப்பு, செகப்பு, ஸ்நப் கலர்கள், கெட்டிச் சாயம, கையிலும், முந்தியிலும் பூவேலை மான முள்ள நூதன புடவை.

18 மு X 46 அங் புடவை ரூ. 4...14—0
வேடி கலர்களில் சாதா புடவை 4— 4—0

கைநிசவில் தபாரித்த உடல் செகப்பு, கருப்பு, பலமாதிரி புள்ளிகள் போட்ட ஜரி கை உத்தராட்சம் பேட்டுவைத்து 1 இஞ்சு ஜரிகை முந்தி போட்டது.

18 மு X 46 அங் புடவை 1க்கு ரூ. 7-0-0
வேடி ஜரிகை பெங்களூர் முந்தி போட்ட புடவை 1க்கு } 7-12-0

6th Edition கேட்லாக் இலவம்.
The Madura Oriental Trading Co,
Laxmi Cloth Store, Madura- (S. I.)

பொருள் செய்வகை.

(விலை ரூபாய் ஒன்று).

அநேக வியாபார தந்திரங்கள் அடங்கியிருக்கின்றன. தினுசுகள் விலையேறுவதும் இறக்குவதும் அறிவதற்கு தமிழில் முதல் புஸ்தகம் இதுவே. ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம்.

தேவி ஆஸ்ரமம்.
திருவொற்றியூர் அம்மன் கோவில் வீதி
புதுச்சேரி.

கணித சோதிடம்.

பாகித கணிதப்படி கணிதஞ் செய்து பலன் கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் துட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதிஅனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதிஅனுப் புவதைக்கொண்டு பெண்ணுக்குப்புருஷனும் புரு ஷனுக்குப்பெண்ணும் இன்னொன்று வெகு சுல பமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம அருமையான பூர்வீகசோதிட நூற்களும்பலவுள்ளதால் நாங்கள் எழுதிஅனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களா யிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக பலாபலனது கடிதம் எழுதும் நேரத் தையாவதுதெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,
முதலியார்பேட்டை, புதுச்சேரி.

ரூபாய நாகையாளாகளால, ஈரோடு "உண்மை விளக்கம்" பதிபடகததில பதிபபகபபடடமும வெளியிடப்பட்டது.